180
2237

மொழி வளர்ச்சி

Pv
N57
111025

தி.ஜ.ர

மொழி வளர்ச்சி

தி. ஜ. ர

இன்ப நிலையம்
மயிலாப்பூர் — சென்னை-4.

முதற் பதிப்பு : மார்ச், 1957.
பதிப்புரிமை : இன்ப நிலையத்தாரைச் சேர்ந்தது.

விலை ரூ. 2—0—0

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை—14.

முன்னுரை

தொடர்ச்சியாக இந்தக் கட்டுரைகளைப் பத்திரிகையில் எழுதி வந்த போது, பல பாராட்டுக் கடிதங்கள் வந்தன ; ஒன்றிரண்டு மறுப்புக் கடிதங்களும் வந்தன. பாராட்டியவர்களுக்கு வந்தனம்; மறுத்தவர்களை, புத்தக உருவில் மீண்டும் ஒரு முறை இந்தக் கட்டுரைகளைக் கூர்ந்து முழுவதும் படிக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்.

அப்போதப்போது தோன்றிய கருத்துக்களை நான் எழுதினேன்; கோவைப்படுத்தி முறையாக எழுதவில்லை. ஆகவே, ' கூறியது கூறல் ' என்ற குற்றம் இந்தத் தொகுப்பு நூலில் அங்கங்கே இருப்பதை நான் அறிவேன். ஆயினும், ' விக்கார் அவ் வேக்ஃபீல்டு ' என்ற நாவலின் முன்னுரையில் கோல்ட்ஸ்மித் கூறியதே போல, அந்தக் குற்றமே இந்தத் தொகுப்புக்கு ஒருவிதத்தில் வலியுறுத்தும் வலுவாக அமைந்திருக்கிறது என்பதாக நான் நம்புகிறேன். எனவே, கட்டுரைகளில் பல திருத்தங்கள் செய்தாலும், அடிப்படையான திருத்தம் எதையும் செய்யவில்லை.

' கல்வி அலங்கோலம் ' என்பது ' கலைமகள் 'ளில் வந்தது. ' ஹிந்தியும் ராஜாஜியும் ' என்பது ' மஞ்சரி 'யில் கையெழுத்திடாமல் தலையங்கமாக நான் எழுதியது. ' பொது லிபி-2, ' பொது லிபி-3, ' கடைசி முடிவுரை இந்த மூன்றும் இந்தப் புத்தகத்துக்காகவே புதிதாக எழுதியவை. மற்றவை எல்லாம் ' கலாவல்லி 'யில் தொடர்ச்சியாக வெளிவந்தவை. அந்தப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கெல்லாம் என் நன்றி உரியதாகும்.

முக்கியமாகக் ‘கலாவல்லி’யில் இந்தக் கட்டுரைத் தொடர் வருவதற்கு ஏதுவா யிருந்தவர் நண்பர் ஸ்ரீ க. சோமசுந்தரம் ஒவ்வோர் இதழுக்கும் நச்சரித்து இந்தக் கட்டுரைகளை அவர் வாங்கி வெளியிட்டார். அப்போது ‘கலாவல்லி’யில் அவர் துணையாசிரியராக இருந்தார். என் தம்பி போல் பழகுகிற அவருக்கு நான் எழுத்திலே வந்தனமோ நன்றியோ செலுத்துவது வெறும் வாசகமாக முடியும். எனக்கு நானே உபசாரம் பேசிக் கொள்வதா என்ன?

புத்தகமாக வருவதற்கு நண்பர் முல்லை முத்தையாவே மூலகர்த்தா. கட்டுரைகளை அவர் பாராட்டினர். எப்போதுமே என் எழுத்தைப் பாராட்டுகிறவர் அவர். அவருடைய அன்புக்குப் பதில் என் அன்பைத்தான் நான் செலுத்த முடியும்.

‘இன்ப நிலையம்’ அதிபர் இந்தக் கட்டுரைத் தொகுதியை மாறு பேசாமல் ஏற்று, விரைவில் அழகான புத்தக உருவில் வெளியிட்டதற்கு என் மனங்கனிந்த நன்றி.

என் அன்புக்கும் வணக்கத்துக்கும் உரிய காலஞ் சென்ற வ. ரா. அவர்களின் தமிழ்க் காதல் எத்தனையோ பேரை ஆட்கொண்டது போல என்னையும் ஆட் கொண்டது. அதுவே இந்தக் கட்டுரைகளை நான் எழுதத் தூண்டிய மூலகாரணம். தாய்மொழி என்பது எவனுக்கும் மூச்சுக்காற்று. அதுவே வாழ்வு தருவது; வளந் தருவது; வலிமை தருவது. தமிழ் மேலும் மேலும் சீருஞ் சிறப்பும் பெற்று என்றென்றும் வாழ்வதாக! இது நம்மை நாமே வாழ்த்திக் கொள்வதாகும். ஆம், நாம் வாழத்தான் வேண்டும்; வாழ்வோம்—எந்த இடுக்கணையும் கடந்து வாழ்வோம்.

18—3—’57 —தி. ஜ. ர.

கல்வி அலங்கோலம்

என்றோ ஒரு நாள் கேட்டிருக்கக்கூடிய அல்லது படித்திருக்கக்கூடிய ஒரு பழங்கதை சில சமயம் நமக்குத் திடீரென்று ஞாபகம் வரும். வருவது மாத்திரம் அல்ல; அதன் முழு அர்த்தமும் - ஏற்கனவே புலப்படாத நுட்பமான கருத்தும்-பளிச்சென்று துலங்க ஆரம்பித்து விடும். சமீபத்தில் இப்படி ஒரு பழங்கதை - ஒரு பழங் கதை என்ன, இரு பழங்கதைகள் என் நினைவுக்கு வந்தன.

ஒரு தர்க்க சாஸ்திரி இருந்தான். உலக விவகாரமே தெரியாத அவன் ஒரு நாள் கடைக்குப் போய் நெய் வாங்கிக்கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தொன்னையை எடுத்துக்கொண்டு கிளம்பினான். கடையில் நெய்யை வாங்கிக்கொண்டு திரும்பினான். தெய்வ கிருபையால் இதுவரையில் எல்லாம் ஒழுங்காய் நடந்தது. என்ன இருந்தாலும் மெத்தப் படித்த புத்திமான்

அல்லவா ? நடுவழியிலே அவனுக்குப் பிரமாதமான ஒரு சந்தேகம் எழுந்தது.

'இதோ நம் கையிலே தொன்னை இருக்கிறது ; நெய்யும் இருக்கிறது. இந்த நெய்க்குத் தொன்னை ஆதாரமா ? தொன்னைக்கு நெய் ஆதாரமா ? இரண்டும் ஒன்றுக்கு ஒன்று ஆதாரமா ? வேறு விதமா ?' என்றெல்லாம் தர்க்க சாஸ்திரியின் மூளையில் சாஸ்திரீயமான பல கேள்விகள் உதயமாயின. உடனே அவன் நடு வீதியிலேயே தன் சோதனையைச் செய்து முடித்தான். இதுவரைக்கும் தொன்னைக்கு மேலே நெய் இருந்தது. ஆனால், அதைக் கொண்டு நெய்க்குத் தொன்னைதான் ஆதாரம் என்று எப்படிச் சொல்ல முடியும் ? தென்னை மரத்தில் காம்புக்குக் கீழே தேங்காய் தொங்குகிறது. அதைக் கொண்டு, காம்புக்குத் தேங்காய்தான் ஆதாரம் என்று சொல்ல மாட்டோம். ஆகவே, சாஸ்திரி தன் கையில் இருந்த தொன்னையைக் கவிழ்த்துப் பார்த்தான். நெய் யெல்லாம் கீழே ஊற்றிவிட்டது. "ஆஹா ! கண்டேன் ! கண்டேன் !! நெய்க்குத் தொன்னையே ஆதாரம் !" என்று களி பொங்கி வெறுங்கையனாய் வீடு போய்ச் சேர்ந்தான்.

இந்தக் கதையும், முகமத் பின் தோக்ளக் தலைநகர் மாற்றிய சரித்திரக் கதையும் நிச்சயம் நடந்திருக்கக் கூடியவையே என்று இப்போது எனக்குத் தோன்று கிறது. இவை ஏன் நடந்திருக்க முடியாது ? இப்போது நடக்கும் சில நிகழ்ச்சிகளையே பாருங்கள். இன்று நம் குழந்தைகளின் கல்வி விஷயத்தில் கல்வித் தலைவர்கள் என்ன செய்துகொண் டிருக்

கிறார்கள்? சில புதிய கல்விப் பரிசோதனைகளைத் தான் திடீர் திடீர் என்று செய்துகொண் டிருக்கிறார்கள். அவற்றைப் பார்க்கும்போது, அவர்களுடைய மனத்தில் என்னவோ சில சந்தேகங்கள் ஏற்பட் டிருக்கவேண்டும் என்றே நாம் நினைக்கவேண்டி யிருக்கிறது. ஒன்று: குழந்தைக்குப் படிப்பு ஆதாரமா? படிப்புக்குக் குழந்தை ஆதாரமா? இரண்டு: ஊற்றைக் கலக்கினால், மறுபடியும் நீர் தெளியும்; குழந்தையின் மனத்தைக் கலக்கினால், அதற்குப் பைத்தியம் பிடிக்குமா? பிடிக்காமலே குழந்தை தப்பித்துக் கொள்ளுமா? மூன்று: குழந்தைக்கு அறிவுப்பசி ஏற்படாமல் தடுக்க என்ன என்ன முறைகளைக் கடைப்பிடிக்கலாம்? - இந்த மாதிரி தான் பல சந்தேகங்கள் அவர்களுக்கு உண்டாகி யிருக்க வேண்டும்.

ஜனநாயகம் அழகாக நடக்கவேண்டுமானால், மூலை முடுக்கெல்லாம் மக்களிடம் ஆரோக்கியமான கல்வி பரவ வேண்டும். எந்த ஒரு தனி மனிதனுக்கும் எக்காரணத்தைக் கொண்டும் அவன் விரும்பும் துறையில் கல்வியை மறுக்கலாகாது. இன்று தமிழ்நாட்டில் இந்த இரண்டு விஷயத்திலும் விபரீதமே நேர்ந்திருக்கிறது. காலேஜ்களில் சேர வரும் மாணவருக்கும் இடம் இல்லை; அதே போல் ஆரம்பக் கல்வி வகுப்புக்களில் பயில வரும் குழந்தைகளுக்கும் இடம் இல்லை என்கிறார்கள். படிக்க இடம் இல்லை என்கிறார்கள். படிக்க இடம் அளிப்பதிலே கூட வகுப்புவாதம் வேறு நுழைகிறது. நமது பிரச்னை என்ன என்று ஜனங்கள் தெரிந்துகொள்ள முடியாதபடி அவர்களுடைய மனத்தைக் குழப்பி ஏமாற்றுவது நியாயமா?

மொத்தம் ஆயிரம் பேருக்குக் காலேஜ் படிப்புத் தேவை என்று வைத்துக்கொள்வோம். அதில் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர் 100 பேர்; மற்ற வகுப்பினர் 900 பேர். அந்த நூறில் 10, இந்தத் தொளாயிரத்தில் 40, ஆக 50 பேருக்கு விகிதம் போட்டுத்தான் இடம் கொடுப்போம் என்று வீராவேசமாய்ப் பேசிவிட்டால், மிச்சமுள்ள 950 பேருக்குத் திருப்தி ஏற்பட்டுவிடுமா? நியாயந்தான் நிலைபெற்று விடுமா? தேவைப் படுவது 1000 பேருக்கு இடம்; கொடுப்பது 50 பேருக்கு மட்டுமே. தேடவேண்டிய பரிகாரம் வீண் துவேஷத்தைக் கிளறிவிடும் வகுப்பு வெறி அல்ல; ஆயிரம் பேருக்கும் இடங் கண்டு, சகல மக்களும் சௌக்கியமாய் வாழ வழிகோலும் ஆக்க வேலையே அது. கொடுப்பது சொற்பம்; கையை விரிப்பது அதிகம். கையை விரிப்பதிலே வகுப்பு விகிதாசாரம் காட்டி விட்டால், வகுப்புவாத நீதியைக்கூடத் திருப்திகரமாய் வழங்கிவிட முடியாது. வகுப்பு வாதத்தால் ஜனங்களைச் சில நாளைக்கு மனங் குழப்பி ஏமாற்றலாம்; வெகு நாளைக்கு ஏமாற்ற முடியாது. எந்த வகுப்பிலேயானாலும் எவரோ சிலர் லாபம் அடைவதால், எல்லாருக்கும் திருப்தி ஏற்பட்டுவிடாது. எல்லா வகுப்பிலும் எல்லாரும் சுகம் அடைய வழி தேடுவதே எல்லாரும் வாழ வழி. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்பவனே உண்மைத் தமிழன். அவன் வகுப்புவாதம் கொள்ளமாட்டான். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்; ஒன்றே குலம், ஒருவனே தெய்வம். ஆனால், அடுத்த வீட்டுக்காரன் மட்டும் என் சத்ரு" என்று ஒரு நாளும் அவன் பேச மாட்டான்.

பள்ளிக்கூடங்களையும் காலேஜ்களையும் ஏராளமாய்ப் பெருக்க வழி தேடாததால், படிக்க விரும்பும் சிறுவர்களுக்கு இடம் கிடைப்பது பெருங்கஷ்டமாயிருக்கிறது. அதுதான் போகட்டும் என்றால், போதிக்கும் பாடங்களிலே வேறே அராஜகம் புகுந்திருக்கிறது.

கல்வி என்பது எல்லாரும் போதித்துவிடக் கூடியதும் அல்ல; எல்லாரும் ஒரே விதமாய்ப் பெற்றுவிடக் கூடியதும் அல்ல. தலையணைக்குப் பஞ்சு அடைக்கும் காரியம் அல்ல அது. வழிவழி வந்த முறைகள் எல்லாம் ஏதோ சுயபலத்தினால்தான் அப்படி வந்திருக்கின்றன. அவற்றை நினைத்தபோது நினைத்தவனெல்லாம் நினைத்தபடி மாற்ற எண்ணுவது தகாது. காலத்துக்கேற்ற புது முறைகளும் பொருள்களும் தேவையே. ஆனால், அவற்றைப் புகுத்துவதில் தீர்க்காலோசனையும் நிபுணர் உதவியும் நிதானமும் வேண்டும்.

கொஞ்ச நாளைக்கு முன்பு என் சிறு மகள் வீட்டிலே பாடம் படிக்கவேண்டிய நேரத்தில் அதை விட்டு, சிறு சிறு ஈர்க்குகளைச் சேர்த்து, ஒரு துடைப்பம் தயாரித்துக் கொண்டிருந்தாள். "இது எதற்கு?" என்று கேட்ட போது, பெரிய கல்வித் தலைவர் ஒருவர் தங்கள் பள்ளிக்கூடத்துக்கு வரப்போவதாகவும், அப்போது எல்லாப் பெண்களும் குடித்தனப்பாங்கு பற்றிப் பெறும் கல்விக்கு அடையாளமாகத் துடைப்பம் ஏந்தியிருக்க வேண்டும் என்று வாத்தியாரம்மாளின் உத்தரவு என்றும் சிறுமி சொன்னாள். இது எனக்கு வேடிக்கையாக இருந்தது. சமையல், வீடு பெருக்கி மெழுகிக் கோலமிட்டுச் சுத்தமாய் வைத்துக்கொள்வது முதலிய

காரியங்களை ஒவ்வொரு பெண்ணும் எப்படியும் தன் தாயிடமிருந்து கற்றுவிடுவாள். பள்ளிக்கூட நேரத்தை இதில் வீணடிக்க வேண்டியது நம் தேசத்தில் அவசியந் தானா? இல்லவே இல்லை. குடித்தனப்பாங்கு பற்றி வேறு எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றனவே; அவற்றையெல்லாம் குழந்தைகளுக்குப் போதிக்க-லாகாதா?

குழந்தை சென்ற வருஷம் முதல் ஃபாரம் படித்தாள். 'ஆவோ', 'ஜாவோ', 'யஹ் ஏக் கிதாப் ஹை', 'வஹ் ஏக் கலம் ஹை' என்று என்னவோ ஹிந்தியை நாளெல்லாம் குழறிக்கொண் டிருந்தாள். பரீட்சையிலும் தேறி விட்டாள். ஆனால், சமீபத்தில் வந்த ஒரு செய்திப்படி, இதே குழறலைத்தான் அவள் திரும்ப இரண்டாம் ஃபாரத்திலும் குழறவேண்டும் என்று தோன்றுகிறது. இங்கிலீஷிலோ ஏ, பி, ஸி கூடக் கற்காத அவள், இந்த வருஷம் இரண்டாவது வருஷ இங்கிலீஷ் பாடம் படிக்க வேண்டிவரும் போல் இருக்கிறது. ஏனென்றால், இந்த வருஷம் தொடங்கி முதல் ஃபாரத்திலிருந்தே இங்கிலீஷ் கற்பிக்கப் போகிறார்களாம்!

இது எப்படி இருக்கிறது!? என் கடைசிப் பையனின் தலைக்ஷவர வேடிக்கை ஒன்று உண்டு. அவன் என்னோடு சென்னையில் இருக்கும்போது, அவனுக்குக் கிராப் வைத்துவிடுவது வழக்கம். வைதிகமான தாத்தா வீட்டுக்கு அவன் போவான். உடனே அங்கே அவனுக்குக் குடுமி வைத்துவிடுவார்கள். திரும்பி இங்கே வந்தால், அவன் தலை கிராப் தலை ஆகிவிடும். இப்படியாக மூன்று நாலு வருஷம் அங்கே போனால் குடுமி,

இங்கே வந்தால் கிராப்பாக மாறிக்கொண்டே இருந்தது. அவனுக்கே இது மிகவும் சள்ளையாய்ப் போய்விட்டது. இப்போது அவன் 'புரட்சி' செய்து நிரந்தரக் 'கிராப்' பக்தன் ஆகிவிட்டான். குழந்தைகள் எல்லாம் சேர்ந்து இந்த மாதிரி 'புரட்சி' செய்தால்தான் இந்தக் கல்வி அலங்கோலத்துக்குத் தப்ப முடியும்போல் இருக்கிறது.

இதிலே பாஷை அவந்தரை வேறே வந்து கலந்திருக்கிறது. 'இங்கிலீஷ் ஒழிக!' என்கிறார் ஒருவர். 'ஹிந்தி ஒழிக!' என்கிறார் இன்னொருவர். 'தமிழில் ஒன்றும் இல்லை' என்று அதைப் புறக்கணிக்கிறார் மற்றொருவர். இதன் மூலம் அரசியல் சதுரங்கம், வகுப்புத் துவேஷ மாகாணத் துவேஷப் பிரசாரம் முதலிய விபரீதங்கள் வேறு நடக்கின்றன.

இன்று எனக்கு மிக நன்றாய் ஞாபகத்துக்கு வருகிறது. சுமார் ஏழு அல்லது எட்டு வயசு இருக்கும். பாட்டி வீட்டில் இருந்தேன். அங்கே யாரோ பெரியவர்கள் படித்த புத்தக ஏடுகள் கிடந்தன. அத்தனையும் தமிழ். சில ஏடுகள் அப்படியே யூக்லிட் மொழி பெயர்ப்பு; சில ஏடுகள் ஏதோ பீஜகணித மொழி பெயர்ப்பு. நாற்பது வருஷத்துக்கு முன்பு இவற்றைக் கண்டேன். அந்தச் சிறு வயசில் எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால், யூக்லிட், பீஜ கணிதம் என்று அவற்றில் இருந்த பெயர்களும், க்ஷேத்திர கணித உருவங்களும், பீஜ கணித சூத்திரங்களும் இன்னமும் என் கண்ணைவிட்டு அகலவில்லை. அவை யார் பதிப்போ? வேறு எவராவது பெரியவர்களுக்கு அவை பற்றி ஞாபகம் இருக்குமோ என்னவோ? எனக்குத் தெரியாது.

பின்னுல் பல வருஷங்கள் வரைக்கும் இந்த உயர்தரக் கணிதப் புத்தகங்கள் தமிழை விட்டே மறைந்துபோய் விட்டன. ஏன் ? நம் அசட்டைதான் காரணமாக இருக்க வேண்டும்.

சுமார் இருபது வருஷத்துக்கு முன்னே நடந்த சில தமிழ்ப் பத்திரிகைகளைப் பார்த்தால், இன்று வருவதை விட அரிய விஷயங்கள் அவற்றில் வந்திருப்பதைக் காண்போம். தமிழ் நடைதான் இன்று மிகவும் சரள மாகவும் அழகாகவும் உருவாகி யிருக்கிறது. பொருள் மிகவும் அருகிவிட்டது. இது வருந்தத்தக்க விஷயம்.

நாம் வெறுங் கூச்சல் போடப்போட, இந்த நிலை தான் நீடிக்கும். வீண் துவேஷங்களால் ஆக்க வேலை எதுவும் செய்ய முடியாது. உண்மை நிலையை உணர்ந்து மேன்மைக்குரிய மார்க்கத்தைக் கண்டு அதில் நடக்க வேண்டும்.

இங்கிலீஷை வெறுக்காதீர்கள். இன்று உலகத்து அறிவுப் பொக்கிஷம் அனைத்தும் அதில் இருக்கிறது. அது நாம் சர்வதேச உறவை வளர்த்துக்கொள்ள உதவக்கூடியது. நம் தேசத்தில் இரண்டாவது பாஷை போல் எங்கும் பரவி வேரூன்றியிருப்பது. பழைய அரசியல் நிலையில் ஏற்பட்ட உணர்ச்சி காரணமாக, அதை - அரும்பாடு பட்டுக் கற்ற அந்தப் பாஷையை - இன்று இழப்பது மதியீனம்.

ஹிந்தியை வெறுக்காதீர்கள். அதில் இன்று ஒன்றும் இல்லாதிருக்கலாம். ஆனல், அதுவே இந்தியா முழுவதற்கும் தேசீய பாஷையாகக்கூடிய சக்தி படைத்தது. வெகு விரைவாக அது வளரப்போவது

நிச்சயம். சர்வதேச அந்தஸ்தும் ஒரு நாள் அதற்குக் கிடைத்துத்தான் தீரும். அதன் மீது நாம் குரோதம் கொண்டால், பின்னல் நமக்குத்தான் நஷ்டம்.

சம்ஸ்கிருதத்தை வெறுக்காதீர்கள். நமது புராதன கலைச் செல்வமும், இன்றளவும் உலகிலே இணையற்று விளங்கும் தத்துவ தர்சனமும் வேதாந்தமும் அதில் இருக்கின்றன. உலகோர் வியக்கும்படி என்றும் மங்காது சுடர் வீசும் இந்திய மணி மகுடம் அது. இந்தியாவின் சகல பாஷைகளுக்கும் உயிர் நிலையாய் விளங்கும் அமர பாஷை அது.

தமிழைப் போற்றுங்கள். அது நம் தாயின் மடியிலே கற்றது. நம் வாழ்வின் மூச்சுக் காற்று. மிகப் பழமையான இலக்கியச் செல்வம் நிறைந்தது. வாழையடி வாழையாய் நம்மை வாழ்விக்க வல்லது.

மூன்று நான்கு பாஷைகளை நாம் கற்பது கஷ்டம் அல்ல ; நஷ்டமும் அல்ல. பிற பாஷைகளைக் கற்பதால், நம் தமிழ் நலியாது ; வளமே பெறும். வீண் பெருமை பேசி, வறட்டு வெறி கொண்டால்தான் தமிழுக்கு - நமக்கே- தீங்கு தேடிக்கொள்வோம்.

[குறிப்பு : இது நான் 1949 ஜூன் மாதம் 'கலைமக'ளில் எழுதிய கட்டுரை. வேண்டும் என்றே இதை இங்கே சேர்த்திருக்கிறேன். ஹிந்திபற்றி இதில் சொல்லியுள்ள கருத்தை மட்டும் இன்று நான் சற்று மாற்றிக்கொண் டிருக்கிறேன். பிந்திய கட்டுரைகளில் அந்த மாறுதலைத் திட்டமாகக் காணலாம். அவற்றை நான் 'கலாவல்லி'யில் 1956 ஜனவரி 16-ஆம் தேதி தொடங்கித் தொடர்ச்சியாக எழுதி வந்தபோது, ஒரு

நண்பர் என்னுடைய இந்தப் பழைய கட்டுரையைக் குறிப்பிட்டு, "அப்போது இப்படிச் சொன்னீர்களே ?" என்று கேட்டார். ஆம்; அப்போது இப்படித்தான் சொன்னேன். ஆனல், இன்று ஹிந்திக்காரர் செய்யும் அட்டகாசங்களையும் நாட்டில் நிகழும் சில நிகழ்ச்சிகளையும் பார்க்கும்போது, என்னுடைய பழைய கருத்துத் தவறு என்று எனக்குத் தெளிவாகி விட்டது. என் தாய் மொழி தமிழ். தமிழிடம் எனக்கு என்றும் மாருத காதல். தமிழின் வாழ்வுக்கும் வளத்துக்கும் நவீன வளர்ச்சிக்கும் எது இடையூருக நின்ருலும் அதை வெறுப்பேன்; யார் ஊறு செய்தாலும் அவர்களை நொந்துகொள்வேன். தமிழ்பற்றி முன்னே சொன்னதையே இன்றும் சொல்கிறேன்; நாளையும் சொல்வேன்: தமிழ் என் மூச்சுக் காற்று. மொழிப்பிரச்னை பற்றிய எதையும் சோதித்துப் பார்க்க, தமிழின் வாழ்வு நிலையே என் உரைகல்.]

இது மொழிப் பகைமையா ?

சில நாட்களாக யாரைக் கண்டாலும் ஒரு விஷயத்தைப்பற்றித்தான் திரும்பத் திரும்ப எனக்குப் பேசத் தோன்றுகிறது. பேசுவதென்றால் ஏதோ சாதாரணமாக நான் நாலைந்து வார்த்தை சொல்ல அவர்கள் பதில் சொல்ல, ஒருவருக்கொருவர் அபிப்பிராயம் பரிமாறிக் கொள்ளும் தோரணையில் பேச்சை நான் ஓடவிடுவதில்லை. மூச்சுவிடக்கூட நிற்காமல் பல சமயம் நானே பேசிக் கொண்டு போய்விடுகிறேன். அந்த விஷயத்தில் எனக்கு அவ்வளவு ஈடுபாடு. உண்மையைச் சொன்னால், அதில் எனக்குள்ள ஆழ்ந்த உணர்ச்சி மற்றவர்களுக்குப் புரியாது. என் உணர்ச்சிக்குக் காரணம் உண்டு. என் சொந்த அநுபவம் பற்றியது அந்தக் காரணம். அதை எல்லாம் இங்கே நான் விளக்கிக்கொண் டிருக்கப் போவதில்லை. விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். ஹிந்தி-தமிழ் விவகாரந்தான் அது.

இந்த விஷயத்தை நான் அரசியல் கண் கொண்டு நோக்கவில்லை. பொழுது போக்கான கதையும் கட்டு

ரையும் எழுதுகிறவன் என்ற நிலையிலே நோக்கவில்லை. தமிழ் நாட்டில் பிறந்து, தாய் மடியிலே தமிழ் பேசி, எண்ணையும் எழுத்தையும் தமிழையே ஆதரவாய்க் கொண்டு கற்று, பின்னல் அறிவு விரிவுக்கெல்லாம்-சமூகம், அரசியல், விஞ்ஞானம், கலை, இலக்கியம்பற்றிய நவீனக் கருத்துக்களையெல்லாம் தெரிந்துகொள்ள-ஒவ்வோரடியிலும் ஆங்கிலத்தைச் சார்ந்து அவதிப்பட்ட ஒருவன் என்ற முறையில்தான் நோக்குகிறேன்.

நவீனத் தேவைகளுக்கெல்லாம் ஏற்றபடி தமிழ் வளர்ந்து பக்குவம் பெருவிட்டால், தமிழன் வளரமாட்டான். தமிழின் வாழ்வு தமிழனின் வாழ்வு; தமிழின் வளர்ச்சி தமிழனின் வளர்ச்சி. "ஏன், இப்போது ஆங்கிலத்திலேயே பல விஷயங்களையும் தமிழன் கற்றுவிட வில்லையா? விஞ்ஞானமும் மற்ற அரிய அறிவுக் கலைகளும் தமிழிலே வந்த பிறகுதான் அவற்றைக் கற்பதென்று தமிழன் காத்திருக்க வில்லையே?" என்று ஒருவர் கேட்கலாம். இதில் எவ்வளவு சேதாரம், எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டிருக்கவேண்டும் என்பது அவருக்குத் தெரியாது. இதனல் தமிழனுக்கு ஏற்பட்ட தாழ்வு மனப் பான்மையையும் அதனல் விளைந்த விபரீதங்களையும் கணக்கிட்டுச் சொல்ல இயலாது. நீரிலே வாழும் மீனுக்குத் தரையைப்பற்றி என்ன தெரியும்? கற்பனை செய்து பார்த்தால்தான் தெரியும். தமிழ் வளராமல் தமிழன் ஏதோ வளரலாம்; ஏதோ வாழலாம். ஆனல், அது பரிபூர்ண வளர்ச்சியாக-வாழ்வாக இராது.

இன்று ஆங்கிலம் நம்மை விட்டாலும் நாம் அதை விட முடியாத நிலையில் இருக்கிறோம். இதே நிலையில்

என்றென்றும் நம்முடைய பின் சந்ததிகளும் இருக்க வேண்டுமா? இருக்கக்கூடாது என்று எல்லாருமே ஒப்புக்கொள்கிறோம். ஆனால், ஆங்கிலத்தின் ஸ்தானத்தை ஹிந்தி ஆக்கிரமிக்க இடங்கொடுக்கலாமா? இந்தக் கேள்வியைக் கேட்டால் இதற்குச் சரியான பதில்-மழுப்பாமலும் வெறிகொள்ளாமலும் தெளிந்த பதில்-சொல்கிறவர் இல்லை.

மழுப்புகிறவர் "மகாத்மா காந்தி ஹிந்தி படிக்கச் சொன்னாரே!" என்கிறார். "இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்ற ஏதாவது ஒரு பாஷை, பொதுப் பாஷையாக இருக்க வேண்டாமா?" என்கிறார். "மொழிப் பகைமை கூடாது. குறுகிய புத்தி ஆகாது. ஹிந்துஸ்தான் ஜிந்தாபாத்!" என்கிறார். அது இது என்று என்ன வெல்லாமோ உபதேசம் செய்யத் தொடங்கி விடுகிறார்.

வெறி கொண்டவரோ, "தமிழ், தமிழ், தமிழ்! எங்கும் தமிழ் முழக்கம் செய்வோம்! இமயத்தின்மீது கொடி நாட்டிய தமிழ்! சிங்களம், புஷ்கம், சாவகம் ஆதிய தீவு பலவினும் சென்றேறிய தமிழ்! மொஹஞ்ச தடோ நாகரிகத்தைப் படைத்த தமிழ்!" என்றெல்லாம் கர்ஜிக்கிறார்.

இப்படியெல்லாம் ஆர்ப்பரிப்பது கேள்விக்குப் பதில் அல்ல; பிரச்னைக்குப் பரிகாரம் காண வழி துலக்காது. ஒரு பிரச்னைக்கு எதிரே மற்றும்சில பிரச்னைகளை எடுத்து வீசிப் பயனில்லை. அந்தப் பிரச்னைகளையும் உள்ளடக்கிய ஒரு பதிலைக் காணவேண்டும். 'தமிழ், தமிழ், தமிழ்' என்று பஜனை செய்வதால் தமிழ் வளர்ந்துவிடாது. அதை வளர்த்தால்தான் வளரும். "அது தானே

வளரும்; யாரும் அதை வளர்க்கவேண்டியதில்லை. உயிருள்ள மொழி எங்கள் தமிழ்" என்று முரட்டடியாகச் சொல்லலாம். நம்பிக்கை தளர்ந்து ஆத்திரம் மிகும்போது, இந்தப் பதிலை நானுங்கூடச் சில சமயம் சொல்லுவதுண்டு. ஆனால், வரவிருக்கும் அபாயத்தை நாம் அசட்டை செய்வது தவறு. கண்ணை மூடிக் கொள்வது தற்காப்பு ஆகாது.

தமிழ்நாடு சர்வாதிகாரமுள்ள-சகல விதத்திலும் தனித்துப் பிரிந்த-தனிச்சுதந்தர ராஜ்யம் ஆகவேண்டும் என்று சொல்லுகிறவன் அல்ல நான். இமயம் முதல் குமரி வரைக்கும் உள்ள பாரதத்தை-ஏன், சில சமயம் பழைய ஞாபகத்தால் பாகிஸ்தான், பர்மா இவையும் சேர்ந்த இந்தியாவையே கூட-ராமாயணத் தொடர்புள்ள, தமிழ் மன்னரின் சரித்திர உறவு கொண்ட இலங்கையை விடுவானேன்; அதையுமேதான்-என் நாடு என்று உள்ளம் பூரிக்க எண்ணுகிறவன் நான். உலகமே ஒரு குடைக்கீழ் வராதா என்ற ஆசையுங் கூட எனக்கு உண்டு. என் உள்ளத்திலே நான் உலகத்தின் பிரஜை. பாரதத்தின் ஒற்றுமையையும் அரசியல் ஒருமையையும் காப்பாற்ற வேண்டியதுதான்; போற்றி வளர்க்க வேண்டியதுதான். இதற்காகத் தமிழன்-தமிழன் மட்டும் அல்ல, ஹிந்தி உள்பட ஒவ்வொரு பாஷைக்காரனுமே-ஓரளவு விட்டுக் கொடுக்க வேண்டியதுதான். ஆனால், அது 'என் வீட்டுக்கு வந்தால் என்ன கொண்டு வருகிறாய்? உன் வீட்டுக்கு வந்தால் என்ன கொடுப்பாய்?' என்கிற கதையாக இருக்கக்கூடாது; பாஷைக்குப் பாஷைக்கு உயர்வு தாழ்வு கற்பிக்கும் ஏற்பாடாக இருத்தலாகாது. அகில இந்தியாவிலும்

சகலமான பிரஜா உரிமைகளும் கடமைகளும் சலுகைகளும் நிர்ப்பந்தங்களும் சமமா யிருக்க வேண்டும்.

இன்றைய நிலையைப் பார்ப்போம்; அதாவது, வருங்காலத்தை எண்ணி, இன்று நடக்கும் முயற்சிகளைக் குறிப்பிடுகிறேன். அரசியல் சட்டத்தில் ஹிந்தி, தமிழ் உள்படப் பதினுன்கைத் தேசீய மொழிகளாகக் குறிப்பிட்டிருக்கிறுர்கள். ஆனுல், ஹிந்தியை 'அஃபிஷியல்' (துரைத்தன) மொழி என்று குறித்திருக்கிறுர்கள். நாடெங்கும் ஹிந்தியைப் பரப்பும் முயற்சிகள் நிர்ப்பந்தமாகவோ தளுக்காகவோ, பிரசார பலத்தோடு நடக்கின்றன. மத்திய சர்க்காரில் உத்தியோகம் வகிக்கும் எவரும் ஹிந்தியைக் கற்பதைக் கட்டாயமாக்கி வருகிறுர்கள். இன்று சில பேருக்கு விலக்கு அளிக்கலாம்; கற்பதற்குத் தவணை அளிக்கலாம். பின்னுல் ஒரு காலத்தில் இந்த நிபந்தனையைக் கண்டிப்பாக நிறைவேற்றத்தான் எண்ணியிருக்கிறுர்கள். மத்திய சர்க்காரில் கட்டாயம் ஆகிவிட்ட ஹிந்தி, சட்டங்களின் திட்டமான வாசக ஒருமையின் தேவை போன்ற, பல காரணங்களால் அதன் பிறகு ராஜ்ய சர்க்கார்களிலுந்தான் கட்டாயம் ஆகும். அதைத் தடுக்க முடியாது. 'ஹிந்தியை இப்போது நம்மீது திணிக்கக் கூடாது; கொஞ்ச காலத்தில் நாம் தயாராகிவிட்ட பின்பு திணிக்கலாம்' என்ற தோரணையில்தான் நம்மிலேயே பொறுப்புள்ள சில பெருந்தலைவர்கள் சொல்லுகிறுர்கள். அதிகாரிகள் எல்லாம் ஹிந்தி கற்க வேண்டியதுதானும். ஆனுல், ஹிந்தி பேசுவதே பெருமை என்று எண்ணி, அதிகாரிகள் ஹிந்தி மோகம் கொண்டுவிடக் கூடிய அபாயம் வரலாமாம். அதற்கு இடம் கொடுக்கக் கூடா

தாம். இவ்வளவு மௌட்டீகமாக உபதேசம் செய்கிறவர்களைக் கண்டு நாம் சிரிக்கத்தான் வேண்டும். 'உரலுக்குள் தலையை விடு; ஆனால், உலக்கையின் இடிக்கு இடங்கொடாதே' என்ற உபதேசமாக இருக்கிறது இது!

'எல்லாரும் சம்மதித்து, ஹிந்தியைத் துரைத்தன மொழியாக அரசியல் சட்டத்தில் விதித்து விட்டு, இப்போது மாறு பேசலாமா?'-இப்படி ஒரு கேள்வி கேட்கிறார்கள். ஏன் கூடாது? அரசியல் சட்டம் என்பது வேதமா, என்ன? வேதத்தைக்கூட இன்று லட்சியம் செய்வோர் இல்லை. பழைய நிலைமைகளில் உசிதம் என்று தோன்றிய ஒன்றையே, உடும்புப் பிடியாகப் பிடித்துக்கொண் டிருக்க வேண்டுமா? புதிய நிலைமைகளில் அநுபவ ரீதியான மாறுதல்களைச் செய்வதுதான் வளர்ச்சிக்கு வழி. வேறு காரியங்களுக்கு அரசியல் சட்டத்தை மாற்றவில்லையா?

பல பாஷைக்காரர்களும் ஒற்றுமைப்பட வேண்டும் என்றால், சம அந்தஸ்தோடு அவர்கள் பழகவேண்டும். ஹிந்தியைப் பிற பாஷைக்காரர்கள் கற்கவேண்டும் என்றால், மற்றப் பாஷைகளை ஹிந்திக்காரர்கள் கற்க வேண்டும். "அப்படித்தானே சொல்கிறோம்" என்று, சில தலைவர்கள் கூறுவார்கள். உண்மைதான். ஆனால், உத்தியோகம் வேண்டுகிற தமிழன் ஹிந்தியைக் கற்பது அரசியல் சட்டப்படி கட்டாயமாகிறது. ஹிந்திக்காரன் தமிழையோ, வேறு பாஷையையோ அப்படிக் கற்பது கட்டாயம் இல்லை. இந்த நிலைமையில் தன்னை 'ஆளும் பாஷைக்காரன்' என்றுதானே அவன் நினைப்பான்? இது அபாயமான மனத்தத்துவத்தில் கொண்டு போய்

விடாதா ? ஹிந்துஸ்தான் என்பது ஹிந்திச் சாம்ராஜ்யம் என்று இப்போதே சில ஹிந்திக்காரர்கள் நினைப்பது போன்ற அறிகுறிகள் தோன்றுகின்றன.

சுருக்கமாகச் சொன்னால், ஹிந்தியை இன்று நாடெங்கும் பரப்ப முயல்வது மிகமிகத் தவறு. ஹிந்தியும் சரி, பிற பாஷைகளும் சரி, இன்று நவீனத் தேவைகளைப் பூர்த்தி செய்யாத-வளர்ச்சியற்ற-நிலையிலேயே இருக்கின்றன. இந்த நிலையில் ஹிந்தியை மட்டும் 'உலுக்கு மரம்' போட்டு எழுப்பிக் கொண்டிருந்தால், அது கொஞ்சம் எழும்பி விடக் கூடும். ஆனால், மற்றமொழிகளுக் கெல்லாம் தீங்கு நேரும். அது பாரதத்தின் ஒற்றுமையை வளர்க்காது ; சிதைக்கும்.

இப்போது உடனடியாகச் செய்யவேண்டிய காரியம் இந்தியாவின் பதினான்கு தேசிய பாஷைகளும் சரிசமமாக வளர்ந்து சிறப்படைய மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும் முயற்சி யெடுத்து உதவுவதுதான். பாஷைகளெல்லாம் நன்றாக வளர்ந்துவிடும்போது, ஒன்றின்மீது ஒன்று சுமையாக அமரும் அபாயமே நேராது. பிற பிராந்திய பாஷைகளைப்பற்றி நாம் கவலைப் பட்டுப் பயனில்லை. நம் தாய் மொழியை-தமிழை-அப்படிச் சர்க்கார் உதவி வளர்த்தாலும் சரி, வளர்க்காவிட்டாலும் சரி, தமிழன் வளர்க்க வேண்டும்.

ஹிந்தி எதிர்ப்புக் கோஷங்களைப் போட்டுக் கொண்டு, 'தமிழ், தமிழ், தமிழ் வாழ்க !' என்று வீணே பஜனை செய்துகொண் டிருந்தால், தமிழ் தானே வளர்ந்து விடாது. ஹிந்தி வந்து நம் தலைமீது குந்துவதும் தடைப்

படாது; ஹிந்தியை வளர்க்கவும் பரப்பவும் பலமான ஸ்தாபனங்கள் வேலை செய்கின்றன; மகத்தான மத்திய சர்க்காரே முயன்று வருகிறது. நவீன விஞ்ஞானம், கலை, தத்துவம் ஆகிய சகலதுறைகளிலும் ஓரளவு இலக்கிய வளம்பெற்றதாக ஹிந்தி சில வருஷங்களில் வளர்ந்து விடுவது நிச்சயம். அப்போது, தமிழ் இன்றுபோலவே வளராத நிலையில் - 'அன்றிருந்த மேனிக்கு அழிவில்லை' என்ற நிலையில் - இருந்து கொண்டிருந்தால், தானாக ஹிந்தி நம்மீது சுமந்துவிடும். ஆங்கிலத்தை நம்மால் இன்று ஏன் விடமுடியவில்லை என்பதை இங்கே நாம் கவனிக்கவேண்டும். நவீன விஷயங்கள் அடங்கிய நூல்களெல்லாம் ஆங்கிலத்தில் இருக்கின்றன; தமிழில் இல்லை. இதுதான் காரணம். சகலமும் ஹிந்தியில் இருந்து, தமிழில் இல்லாத ஒரு காலம் வந்தால், ஹிந்தி நம் தலைமீது ஏறித்தான் தீரும். அப்புறம் எத்தனை ஹிந்தி எதிர்ப்பு வீரப்போராட்டங்களாலும் அந்தச் சுமையை எளிதில் இறக்கி வைக்க முடியாது. குண்டாந்தடியால், ஹிந்தியை எதிர்க்க முடியாது; தமிழின் பலத்தால்தான் அதை எதிர்க்க வேண்டும். விஷத்தை மருந்தால் முறிக்க வேண்டும். தமிழை நாம் அமுதமாக்க வேண்டும். அந்த அமுத பலமில்லாமல், கோல் கைக்கொண்டு ஹிந்தியை எதிர்த்தால், நமக்குத்தான் இன்னல் ஏற்படும். நாம் ஒரு வழியும் இல்லாமல் திண்டாட நேரும்.

தமிழை எப்படி வளர்ப்பது? அதற்குச் சர்க்காரையோ, அதைச் சார்ந்த ஸ்தாபனங்களையோ நம்பிப் பயனுண்டாகும் என்று, இன்று தோன்றவில்லை. நாமே தான் தமிழை வளர்க்க வேண்டும்.

ஹிந்தி வெறி

ஒரு நாள் ஒரு நண்பரும் நானும் புஸ்தகக் கடை ஒன்றுக்குச் சென்றோம். நாங்கள் அங்கே அடிக்கடி சென்று புஸ்தகங்கள் வாங்குவது வழக்கம். அங்கே புதிய புதிய ஆங்கிலப் புஸ்தகங்கள் - அருமையான விஞ்ஞான நூல்களும் பிறவும் மலிவுப் பிரசுரங்களாக வந்தவை - கிடைக்கும். நண்பருக்கு மிக நன்றாய் ஹிந்தி தெரியும். யார் என்றே சொல்லி விடுகிறேனே : கா. ஸ்ரீ. ஸ்ரீ. தான்.

அன்று நாங்கள் கடைக்குள்ளே போனதும், கடைக்காரர் முகத்தை 'உம்' என்று தொங்கப் போட்ட படி நண்பரிடம் ஒரு கார்டை நீட்டினார். சள்ளைப்பட்ட குரலில் " இதில் என்ன, ஸார், எழுதி யிருக்கிறது ?" என்று கேட்டார்.

கடிதம் ஹிந்தி மொழியில் இருந்தது. வட நாட்டுப் புஸ்தகக் கம்பெனி ஒன்றிடம் இருந்து வந்த கடிதம். ஏதோ ஓர் ஆங்கிலப் புஸ்தகத்தை ஸப்ளை செய்த விஷயமாக என்னவோ எழுதி யிருந்தது. கடைக்

காரருக்கு ஹிந்தி தெரியாது. நண்பர் மொழிபெயர்த்துச் சொன்னார்.

“ இந்த இழவை ஆங்கிலத்தில் எழுதித் தொலைக்கக் கூடாதா, ஸார் ?” என்றார் கடைக்காரர்.

கடிதம் ஆங்கிலப் புஸ்தகம் சம்பந்தமானது. ஹிந்திப் பிரதேசமான வடநாட்டுக் கம்பெனி ஒன்று, தமிழ்ப் பிரதேசமான தென்னாட்டுக் கடை ஒன்றுக்கு, புஸ்தக வியாபார ரீதியாகக் கடிதம் எழுதுகிறது. ஆங்கிலப் புஸ்தக வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் இரண்டு ஸ்தாபனங்களில் உள்ளவருக்கும் ஆங்கிலம் - கடிதம் எழுதக் கூடிய ஏதோ ஓரளவாவது - தெரிந்திருப்பது நிச்சயம். சம்பாதிப்பது ஆங்கிலப் புஸ்தகத்தை விற்று. ஆயினும், ஹிந்தியில்தான் கடிதம் ! ஹிந்தியை இதற்குள்ளே அப்படி நமக்கு ஊட்டுகிறார்கள் வடநாட்டுக்காரர் ! ஏனென்றால், அவர்களுடைய பாஷை ‘ராஷ்டிர பாஷை !’

இதிலிருந்து, ஹிந்தி - தமிழ் விவகாரம்பற்றிப் பேச்சுக் கிளைத்தது. சிறிது விவாதம் நடந்தது.

நண்பர் சொன்னார் : “ ஏனையா, முன்னே ஆங்கிலத்தை எல்லாரும் கற்றுக்கொள்ளச் செய்தானே ஆங்கிலேயன். அப்போது போட்டி போட்டுக்கொண்டு ஆங்கிலத்தை நாம் கற்றுக்கொண்டோமே. இப்போது ‘ஹிந்தியைக் கற்றுக்கொள்’ என்றால் மட்டும் நாம் ஏன் எதிர்க்க வேண்டும் ?”

கடைக்காரர் ‘பட்’ என்று பதில் சொன்னார் : “ அவன் எனக்கு எஜமான் ; நீ என்ன எஜமானா ?”

இதைக் கேட்ட நான் ராஜியாக ஒன்று சொன்னேன்: "இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டும் என்கிறீர்களே; அதற்காக வேண்டுமானால், நாம் கொஞ்சம் ஹிந்தி கற்றுக்கொள்ளலாம்; ஹிந்திக்காரர்களும் தென்னாட்டுப் பாஷை ஒன்றைக் கொஞ்சம் கற்றுக்கொள்ளும் கட்டாயம் இருக்க வேண்டும்." விவகாரத்துக்காக இப்படிச் சொன்னேனே தவிர, இதுவே என் கருத்தல்ல. இன்று நாம் ஹிந்தி கற்கும் பேச்சே இருக்கக் கூடாது என்பதுதான் என் அபிப்பிராயம்.

ஹிந்தியை நாமும், நம் பாஷைகளில் ஒன்றை ஹிந்திக்காரரும் கற்கலாம் என்ற இந்த யோசனைக்கும் கடைக்காரர் சம்மதிக்கவில்லை "இந்தச் சனியனெல்லாம் வேண்டாம், ஸார். அவன் அவன் பாஷையை அவன் அவன் கற்றுக்கொண்டால் போதும்" என்றார். பிறகு, அவரே தொடர்ந்தோ, பக்கத்தில் இருந்த நான்காவது மனிதரோ-சரியாய் ஞாபகம் இல்லை - சொன்னது இது: "ஏன், இந்த ஆங்கிலமே இன்னும் இருந்து விட்டுப் போகட்டுமே? இதை விடுவானேன்?"

இந்த நிகழ்ச்சியைக் குறித்துச் சொன்னதும், "தனி மரம் தோப்பாகுமா? எவனோ ஒரு ஹிந்தி வெறியன் ஹிந்தியில் காகிதம் எழுதி விட்டாற்போல் இருக்கிறது. எல்லாரும் இப்படிச் செய்ய மாட்டார்கள். பொறுப்புள்ள ஹிந்திக்காரர்கள் இன்றைய நிலையில் இப்படிச் செய்யவே மாட்டார்கள். அவர்கள் நயமாக, சுகமாக, மெள்ள மெள்ள, ஹிந்தியைத் தெற்கத்தியான் தலையிலே சுமத்தத்தான் பார்ப்பார்கள். நாம் சிறிது

சிறிதாகத் தலையைக் குனிந்து கொடுத்தால் போதும்; முதுகு வலிக்காமல் பார்த்துக் கொள்ளலாம்" என்று சில நண்பர்கள் சொல்லலாம்; அல்லது நினைக்கலாம். அது சரி அல்ல. உண்மையில் இது தனி நிகழ்ச்சி அல்ல. எனக்குப் பிரத்யட்சமாய்த் தெரிந்த வேறு நிகழ்ச்சிகளும் உண்டு. ஏதோ வடநாட்டு ஹைக்கோர்ட் ஒன்றுக்கு - நாகபுரி ஹைக்கோர்ட் என்று நினைக்கிறேன் - ஆங்கிலச் சட்டப் புஸ்தகமோ பத்திரிகையோ ஒன்று தேவை. தமிழ் நாட்டில் சட்டப் புஸ்தகங்கள் பிர சுரிக்கும் கம்பெனி ஒன்றுக்கு அந்த ஹைக்கோர்ட் ஆர்டர் கொடுத்தது. அந்தக் கடிதம் ஹிந்தியிலே இருந்தது. இது மட்டும் அல்ல. வடக்கேயிருந்து வியாபார ரீதியில் வரும் பல கடிதங்கள் இப்போது ஹிந்தியிலே வரத் தொடங்கி விட்டன.

தமிழ்நாட்டு எழுத்தாளர் ஒருவரை ஹிந்தி மொழி பெயர்ப்புக்காகத் தமிழ்க் கதை கேட்டு வட நாட்டுப் பத்திரிகையிலிருந்து ஒரு கடிதம் வந்தது. "சில நாளில் அனுப்புகிறேன்" என்று அவர் ஆங்கி லத்தில் பதில் எழுதினர். அதே சமயம் "இனி எனக்கு எழுதும் கடிதங்களை ஹிந்தியில் எழுத வேண்டாம்; ஆங்கிலத்திலேயே எழுதுங்கள்" என்று எழுத்தாளர் கேட்டுக்கொண்டார். சில நாளைக்கெல்லாம் "கதை தயாராகி விட்டதா?" என்று மற்ருெரு கடிதம் வந்தது. அதுவும் ஹிந்தியிலேயேதான் இருந்தது! அந்த எழுத்தாளருக்கோ ஹிந்தி தெரியாது. ஒவ்வொரு தடவையும் யாரிடமாவது ஹிந்திக் கடிதத் தைக் காட்டிப் பொருள் அறிந்து கொள்வதென்ருல், அவருக்கு எரிச்சலாயிராதா?

என்னிடம் அவர் இந்த நிகழ்ச்சியைச் சொன்னார். எனக்கும் ஆத்திரந்தான் வந்தது. "இதோ பாருங்கள்; இனி நீங்களும் அவருக்குப் புரியாத நம் தமிழில் பதில் எழுதுங்கள்" என்றேன். நண்பர் என்ன செய்தாரோ, எனக்குத் தெரியாது.

ஹிந்திக்காரர்கள் எவ்வளவு தூரம் செருக்குடனும் பிடிவாதத்துடனும் நடந்துகொள்ள ஆரம்பித்து விட்டார்கள் என்று காட்டவே இவற்றை இங்கே குறிப்பிட்டேன்.

இந்த மொழிப் பிரச்னை பற்றிப் பழைய ரீதியிலே நாம் சிந்திப்பது முற்றும் அசட்டுத்தனம். ஹிந்திக் கமிஷன் வருவதற்கு முன்னே, என் முதல் கட்டுரையை எழுதினேன். பிறகு ஹிந்திக் கமிஷன் வந்து சென்று விட்டது. அதற்கு முன் நம்மவர் பலர் சாட்சியம் சொன்னார்கள். அந்தச் சாட்சியங்களை யெல்லாம் பார்க்கும்போது, அபாயம் எவ்வளவு கடுமையானது என்று நன்றாய்ப் புலனாகிறது.

கமிஷன் தன் கடமையைச் செய்தது. அரசியல் சட்ட ஷரத்துப்படி அதை நியமித்தார்கள். ஹிந்தியை நாடெங்கும் அதிகார பாஷையாகச் செய்ய வழிதுறைகளை ஆராய்வதே அந்தக் கமிஷன் பெற்ற கட்டளை. பிராந்திய பாஷைக்காரர்களுக்கு நோகாமல், ஹிந்தி மாத்திரையை அவர்கள் விழுங்கச் செய்ய வேண்டும். இதற்கேற்ற கேள்விகளைத்தான், டிரில் மாஸ்டர் டிரில் பழக்குவது மாதிரி, எல்லாரையும் கமிஷன் கேட்டது.

கமிஷன் நம்மை யெல்லாம் கேட்ட கேள்வியை இப்படிச் சொல்லி விடலாம்: “உங்களுக்கெல்லாம் ‘டிஃபிஷென்ஸி’ வியாதி ஒன்று இருக்கிறது. ஹிந்தி என்ற வைட்டமின் உங்கள் ரத்தத்திலே ஏறவேண்டும். அந்த மாத்திரை கொஞ்சம் கசப்பு மாத்திரைதான். எப்படியும் அதை நீங்கள் விழுங்கியாக வேண்டும். விழுங்காமல் தப்பித்துக்கொள்ள உங்களை விடப் போவதில்லை. எந்தச் சௌகரியங்களோடு அதை விழுங்க உங்களுக்கு இஷ்டம்?”

குழந்தையிடம் விளக்கெண்ணெயைக் கொண்டு போனால் அது என்ன செய்யும்? பக்கத்திலே பால் புகட்டும் சங்கும் இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். குழந்தை ஒரேயடியாய்த் திகிலடையும். “இன்றைக்கு வேண்டாம், அம்மா. நாளைக்குச் சாப்பிடுகிறேன்” என்று கெஞ்சிப் பார்க்கும். “சர்க்கரை கொண்டு வா” என்னும்; “ஊறுகாய் கொண்டுவா” என்னும்; “பெப்பர்மிண்ட், புழுங்கலரிசி எல்லாம் கொண்டுவா” என்று கேட்கும். ஒரே யடியாக, “சாப்பிட மாட்டேன்” என்று மட்டும் அது சொல்லாது. சொன்னால் அம்மா விடப்போவதில்லை என்று நிச்சயமாய் அதற்குத் தோன்றிவிட்ட பிறகு, அடியோடு மறுக்கும் வார்த்தை அதன் வாயிலிருந்து வராது. எப்படி வரும்? இந்த மாதிரிதான் ஹிந்திக் கமிஷனின் முன்பு எல்லாரும் சாட்சியம் கொடுத்திருக்கிறார்கள்.

“எங்களுக்குக் கொஞ்சம் தவணை கொடுங்கள்” என்கிறார்கள் சிலர். “ஹிந்தியைச் சில வருஷங்கள் வளர்த்து வளப்படுத்துங்கள். அதற்குள் எங்கள்

முதுகைத் தயார் செய்துகொள்கிறோம்" என்கிறார்கள் வேறு சிலர். "ஆங்கிலத்தைப் படிப்படியாக விடுகிறோம்; ஹிந்தியைப் படிப்படியாக விழுங்குகிறோம். அதாவது வாய் வரைக்கும் சிலநாள்; தொண்டை வரைக்கும் சில நாள்; கடைசியில் வயிற்றுக்குள்ளேயே இறக்கிவிடுகிறோம்" என்கிறார்கள் மற்றும் சிலர். மொத்தத்தில் முற்றும் மறுக்க யாருக்கும் வகையில்லை. உண்மையில் எவருக்கும் ஹிந்தி வருவது பிடிக்கவில்லை என்பது மாத்திரம் நிச்சயமாய்ப் புலனாகிறது. ஆனால், கமிஷன் தலைவர் கேர் என்ன சொல்லுகிறார் தெரியுமோ? "ஹிந்தி வரவேண்டியது அவசியந்தான் என்று எல்லாரும் ஒப்புக் கொள்கிறார்கள்" என்றே அவர் சொல்லுகிறார்; சொல்லிக் களிக்கிறார்.

சொந்தத்தில் நிகழ்ந்த இன்னொரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வடநாட்டுப் பத்திரிகை ஒன்றில், பல பிராந்தியங்களின் முக்கியமான எழுத்தாளர்கள் ஒவ்வொருவரிடம் இருந்து, ஹிந்தி பற்றிய கருத்துக்கள் அடங்கிய - வேடிக்கையும் விஷயச் செறிவும் கொண்ட - கட்டுரைகளை வாங்கித் தொகுத்து வெளியிட விரும்பினார்கள். ஹிந்தி அறிந்த என் நண்பர் ஒருவரைத் தமிழ்ப் பிராந்தியக் கட்டுரைக்காக அவர்கள் வேண்டியிருக்கிறார்கள். நண்பர் என் கருத்துக்களைக் கேட்டுக் கட்டுரையை எழுதினார். அனுப்பினார். ஒன்றிரண்டு வாரம் கழித்து, நண்பரிடமிருந்து எனக்கு ஒரு கார்டு வந்தது. அது இதுதான்:

"தி. ஜ. ர. அவர்களுக்கு, நமஸ்காரம். சில தினங்களுக்கு முன்பு '....' (பம்பாய்ப் பத்திரிகை) ஆசிரியரிடம் இருந்து கடிதம் வந்தது. 'தென்னிந்

தியக் கட்டுரைகள் யாவும் ஹிந்தியை எதிர்த்தே தம் கருத்துக்களை வெளியிடுவதால், அந்த ஸப்ஜெக்டையே நிறுத்தவேண்டியதாக இருக்கிறது' என்று எழுதி யிருக்கிறார். முன்பு, தங்கள் கட்டுரையின் பிற் பகுதிகளை (உங்கள் சொந்தக் கருத்துக்களை) மாற்றவும், ஹிந்தி அவசியம் ராஜ பாஷையாக வர வேண்டும் என்ற சம்மதத்தைச் சேர்க்கவும் அநுமதிக்க முடியுமா என்று கேட்டிருந்தார். நான், 'அநுமதிக்க முடியாது; மாற்றித்தான் ஆகவேண்டும் என்றால், மூல ஆசிரியரின் பெயரைப் பிரசுரிக்க வேண்டாம்' என்று எழுதி யிருந்தேன். முடிவாக, அந்த விஷயத்தையே நிறுத்திவிட்டார்கள். எனக்கும் மற்ற நண்பர்களுக்கும் ஏமாற்றமாகத்தான் இருக்கிறது. உங்கள் பவிஷ்யவாணி (தீர்க்கதரிசனம்) பலித்து விட்டதோ, என்னவோ!''

விஷயம் எப்படியிருக்கிறது! தமிழ்நாடு மட்டும் அல்ல, தென்னிந்தியாவே ஹிந்தியை எதிர்க்கிறது. இருந்தாலும் இந்த விஷயத்தை நாம் பூசி மெழுகிக் கொண் டிருக்கிறோம்!

இவ்வளவு விபரீதத்துக்கும் காரணம், புதியநிலைமை யில் புதிய ரீதியில் சிந்திக்க நாம் முற்படாததுதான். முன்னே வெள்ளைக்காரனோடுபோராடவேண்டியிருந்தது. இந்திய நெசவுத்தொழிலை அழித்த வெள்ளைக்காரனின் மாஞ்செஸ்டர் ஆலைத் துணி வியாபாரத்தை எதிர்க்கக் கதர் என்ற அம்பைக் கைக்கொண்டோம். துரோபதை யைத் துகிலுரிந்ததுபோல், "என் துணி இல்லாமல் நீ என்ன செய்வாய்?" என்று அவன் கேட்க முடியாதபடி செய்தார் காந்தி. நிராயுதபாணிகளாக இருந்த நமக்கு, அர்ஜுனனுக்குக் கண்ணன் உபதேசித்தது போல்

அவரால் உபதேசிக்க முடியவில்லை. அஹிம்ஸை ரீதியிலே போராட உபதேசித்தார். "இந்தியா முழுவதையும் என் ஆங்கிலந்தான் ஒன்றுபடுத்தியது" என்று அவன் சொன்னதற்குப் போட்டியாக, "எங்களுக்கு ஹிந்தி இருக்கிறது" என்ருர். அன்று நாம் இருந்த நிலை வேறே. கையில் அகப்பட்ட கல்லைக்கொண்டு, எதிரே உள்ள நாயை அடிக்கவேண்டும் என்பதுபோல, கிடைத்த சாதனங்களையும் முறைகளையும் கொண்டு அடிமைத் தளைகளைத் தகர்க்க முயன்ருேம். இப்போதும் அவற்றையே பன்னிப் பன்னிச் சொல்லிக்கொண்டிருப்பது சிறிதும் சரி அல்ல.

இன்று நாம் புதிய சுதந்தரக் குடியரசைப் படைத்தவர்களாக இருக்கிருேம். முன்பு பிரிட்டிஷ் இந்தியா பல மாகாணங்களைக் கொண்ட ஒரு 'காலனி' அந்தஸ்தோடு இருந்தது. அதை ஆட்சி செய்தோருக்குப் பின்பலமாயிருந்தது பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருந்த பிரிட்டிஷ் மக்களின் பிரதிநிதிச் சபையான பிரிட்டிஷ் பார்லிமெண்ட். இன்று பாரதம் பல மாகாணங்களை அல்ல, பல ராஜ்யங்களைப் படைத்த ஒரு சுதந்தரக் குடியரசு; இது பல ராஜ்யங்களின் யூனியன். நாம் இப்போது ஏற்படுத்திக்கொண்டிருக்கும் அரசியல் அமைப்பைப் பரீட்சார்த்தமானதாகவே கொள்ள வேண்டும். இதில் மத்திய சர்க்கார் மிகப் பலமானதாக அமைந்திருப்பது உண்மைதான். ஆனல், 'இவ்வளவு பிரம்மாண்டமான பிரதேசத்தில், மத்திய சர்க்காரிடமே பல அதிகாரங்கள் குவிந்திருப்பது உசிதமா, முறையா?' என்பது பற்றிய சிந்தனை இப்போதே பல அறிஞர்களின் உள்ளத்தில் தோன்றத் தொடங்கிவிட்டது. ராஜ்ய

சர்க்கார்களிடம், எவ்வளவு முடியுமோ அவ்வளவு அதிகமான அதிகாரங்கள் வந்துவிட வேண்டும் என்று நம்மில் பலர் எண்ணுகிறோம்.

பாஷா ரீதி ராஜ்யங்களை அமைத்துவிட்டு, பாலிலே மோரை உறைக்குத்துவதுபோல், சகல பாஷைகளுக்கும் மேல் ஹிந்திக் குல்லாயை எதற்காகப் போடவேண்டும்? ஒரு தண்டவாளத்தில் இரண்டு ரெயில் எஞ்சின்களை எதிர் எதிரே அதிவேகமாய் ஓடி மோதும்படி கிளப்பி விடுவது மாதிரி இல்லையா இது?

தமிழ்நாட்டுக்காரன் தன் தாய்மொழியைச் சிறப்பாய்க் கற்றாலும் கற்காவிட்டாலும் பரவாயில்லை, ஹிந்தியைச் சிறப்பாய்க் கற்றால் போதும் என்ற நிலைமையை வருங்காலத்தில் உண்டாக்கலாமா? உண்மையான ஜனநாயகம் உருவாகுமானால், அந்த நிலைமையை உண்டாக்கத்தான் முடியுமா? ஹிந்திக்காரன் தன் தாய்மொழியை மட்டும் கற்று மிக உயர்ந்த பதவியையும், நாட்டிலே செல்வாக்கையும் வசதிகளையும் உரிமைகளையும் பெற முடியும். தமிழன் தமிழை மட்டும் கற்றால் அப்படியெல்லாம் பெற முடியாது; ஹிந்தியை அவன் கற்றாக வேண்டும். இப்படிப்பட்ட ஒரு நாளை வரவேற்க நாம் தயாரா? ஆங்கிலச் சுமையைக் கீழே தள்ளி, தாய்மொழியைப் போற்றி வளர்க்க ஹிந்திக்காரனுக்கு வசதி உண்டு. தமிழனுக்கு அந்த வசதி இல்லை. ஹிந்தி வளர்வதற்கு அவனும் ஒரு கை கொடுக்கவேண்டும்! இன்று இதெல்லாம் வெறும் விளையாட்டாகத் தோன்றும். தமிழ்நாட்டில் ஹிந்தி ஒரு நாள் கால் இறங்கி வேர் விடுமானால், இது முற்றும்

உண்மையாகிவிடும். ஆங்கிலத்துக்குக் கீழே தமிழ் எப்படி அமுங்கிக் கிடந்ததோ அப்படித்தான் ஹிந்தியின் கீழும் அது அமுங்கிப் போகும்; சொல்லப்போனால் ஆங்கிலத்தின் கீழே அமுங்கியதைவிட அதிகமாகவே அமுங்கிவிடும்.

இன்றைய அரசியல் அமைப்பில் இதற்கெல்லாம் மாற்று இல்லையென்றால், இந்த அரசியல் அமைப்பின் அடிப்படையையேதான் மாற்ற முயலவேண்டும். குல்லாய் சரி இல்லை என்றால், தலையை மாற்ற முடியாது; குல்லாயைத்தான் மாற்றவேண்டும். ஹிந்தி என்ற தளையைக் கொண்டு பிணைத்துத்தான் பாரதத்தின் பல ராஜ்ய ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டுமானால், அந்த ஒற்றுமை வேண்டாமென்றே பல பிராந்திய பாஷை மக்களுக்கும் சொல்லத் தோன்றும். வேறு வழி இல்லையா, அந்த ஒற்றுமையைக் காப்பாற்ற? பல மொழி மக்களும் சம அந்தஸ்தோடு, சம வசதிகளோடு, சம உரிமைகளோடு, சம வாய்ப்புக்களோடு வளர்ந்து வாழும் வழி இல்லையா?... இந்தக் கேள்வியைக் கேட்டால், இதை மொழிப் பகைமை, மொழி வெறி என்றெல்லாம் சொல்வது முறை அல்ல; மொழி வெறி நமக்கல்ல; அவர்களுக்குத்தான் ஹிந்தி வெறி!

அபாய நிலைமை

விந்தையான ஒரு நிகழ்ச்சி இப்போது அம்பலமாகி யிருக்கிறது. ஸோவியத் தலைவர்கள் சென்னைக்கு வந்தார்களே, அப்போது சென்னை ராஜ்ய சர்க்காருக்கு, மத்திய சர்க்காரிடமிருந்து ஒரு தாக்கீது வந்ததாம். "ஸோவியத் தலைவர்களுக்குக் கொடுக்கும் வரவேற்பு, ஆங்கிலத்தில் இருக்கவேகூடாது; தமிழிலும் வேண்டாம். ஒன்று, ஹிந்தியில் இருக்கவேண்டும்; அல்லது, ருஷிய மொழியில் இருக்க வேண்டும்" என்பதே அது. அதாவது, "கூடியிருக்கிற மக்களில் சிலருக்காவது தெரிகிற ஆங்கிலம் கூடாது; அத்தனை பேருக்கும் தெரிகிற தமிழ்-வரவேற்கும் உங்களுக்கெல்லாம்தெரிகிற தமிழ் - கூடாது. வரவேற்கிற உங்களுக்கும் சரி, வந்திருக்கிற விருந்தாளிகளுக்கும் சரி, ஒரே படியாய்த் தெரியாதிருக்கிற ஹிந்திதான் உங்கள் வரவேற்புக்கு ஏற்ற பாஷை. அது வேண்டாமென்றால், விருந்தாளி களுக்கு மட்டும் தெரிந்த ருஷிய மொழியில் வர வேற்பைக் கொடுத்துவிடுங்கள்" என்பதுதான் தாக் கீதின் கருத்து.

'இதென்னடா தொல்லை!' என்று சென்னை சர்க்கார் யோசித்தார்களாம். இந்தச் சமயத்தில் கார்ப்பொரேஷனில் யாரோ சில 'முரடர்கள்' சேர்ந்துகொண்டு, "தமிழில்தான் நகர சபையின் வரவேற்பைக் கொடுக்க வேண்டும்" என்று பிடிவாதம் பிடித்தார்களாம். அப்படியே அங்கே தீர்மானமும் ஆகிவிட்டது. கார்ப்பொரேஷனின் வரவேற்புத் தமிழிலேயே தயாராயிற்று. ராஜ்ய சர்க்காரின் வரவேற்பு, இந்த இக்கட்டான நிலைமையில் தயாராயிற்ரு, தயாராகவேயில்லையா என்று நமக்குத் தெரியாது. ஆனால், இந்தச் சமயத்தில் அந்தச் சர்க்காருக்குத் திடீரென்று சமயோசிதமாக ஒரு யுக்தி தோன்றியிருக்கிறது.

'பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலும்' காட்டுவது போல, மத்திய சர்க்காருக்கும் கோபம் வராமல், மக்களுக்கும் திருப்தி ஏற்படும்படி, ராஜ்ய சர்க்கார் ஒரு வேலை செய்தார்கள். ஐலண்ட் மைதானத்தில் ராஜ்ய சர்க்காரின் வரவேற்பைக் கொடுக்க வேண்டும்; கார்ப்பொரேஷன் ஸ்டேடியத்தில் கார்ப்பொரேஷன் வரவேற்பைக் கொடுக்கவேண்டும். இது முந்திய ஏற்பாடு. இந்த ஏற்பாட்டை ராஜ்ய சர்க்கார் சட்டென்று மாற்றினார்கள். ஒரு பெரிய 'தியாகத்'துக்குத் தயாரானார்கள். என்ன இருந்தாலும் அவர்கள் மாஜி தியாகிகள் அல்லவா? கார்ப்பொரேஷனின் வரவேற்பை ஸ்டேடியத்தில் கொடுக்காமல் ஐலண்ட் மைதானத்திலே கொண்டுவந்து கொடுக்கச் சொல்லி விட்டார்கள்; தங்கள் வரவேற்பைக் கொடுக்காமலே இருந்துவிட்டார்கள். எப்படி!

இதை நான் இட்டுக் கட்டிச் சொல்லவில்லை. சிந்தாதிரிப் பேட்டையில் நண்பர் கிராமணியார் ஒரு பொதுக் கூட்டத்தில் பகிரங்கமாய்ச் சொன்னது இது. " இதன் உண்மையை எங்கே வேண்டுமானாலும் நான் நிரூபிக்கத் தயாராயிருக்கிறேன் " என்றும் அவர் அப்போது சொன்னார்.

இன்றே நிலைமை இப்படி இருக்கிறது. வருங் காலத்தில் நாடெங்கும் ஹிந்தி பரவிவிடுமானால், அந்தக் காலத்தில் நிலைமை என்ன ஆகும்? ' குட்டிச் சுவரில் முட்டிக்கொள்ள வெள்ளெழுத்தா ?' என்ற கதைதான். பழைய நிலைமையை ஊன்றிப் பார்ப்பவர்களுக்குப் புதிய அபாயம் நன்றாகப் புரியும்.

ஆங்கிலம் நாடெங்கும் பரவிய நிலையில் நம் கதி என்ன ஆயிற்று என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இன்று நம் நாட்டில் ஆங்கிலத்தின் அந்தஸ்து வேறு விதமானது. முந்தி அதற்கு இருந்த அந்தஸ்து வேறு விதமானது. முந்தி அது ஆட்சியாளரின் மொழி ; அதிகாரத்தோடு ஒட்டிய மொழி. இன்று, அதன் நிலை சரித்திர ரீதியானது ; எந்த அளவு நமக்கு அது உபயோகமா யிருக்குமோ, அந்த அளவுக்கு அதைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறோம். இந்த வித்தியாசத்தை நாம் தெளிவாக மனத்தில் பதித்துக் கொள்ளவேண்டும்.

ஆங்கிலம் ஆட்சியாளரின் பாஷையாக - அதிகார பலத்தோடு ஒட்டிய பாஷையாக - நம் நாட்டிலே பரவியபோது, என்ன நடந்தது ? பள்ளிக்கூடங் களிலும் சரி, காலேஜுகளிலும் சரி, தமிழ்ப்

பண்டிதர்'களெல்லாம் 'ஆடுசாப்பட்டி அம்மையப்ப பிள்ளை'யின் நிலையிலேயே இருந்தார்கள். அவர்களை 'ஒன்றும் தெரியாத அப்பாவிகள்' என்றே எல்லாரும் பாவித்து நடத்தினார்கள். தமிழ் எழுத்தாளர்களுக்குத் தான் என்ன மதிப்பு இருந்தது? ஒரு மதிப்பும் இல்லை. ஆங்கிலம் எழுதுகிறவனுக்குத்தான் பெரிய மதிப்பு; ஊதியமும் அதிகம். இன்றுங்கூட அந்த நிலைமை ஓரளவு தொடர்ந்து இருந்து வருவதைக் காண்கிறோம். ஆங்கிலத்தில் பேசினாலே பெருமை என்று எல்லாரும் எண்ணி வந்தார்கள். எல்லாருமே தமிழைப் புறக்கணித்தார்கள். "எனக்குத் தமிழிலே பேச வராது, ஸார்; எனக்குத் தமிழிலே எழுத வராது, ஸார்" என்று எத்தனை தமிழர்கள் பெருமையோடு சொல்லி வந்தார்கள் - வெட்கமில்லாமல் சொல்லி வந்தார்கள்! அவ்வளவு தூரம் ஆங்கிலத்தைக் கரைத்துக் குடித்துவிட, அதிலே ஊறிவிட, தமிழை அடியோடு மறந்துவிட நமக்கெல்லாம் ஆசையாயிருந்தது. சுருக்கமாய்ச் சொன்னால், சோற்றுக்கு, பெருமைக்கு, பணத்துக்கு, புகழுக்கு எல்லாவற்றுக்குமே 'ஆங்கிலமே சாலும்; தமிழ் வேண்டாம்' என்ற நிலையை அடைந்திருந்தோம். தமிழிலே நாலு வார்த்தை பேசவோ எழுதவோ திறமை உண்டு என்று ஒருவன் சொல்லிக்கொள்வதுகூடக் கௌரவக் குறைவாகத் தோன்றியது பலருக்கு. இந்தப் பழக்கங்களாலும் மனோபாவத்தாலும் நாம் அடைந்த நஷ்டம் அளவற்றது. எளிதிலே அந்த நஷ்டத்தை ஈடுசெய்ய முடியாமல் இன்று தத்தளித்துக்கொண்டிருக்கிறோம். அதை ஈடு செய்து தலை நிமிர - தமிழை நவீன விஞ்ஞான இலங்கியங்களெல்லாம் கொண்ட உன்னதச்

செல்வக் களஞ்சியமாகச் செய்துகொண்டு நிமிர்ந்து நிற்க - நமக்கு இன்னும் எவ்வளவு காலம் பிடிக்கப் போகிறதோ, தெரியவில்லை.

இரண்டாயிரம் வருஷங்களாகவோ அதற்கும் மேலாகவோ இலக்கிய வளங்கொழித்து, அந்த அந்தக் காலத்துக்கு ஏற்றபடி செழிப்புற்று வளர்ந்து முழுமதி போல் ஒளி செய்துகொண் டிருந்த தமிழைப் பிடித்த ஆங்கிலம் என்ற கிரகணம் விட்டு விலகத் தொடங்கி விட்டது என்றும் இனி விடிவு காலம் வந்து விடும் என்றும் ஆசையுடன் நாம் நம்பி நிற்கும் இந்த வேளையிலே, ஹிந்தி நம் மீது வந்து சுமப்பது என்ன நியாயம்? சென்ற சில ஆண்டுகளாகத் தமிழை நாம் தண்ணீர் விட்டு வளர்க்கவில்லை; கண்ணீர் விட்டு வளர்த்து வருகிறோம். இளம்பயிரை ஆடு மேயவிடுவது போல இன்று அதை நெருக்கலாமா?

யுக சந்தி போன்றது இன்றைய நிலை. தமிழின் மென்னியைப் பிடித்துக்கொண் டிருந்த ஆங்கிலத்தின் பிடி நழுவிக்கொண் டிருக்கிறது. ஹிந்தி என்ற கடுவாய் தன் வாயைப் பிளந்துகொண்டு எதிரே வந்து நிற்கிறது; இன்னும் கவ்வவில்லை. இந்த நிலையில், தமிழ் பயின்ற புலவருக்கும் பிறருக்கும் ஏதோ சிறிது மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆங்கிலத்திலேயே பேசியும் எழுதியும் வந்த பிற பலருங்கூட இன்று தமிழிலே பேசவும் எழுதவும் முயல்கிறார்கள். தமிழறிந்தோரைச் சர்க்கார் கூடத்தான் கௌரவிக்கிறார்கள். இதை எல்லாம் கண்டு நாம் தலை கனத்து அகமகிழ்ந்து ஏமாந்துவிடக் கூடாது. 'இனி எதுதான் வரட்டுமே; நம் தமிழை அசைக்க

முடியாது' என்று இறுமாந்து நிற்கக் கூடாது. "அட ஹிந்தி வந்தால் வரட்டுமே; அதையும் கொஞ்சம் கற்று விட்டுப்போகிறோம். தமிழன் கற்க முடியாதது எது, ஸார், இருக்கிறது?" என்று சொல்லிக்கொண் டிருக்கக் கூடாது.

ஹிந்தியைப் பொது மொழியாக்க வேண்டும் என்கிறார்கள். ஆங்கிலத்தின் இடத்தை ஹிந்தி பிடித்துக்கொள்ள வேண்டும் என்கிறார்கள். ஏன்; "ஆங்கிலத்தை விட அதிக விரிவாக இந்தியா எங்கும் உபயோகப்படும் தேசிய பாஷை என்ற நிலையை ஹிந்தி பெற்று விடும் காலம் ஒன்று நிச்சயமாய் வரத்தான் போகிறது" என்றே, ஆர். கே. படேல் என்பவர், "ஆர்கனைஸர்' என்ற பத்திரிகையின் 26—1—'56 'ஒற்றுமை மல'ரில் எழுதி யிருந்தார். இவர் ஹிந்தி வெறி பிடித்து இப்படி எழுதவில்லை. வெகு நிதான மாக, நம்பிக்கையோடு, ஹிந்தி உற்சாகிகளுக்கு, 'பொறுத்திருங்கள்; காலம் வரும். பொறுத்தார் பூமி ஆள்வார்' என்று கையமர்த்தும் தோரணையிலேயே எழுதினர். இந்தியாவின் சகல யூனிவர்ஸிட்டிகளிலும் ஹிந்தியைப் போதன பாஷை (மீடியம் ஆவ் இன்ஸ்ட்ரக்ஷன்) ஆக்கி விட வேண்டும் என்று, பணிக்கர் போன்ற சிலர் சொல்லுகிறார்கள். ஏனென்றால், பாரதத்தின் எந்த மூலையில் உள்ளவர்களும் அதன் எந்த மூலைக் காலேஜிலும் போய்ப்படிக்க அப்போது தான் வசதி ஏற்படுமாம்! எல்லா ஹைக்கோர்ட்டு களிலும் ஹிந்தியே வந்துவிட வேண்டுமாம். சட்டங்க ளெல்லாம் ஹிந்தியிலேயே அமைய வேண்டுமாம். இப்படி யெல்லாம் ஒவ்வொன்ருய் ஹிந்தி மயமாக்கி

விட்டால், அப்புறம் என்ன மிச்சம் என்று தெரியவில்லை. இவர்களெல்லாம் ஏதோ அரை குறையாகச் சிந்தனை செய்து இப்படிப் பேசவில்லை. திட்டமாக யோசித்து முடிவு செய்தே பேசுகிறார்கள். ஹிந்தி பக்தர்களான வேறு பலரோ, குழறி மெழுகுகிறார்கள். சிலர் தங்களுக்குப் புரிந்தும் வெளிக்கு வஞ்சகமாய்ப் பூசி மெழுகுகிறார்கள் ; சிலர் தங்களுக்குப் புரியாமலே, அறியாமலே மெழுகுகிறார்கள். இப்படிக் குழறி மெழுகுகிறவர்களால் தான் அதிக அபாயம் ஏறபடும். ஏனென்றால் இவர்களுக்குள் ஹிந்தி மொழிக்காரர் மட்டும் அல்ல ; மற்ற மொழிக்காரரும் - தமிழருந்தான் - இருக்கிறார்கள். 'எப்படியும் ஹிந்தி வரத்தான் போகிறது ; விதியே என்று அதைப் பணிந்து வரவேற்பதே புத்திசாலித் தனம்' என்று எண்ணும் லௌகிக சாமர்த்தியசாலிகளும் இருக்கிறார்கள். இந்தக் கட்டுரைகளைப் பத்திரிகையில் எழுதி வரும் காலத்தில், இவற்றைப்பற்றிக் கேள்விப்பட்ட - கேள்விப்பட்டவர்தான் ; படித்தவர் அல்ல - என் நண்பர் ஒருவரே (ஆங்கிலத்திலும் தமிழிலும் அருமையாய் எழுதக் கூடியவர் ; சம்ஸ்கிருதம் பயின்றவர் ; ரஸிகர் ; அப்பா வைத்துவிட்டுப் போன பணம் நிறைய உள்ளவர்) இப்படி என்னைக் குறித்துச் சொன்னாராம் : "இவனெல்லாம் நம் பையன்களைப் படிக்க வொட்டாமல் கெடுத்துக் குட்டிச் சுவராக்குகிறானே தவிர, வேறொன்று மில்லை." ஹிந்தி படிப்பதுதான் படிப்பு என்று அவருக்கு எப்படித்தான் தோன்றியதோ ! எனக்குப் புரியவில்லை.

இவையெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். பாரத அதிகார பீடத்தில் உள்ளவர்கள் ஹிந்தியைப் பிற

மொழிப் பிரதேசங்களில் எவ்விதம் புகுத்த விரும்புகிறார்கள் என்று கவனிப்போம். சிறிது சிறிதாகத்தான் புகுத்த விரும்புகிறார்கள். "ஒரு மொழியைக் கெடுத்துத் தான் மற்றொரு மொழி வளரும் என்பது சுத்தத் தவறு. மொழியின் அடிப்படையிலே ராஜ்யங்களை அமைப்பது சரியல்ல என்று தெளிவாகிறது" என்றெல்லாம் நேருவே சொல்லத் தொடங்கி விட்டார். பாரதத்தின் ஒற்றுமைதான் முக்கியம் என்று எல்லாரும் உபதேசிக்கிறார்கள். எந்த அடிப்படையிலே ஒற்றுமையை உருவாக்குவது ; வளர்ப்பது ; காப்பாற்றுவது ?

ஹிந்தி வருவதால், மற்ற மொழிகள் கெடமாட்டா என்று சொல்வதற்கு அர்த்தமே கிடையாது. ஆங்கிலத்தால் இந்திய மொழிகள் கெடவில்லை ; ஆனால் நவீனத் தேவைகளுக்கு ஏற்றபடி வளராமல் அமுங்கியே போய்விட்டன. கையிலே குண்டாந் தடியை வைத்துக் கொண்டு, எதிரே வந்து நின்று, "தமிழிலே எழுதாதே; தமிழிலே பேசாதே ; தமிழை வளர்க்காதே" என்று எந்த ஆங்கிலேயனும் எந்தத் தமிழனையும் அந்த நாளில் தடுக்கவில்லை. ஆட்சி மொழியாக, அதிகாரத்தோடு ஒட்டிய மொழியாக இருந்தது ஆங்கிலம். அதனால்தான் தமிழ் ஊட்ட மற்று, நவீன வலுவைத் திரட்டிக் கொள்ளாது, பழைய வளர்ச்சியோடு அமைந்து கிடந்து விட்டது. ஹிந்தி வருமானால், அதே மாதிரி கதிதான் தமிழுக்கு மீண்டும் ஏற்படும். சோற்றுக்கும் பெருமைக்கும் பதவிக்கும் புகழுக்கும் பணத்துக்கும் ஹிந்தி தான் உதவும் என்ற நிலை வந்தால், தமிழ் எப்படித் தலை நிமிர முடியும் ? ஹிந்தி இன்று ஆங்கிலத்தின்

இடத்தைப் பிடித்துக் கொள்ளும் நிலையில் இல்லை என்பது உண்மை. அப்படியிருந்தும் அந்த நிலையை இப்போதே ஏற்படுத்திவிடத் துடிக்கிறார்கள் ஹிந்தி மொழிக்காரர்; ஹிந்தியைப் பரப்பிக்கொண்டே, பிராந்திய மொழிகளையும் வளர்க்கப் பாடுபடுவதாகச் சொல்லுகிறார்கள். களையை வளரவிட்டுக்கொண்டே, பயிருக்கும் எருவிடுகிறோம் என்பதற்கு ஏதாவது அர்த்தம் உண்டா? ஆட்சி மொழியாக, அதிகார பலத்திலே ஒட்டிய மொழியாக ஹிந்தி பரவினால், ஆங்கிலத்தின் இடத்தை அது பிடிக்கத்தான் பிடித்துக் கொள்ளும். அப்போது பழையபடி தமிழ்ப் புலவர்கள் மூலைக்குத்தான் போகவேண்டி வரும்; தமிழ் பேசுவோரும் எழுதுவோரும் மதிப்பிழந்துதான் போவார்கள்; தமிழ் போதனை மொழியாகாமல் நலியும். பச்சையாகச் சொன்னால், ஹிந்திச் சாம்ராஜ்யத்துக்கு உட்பட்ட ஒரு நாடாகவே தமிழகம் அடங்கிவிடும். முன்னெல்லாம் ஒன்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு, "பிரிட்டனிலே வேலை அகப்படாமல் போன டாம், டிக், ஹாரி என்ற பாமரனெல்லாம் நம் நாட்டுக்கு ஜில்லாக் கலெக்டராக வந்து விடுகிறான். இங்கே யூனிவர்ஸிட்டி படிப்புப் படித்த பட்டதாரியெல்லாம் அவனுக்குக் கீழே அடங்கி வேலை செய்யவேண்டியிருக்கிறது" என்று சொல்லுவார்கள். இதே போன்ற நிலைதான், ஹிந்தியால் பிற மொழிப் பிராந்தியங்களில் ஏற்பட்டு விடும்.

இதெல்லாம் மிகைப் படுத்திய சித்திரம் போலக் கற்பனை யற்றவருக்குத் தோன்றும்; சிலருக்குச் சிரிப்பு மூட்டவும் கூடும். அவர்களைப் பற்றி நாம் இரங்குவதைத் தவிர, வேறு வழியில்லை. இன்று நாம் அயர்ந்திருந்து

விட்டு, நம்முடைய பின் சந்ததிகள் தவிக்க விடுவது மதியீனமாகும்; துரோகமுமாகும்.

“ஆங்கிலம் போக வேண்டும்; அதன் இடத்தில் ஹிந்தி வர வேண்டும்” என்றார்களே, அது ஏன்? ஆங்கிலம் அந்நிய பாஷையாம். சரி, தமிழன் சம்பந்தப்பட்ட மட்டும் ஹிந்தியும் அப்படியே அவனுக்கு அந்நிய பாஷை தான். ஆங்கிலத்தால், ஹிந்திக்காரனுக்கு-மற்றவர்களுக்குமே-எவ்வளவு கஷ்டமோ அவ்வளவு கஷ்டம் ஹிந்தியால் தமிழனுக்குந்தான் ஏற்படும். பாரதத்தின் ஒற்றுமைக்காக, ஹிந்தியை எல்லாரும் கற்பது அவசியம் என்றால், காமன்வெல்த்தின் ஒற்றுமையையும் உலகத்தின் தொடர்பையுமேகூடப் பலப்படுத்திகொள்ள ஆங்கிலம் பேருதவியாக இருக்குமே; அதை ஏன் விட வேண்டும்?

பாகிஸ்தானில், ஒரு முஸ்லீம் ஜனாதிபதியாகலாம் என்று அரசியல் சட்டத்தில் விதி ஏற்படுத்தினார்கள். இதைக் கேட்டவுடனே, அங்கே ஹிந்துக்களும் பிறரும் இரண்டாந்தரப் பிரஜைகள் ஆகிவிட்டதாக ஆத்திரப் பட்டோம். ஒரே ஓர் ஆள்தான் ஜனாதிபதி பதவிக்கு வர முடியும். மதம் காரணமாக அந்த ஒரே ஓர் ஆளின் உரிமை பறி போவது கூட அநியாயம் என்றால், பாரதத்திலே ஹிந்திக்காரர்களைத் தவிரப் பிற மொழியினரெல்லாம் மொழி காரணமாக இரண்டாந்தரப் பிரஜைகள் ஆகிவிடலாமா? ஹிந்தியை எல்லாரும் கற்றுக் கொண்டால், ஹிந்திக்காரர்களுக்குச் சரிசமமாகப் பதவியும் பெருமையும் நாம் அடைந்து விடலாமே என்றால், பாகிஸ்தானில் எந்த ஒருவர் ஜனாதிபதி பதவிக்கு வர

ஆசைப்படுகிருரோ அந்த ஒருவர் மட்டும் முஸ்லீம் ஆகி விட்டால் போகிறது! அப்புறம் அவர் அங்கே 'நவா' பாகச் சிம்மாசனம் ஏறி விடுகிருர். அது வெகு சுலபம்; அந்நிய மொழி ஒன்றைக் கற்றுக்கொண்டு பிராணனை விடுவது போல் அவ்வளவு கஷ்டமான காரியம் அல்ல. ஆனல், இப்படியெல்லாம் பேசுவது சுத்த அபத்தம். மதம் காரணமாகவோ, மொழி காரணமாகவோ, வேறு ஆசாரங்கள் காரணமாகவோ, ஒரே நாட்டுப் பிரஜை களுக்குள்ளே ஏற்றத் தாழ்வுகளுக்கு-அந்த உணர்ச் சிக்கே யானுலும்-இம்மி யளவே யாயினும் இடம் அளிக் கக்கூடிய எந்த ஏற்பாடும் அரசியல் ரீதியிலே இருக்கக் கூடாது. அது நியாயம் அல்ல; நல்லது அல்ல; ஆரோக் கியம் அல்ல.

பிராந்திய மொழிகளின் பாதுகாப்புக் காகவும், மொழி ரீதியில் பிரதேச எல்லையைக் காப்பாற்றுவதற் காகவும் பாடுபடுகிறவர்களைப் பற்றிப் பேசும்போது, 'வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ' என்ற தோர ணையில் 'பாஷை வெறியர்கள்' என்றும் 'பாரத ஒற்று மையைக் குலைப்பவர்கள்' என்றும் என்ன என்னவோ சிலர் குறை கூறுகிருர்கள். மொழி என்பது, நாகரி கத்தின் ஆணிவேர். மொழி இல்லாவிட்டால், மனிதன் விலங்கு நிலையில் இருந்திருக்க வேண்டியதுதான். சமு தாயம், சட்டம், கலை, இலக்கியம் சகலத்துக்கும் மொழி தான் சாதனம். பிறந்தது முதல் புழங்கிவரும் தாய் மொழி எந்த மக்களுக்குத் தங்கள் வாழ்க்கையின் முக்கிய மான சகல காரியங்களுக்கும் பயன் படவில்லையோ அந்த மக்கள், பிறருக்குக் கீழ்ப்பட்டவராகவே இருப் பார்கள். ஒரு மொழி மக்களுக்கும் இன்னெரு மொழி

மக்களுக்கும் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்ருல், ஒரு மொழிக்கு உயர்ந்த அந்தஸ்தும் மற்றதற்குத் தாழ்ந்த அந்தஸ்தும் உள்ள நிலையில் ஏற்படாது. இன்று ஆதிக்க பலத்தைக் கொண்டும் மதிமயக்கும் வார்த்தைகளைச் சொல்லியும் நாடெங்கும் ஹிந்தியைப் புகுத்தி விடலாம். இது புதிய பரீட்சை-சுதந்தர, சுயராஜ்யப் பரீட்சை-நடக்கும் காலமாதலால், ஒரு வேளை இது சாத்திய மாகலாம். பின்னுல், இதனுல், மக்களுக்கு மக்கள் பெரிய மனத்தாங்கல்தான் ஏற்படும். பாரதத்தின் ஒற்றுமை ஒரே மொழியால்-ஹிந்தியால்-நிலைக்காது. பல மொழி களும் சுதந்தரமாய், சுயவளர்ச்சி பெற்று, சம அந்தஸ் தோடு ஒன்றுக்கொன்று உதவியும் விட்டுக்கொடுத்தும் கூட்டுறவு கொண்டால்தான், அந்த ஒற்றுமை நிலைக்கும். ஆண்டானும் அடிமையும் ஒற்றுமைப் பட மாட்டார்கள்.

மூன்று பிரச்னைகள்

"ஒரு நாட்டை நீங்கள் அரசாள வேண்டி வந்தால், முதல் வேலையாக என்ன செய்வீர்கள்?" என்று கன்ஃப்யூஷியஸ் என்ற சீன ஞானியை யாரோ ஒரு சமயம் கேட்டார்.

"முதல் முதலாக, நிச்சயமாகப் பாஷையைத்தான் சீர்திருத்துவேன்" என்று பதிலளித்தார் ஞானி.

இந்தப் பதிலைக் கேட்டவர்கள் வியப்படைந்தார்கள். "இதற்கும் ராஜ்யம் ஆளுவதற்கும் என்ன சம்பந்தம்? ஒரு சம்பந்தமும் இல்லையே. ராஜ்யம் ஆளப் பாஷையை எதற்காகச் சீர்திருத்த வேண்டும்?" என்று அவர்கள் கேட்டார்கள்.

ஞானி சொன்ன பதில் இதுதான்: "பாஷை சரியானபடி இல்லாவிட்டால், நினைத்ததைச் சொல்ல முடியாது; நினைத்ததைச் சொல்லாவிட்டால் செய்ய வேண்டியதைச் செய்ய முடியாது; செய்ய வேண்டியதைச் செய்யாவிட்டால், ஒழுக்கமும் கலைகளும் நலியும்;

ஒழுக்கமும் கலைகளும் நலிந்தால், நீதி வழுவிப் போய் விடும்; நீதி வழுவினால், ஜனங்கள் திக்கற்றவர்களாய்க் குழம்பித் தவிப்பார்கள். ஆகவே மற்ற எதையும் விடப் பாஷையைச் சீர்திருத்துவதுதான் மிகவும் முக்கியம்.''

ஆனால், இன்று நம் நாட்டிலே அரசாட்சி செய்யும் 'ஞானி'களோ, "பாஷையா! அது ஒன்றும் பிரமாத மில்லை. ஒற்றுமைதான் முக்கியம். ஒற்றுமை, ஒற்றுமை, ஒற்றுமை" என்கிறார்கள். ஆனால், ஹிந்தி ஜபத்தை மாத்திரம் விடவில்லை.

ஹிந்தியின் நிலை பற்றியும் பிராந்திய பாஷைகளின் அந்தஸ்துப் பற்றியும் ஒருவர் சொன்னபடி இன்னொருவர் சொல்லவில்லை; ஒரு நாள் சொன்னபடி இன்னொரு நாள் சொல்லவில்லை; ஓரிடத்தில் சொன்னபடி இன்னோ ரிடத்தில் சொல்லவில்லை.

பதினான்கு பாஷைகளைப் பாரதத்தின் தேசிய (நேஷனல்) பாஷைகளாக அரசியல் அமைப்புச் சட் டத்தில் அங்கீகரித்திருக்கிறார்கள்.

"பதினான்கும் தேசிய பாஷைகள்தான். அவை ஒன்றுக்கொன்று சமம்; அவற்றுக்குள் ஏற்றத் தாழ்வே இல்லை. ஆனால், ஹிந்தி மட்டும் மத்திய சர்க்காரின் துரைத்தன (அஃபிஷியல்) பாஷை. பிராந்திய பாஷை களே ராஜ்ய சர்க்கார்களின் துரைத்தன பாஷைகள்" என்று ஒரு மூச்சில் சொல்லுகிறார்கள்.

அடுத்த மூச்சில், "இன்று ஆங்கிலம் பெற்றிருக்கும் ஸ்தானத்தை-ஏன், அதையும்விட விரிவான ஒன்றையே பாரதம் முழுவதிலும் ஹிந்தி பின்னொரு காலத்தில்

பெற்றுவிடப் போகிறது" என்கிறார்கள். "பின்னொரு காலத்தில் என்ன? இன்றே அது அந்த நிலையை அடைய வேண்டியதுதான். ஒற்றுமையைக் குலைக்கும் தேசத் துரோகிகள் தான் அதைத் தடுத்துக்கொண் டிருக்கிறார்கள்" என்பது போலப் பேசுகிறவர்களும் இருக்கிறார்கள்.

"ஹிந்தியை ஏதோ கொஞ்சம் பேசவும் எழுதவும் போதிய அறிவு (வொர்க்கிங் நாலட்ஜ்), பிராந்திய பாஷைக்காரர்களுக்கு ஏற்பட்டால் போதும்" என்று ராஷ்டிரபதி ராஜேந்திரப் பிரசாத் ஒரு சமயம் சொன்னார்.

ஆனால், சில நாளைக்கெல்லாம் நேரு என்ன சொன்னார், பாருங்கள்; "உர்தூவைக் கண்டு ஹிந்திக் காரர்கள் அஞ்சுகிறார்களே; இது சரியல்ல. உர்தூவால் ஹிந்தி கெடாது. ஹிந்திக்குத்தான் தேசிய பாஷை என்ற உயர்ந்த ஸ்தானம் அளித்திருக்கிறோமே. அதை உர்தூ எப்படிக் கெடுக்கமுடியும்?" என்று சொன்னார். **'தேசிய பாஷை என்ற உயர்ந்த ஸ்தானம் ஹிந்திக்கு உரியது'** என்றே திட்டமாக அவர் சொன்னார். 'துரைத் தனப் பாஷை' என்று அவர் அதைக் குறிக்க வில்லை.

இவற்றை யெல்லாம் பார்க்கும்போது என்ன தெரிகிறது? நம்முடைய பெருந் தலைவர்களுக்கே, இந்த விவகாரத்தில் தெளிந்த சிந்தனை இல்லை என்றுதான் புலனாகிறது. அவர்களுக்கு ஒரே குழப்பமா யிருக்கிறது. 'தென்னை மரத்துக்குத் தேள் கொட்டப் பனைமரத்துக்கு வைத்தியம் நடந்ததாம்' என்ற கதையாக, ஒன்று கிடக்க ஒன்று பரிகாரம் தேடுகிறார்கள். 'பாரதத்தைப் பாஷாரீதி ராஜ்யங்களாகப் பிரித்ததே தவறு?' என்று நேருவே

சந்தேகப்படுகிறார். இதை விட்டு இரண்டு மூன்று பாஷைக்காரர்களைப் பிணைத்து ஐந்தே ஐந்து பெரிய மண்டலங்களாகப் பிரித்துவிடலாமோ என்றெல்லாம் யோசிக்கிறார்கள். "பாஷை விவகாரத்தில் பத்து வருஷங்களுக்குத் தாற்காலிகப் போர்நிறுத்தம் (ட்ரூஸ்) ஏற்பட்டால் தேவலை" என்கிறார் நேரு.

இன்று நம்முடைய பிரச்னைகள் என்ன என்பதை நாம் தெளிவாக நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவற்றுக்கு நாம் சரியான பரிகாரங்களை வகுக்க முடியும். பாஷை சம்பந்தப்பட்ட மட்டும் பாரதத்தின் பிரச்னைகள் எவை? அவற்றோடு ஒட்டிய பிற பிரச்னைகள் எவை? இரண்டு வகையையும் சேர்த்தே நாம் கவனிக்க வேண்டும்.

பெரும்படியாக, மூன்று வகையாக அந்தப் பிரச்னைகளைப் பிரிக்கலாம்:

(1) பாரதத்தின் ஒற்றுமை;

(2) பாஷைகளின் நவீன வளர்ச்சி;

(3) ஆங்கிலத்தின் நிலை.

முதலாவதாக, பாரதத்தின் ஒன்றுமையை, எல்லாப் பகுதிகளிலும் ஒரே பாஷை நுழையச் செய்வதால் காப்பாற்றிவிட முடியாது. ஒற்றுமைக்குப் பொதுவான நோக்கங்கள் வேண்டும்; பொதுவான சம உரிமைகளும் கடமைகளும் வேண்டும்; பரஸ்பர லாபங்கள் வேண்டும்.

முன்னே பஞ்சாப் சிங்கம் லாலா லஜபதிமீது அடி விழுந்தபோது நம் ஒவ்வொருவர் மீதும் அந்த அடி பட்டதுபோல் உணர்ச்சி கொண்டோமே; ஏன்?

ஆனந்தபவனில் மோதிலால் நேரு இறந்தபோது, நம் ஒவ்வொருவர் குடும்பத்திலும் துக்கம் ஏற்பட்டது போலக் கண்ணீர் விட்டோமே; ஏன்? காந்திஜி சாபர் மதியில் சிறைப்பட்டபோது பாரதத்தின் ஆத்மாவே சிறைப்பட்டதுபோல மனம் பதைத்தோமே; ஏன்? அன்று இமயம் முதல் குமரிவரைக்கும் ஒரே லட்சியம் இருந்தது. நம் அனைவருக்கும் உரியதாக இருந்தது அந்த லட்சியம். நம் அனைவரையும் அது ஒன்று படுத்தியது.

சொந்த அநுபவம் ஒன்றை இங்கே சொல்லு கிறேன். என் அநுபவம் என்பதற்காக அல்ல; இந்த அநுபவம் எல்லாருக்குமே அந்த நாளில் ஏற்பட்டது என்பதற்காகவே. அப்போது, நான் 'ஊழியன்' வாரப் பத்திரிகையில் துணை ஆசிரியனாக இருந்தேன். லாலாஜி மாண்டார் என்ற செய்தி வந்தது. ஆசிரியரால் தலையங்கம் எழுத முடியவில்லை. "நீங்களே எழுதி விடுங்கள்" என்று என்னைப் பணித்தார். நான் எழுத உட்கார்ந்தேன். மாலையில் இயலவில்லை. விடிய இரண்டு நாழிகைக்கு விளக்கைப் போட்டுக்கொண்டு உட்கார்ந் தேன். எழுதத் தொடங்கினேன். எழுதி முடிக்குமுன் கண்ணீர் சொரிந்துவிட்டேன். அந்தத் தலையங்கத்தின் வாசகத்திலே இன்றும் அந்தக் கண்ணீரைக் காணலாம். பாரதத்தின் விடுதலை என்ற ஒரே லட்சியத்துக்காக, நாடெங்கும் பல மொழியினரும் - ஹிந்திக்காரர் மட்டும் அல்ல - பல விதமாய்ப் பாடுபட்டோம்; பல துறையி னரும் பல தொழில்காரரும் பாடுபட்டோம். 'இந்தக் கைதானே ஆத்திரத்துடன் எழுதிக் கிளர்ச்சிக்குப் பிறரைத் தூண்டிவிட்டது' என்று எண்ணி என்னைப்

போன்ற பத்திரிகைக்காரர் சிறை சென்றோம்; ஆசிரியர்கள், லாயர்கள், தொழிலாளர்கள், வியாபாரிகள், உழவர்கள், மாணவர்கள் எல்லாரும் சிறை சென்றோம். ராய. சொக்கலிங்கன் அவர்களும் ரங்கநாதனும் ஒரே கைவிலங்கில் தளையுண்டார்கள். (உண்மையிலே அப்படிப் பிணைத்துத்தான் எங்களைச் சிறைக்கு அழைத்துச் சென்றார்கள்!) அந்த விலங்குதான் நம் எல்லாரையும் அன்று ஒற்றுமைப்படுத்தியது. அதை முறித்தெறிய ஒற்றுமைப் பட்டோம். விலங்குடன் சென்றபோது, நமக்கு ஒரு வேதனை ஏற்பட்டது; அதிலே விவரிக்க முடியாத ஓர் இன்பமும் - உள்ளப் பரவசமும் - இருந்தது. 'உயிரே போனாலுந்தான் போகட்டுமே' என்ற ஒரு துணிச்சல் நமக்கு ஏற்பட்டது. இன்று நமக்கு-என்னையே சொல்கிறேனே; எனக்கு - அப்படி ஓர் உற்சாகம் இல்லை; ஏன்?

'விலங்கு நீடூழி வாழ்க!' என்றோ, 'பழைய விலங்கு போய்ப் புது விலங்கு வருக, வருக!' என்றோ கருதி மனங் கிளர்ந்து நாம் அன்று பரவசம் கொள்ளவில்லை.

மகா புத்திமானன ராஜாஜிக்கே இப்போதுதான் உண்மை புலப்பட் டிருக்கிறது. ஆனாலும், அவரையும் கொஞ்சம் பழைய வாசனை ஒட்டிக்கொண் டிருக்கிறது. ஹிந்தியைத் தமிழ் நாட்டில் கட்டாயமாய்ப் புகுத்த முன்னொரு நாள் முயன்ற அவர், இன்று "ஆங்கிலமே இருக்கட்டுமே" என்கிறார். ஆனாலும், வியாபாரத்துக்கும் கைத்தொழிக்கும் எல்லாருக்கும் ஹிந்தி வேண்டுமாம்! ஏனோ? 'குழந்தையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டிவிடுவது போல ராஜாஜி எதற்காக இப்படிப் பேசவேண்டும்! அவர் பெரியவர்.

ஆனாலும், அரசியலுக்கே உதவக்கூடிய ஆங்கிலம், கைத்தொழிலுக்கும் வியாபாரத்துக்கும் மட்டும் ஏன் உதவாது என்பதுதான் நம்மைப் போன்றவருக்குப் புரியவில்லை. இன்று அப்படி அது உதவ வில்லையா?

கிழக்கிந்தியக் கம்பெனிக்காரன் சுமார் ஆயிரம் துபாஷிகளை வைத்துக்கொண்டுதான், தன் காரியங்களைச் சாதித்துக்கொண் டிருந்திருக்கிறான். பின்னால் நாடெங்கும் பிடித்துக்கொண்டதும் யோசித்திருக்கிறான். நாடெங்குமே பல லட்சக் கணக்கான துபாஷிகளைத் தனக்கு ஏற்படுத்திக்கொள்ளும் தோரணையிலே எங்கும் ஆங்கிலத்தைப் புகுத்திவிட்டான். அந்த முறை இன்று பலிக்காது. இன்று ஜனநாயகப் பயிர் முளை விட்டு விட்டது. அங்கங்கே ஓட்டு வாங்கிப் பொதுஜனத் தலைவர்கள் ஆட்சி ஏற்கிறார்கள். ஹிந்தி தெரிந்தவர்கள் தான் தேர்தலிலே நிற்கலாம் என்று சட்டம் செய்ய முடியுமா? ஹிந்தி தெரியாதவர்கள் பதவிக்கு வராதபடி தடுக்க முடியுமா?

ஒன்று மட்டும் நிச்சயமாய்ச் சொல்லலாம். ஒரு பாஷைக்கு ஏற்றமும் பிற பாஷைகளுக்குத் தாழ்வும் உண்டாகச் செய்யும் ஒரு முறையால், பாரதத்தின் ஒற்றுமை வலுப்படாது; அதன் பிளவுகளே அதிகரிக்கும். உருவான காரியங்களின் மூலந்தான் பாரதத்தின் ஒற்றுமை வளரும்; வலுப்படும்; நீடிக்கும்.

இரண்டாவதாக, பாஷைகளின் நவீன வளர்ச்சி எப்படி உண்டாகும்? பழைய இலக்கியப் பெருமைகளோடு அமைந்து கிடந்தால், எந்த மொழியும் வளராது. அந்த நாள் வாழ்க்கை வேறே; இந்த நாள் வாழ்க்கை

வேறே. அந்த நாள் கருத்துக்கள் வேறே; இந்த நாள் கருத்துக்கள் வேறே. புதிய வாழ்க்கைக்கும் புதிய கருத்துக்களுக்கும் ஏற்ற இலக்கியங்கள் சிருஷ்டியாக வேண்டும்; நவீன விஞ்ஞான நூல்களெல்லாம் வர வேண்டும். அப்போதுதான் எந்தப் பாஷையும் முன்னேறும். இந்தக் காரியங்களுக்கான சூழ்நிலைகள் ஏற்படவேண்டும்; முயற்சிகள் நடக்கவேண்டும். ஆனால், இத்தனைக்கும் வாழ்வு சிறக்கவேண்டும். வாழ்வு சிறந்தால் பாஷை வளரும்; பாஷை வளர்ந்தால் வாழ்வு சிறக்கும். இது புதிர் அல்ல; உண்மை. வாழ்வும் மொழியும் ஒன்றுக்கொன்று உதவுகின்றன; ஒன்றை ஒன்று வளர்க்கின்றன. பாஷையின் இயல்பை அறிந்து, இயல்பான முறையில் அது வளரவிட வேண்டும். மூச்சு முட்டிப் போனவனுக்குப் பயிற்சி கொடுப்பது போல, செயற்கை முறையால் பாஷை வளர்ந்துவிடாது. 'பஜகோவிந்த' பஜனைபோல, 'பாஷை! பாஷை!' என்று பஜனை செய்வதாலும் அது வளர்ந்துவிடாது. விளை நிலத்துக்குக் களையெடுத்து எருவிடுவது போலத்தான் உயிருள்ள மொழியை வளர்க்க நாம் முயலவேண்டும். பாரதத்தில் பிரதேசம் பிரதேசமாய் உள்ள அத்தனை பாஷைகளும் வளர்ந்தால்தான், அத்தனை மக்களும் சிறப்படைந்தால்தான், பாரதம் சீரும் சிறப்பும் பெறும்.

மூன்றாவதாக, பாரதத்தில் ஆங்கிலத்தின் நிலை என்ன? வருங்காலம் என்ன? இன்றுவரைக்கும் ராஜாங்க பாஷையாக அது இருந்து வருகிறது. அந்நியனின் மொழிதான்; ஆனால், அந்நியனின் ஆதிக்க பலத்தோடு இன்று அது ஒட்டிக்கொண் டிருக்கவில்லை.

தேவையை எண்ணியே அதை இன்னமும் நாம் பயன் படுத்திக்கொண்டு வருகிறோம். முன்னே அது நம் மொழிகளையெல்லாம் அமுக்கி வைத்ததுபோல, இனிச் செய்யாது; இப்போது அதைக் கண்டு நாம் அஞ்ச வேண்டியதில்லை. தேவையுள்ள வரையில், வசதியான முறைகளில், இனியும் அதை ஏன் நாம் பயன்படுத்திக் கொண்டு வரலாகாது? மேல் படிப்புக்கெல்லாம் - விஞ்ஞானம், யந்திர நுட்பங்கள், நவீனக் கலைகள், ராஜீய பொருளாதார தத்துவங்கள் இவற்றை அறிவதற் கெல்லாம் - இன்றும் உதவுவது அதுவே. உலகத்தோடு ஒட்டி உறவுகொள்ள உதவும் சர்வதேச மொழியாகவும் நமக்குப் பயன்படுவது அது. சிந்தித்துப் பார்த்தால், அதன் உதவியை நாம் இன்று இழப்பது மதியீனம் என்பது புலனாகும். ஆனால், நம் மொழிகள் வளர ஆங்கிலம் இடைஞ்சலாக இராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சொல்லப் போனால், அதன் உதவியாலேயே நம் மொழிகளெல்லாம் சிறிதளவு நவீன வளர்ச்சி பெற்றிருக்கின்றன. இன்னும் சிறப்பாக அதன் துணையால் நம் மொழிகளை யெல்லாம் வளர்த்துக் கொள்ள வழி துறைகளைக் காண்பதுதான் அறி வுடைமை. ஆங்கிலத்தைக் கைவிடக் கால கெடு வைப்பது சரி அல்ல. அதைக் கற்கும் முறையிலும் புழங்கும் அளவிலும் நமக்குப் பெரிதும் பயன் தரும் விதமாக மாறுதல் செய்துகொள்ளலாம்; செய்து கொள்ளத்தான் வேண்டும்.

மொழிக் கல்வி

சில நாட்களுக்கு முன் ஒரு நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தேன். அவர் நன்றாய்ப் படித்தவர். தமிழை முறையாய்க் கற்றவர். முழுத் தமிழர். தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்குக் கூட ஆசிரியர். இப்போது நான் பேசும் விஷயம் எல்லாம் எங்கே சுற்றியும் இந்த ஹிந்தி-தமிழ் விவகாரத்தில் தானே வந்து முடியும். அப்படியே அன்றும் முடிந்தது.

நண்பர் சொன்னார்: "நீங்கள் சொல்வதெல்லாம் சரியா யிருக்கலாம். ஆனால் ஒன்று: பாஷை எதற்காக? மனிதனுக்காகத்தான், ஸார், பாஷை; பாஷைக்காக மனிதன் அல்ல."

அடடா! என்ன ஞான வாக்கு! சூத்திரம் போலத்தான் இருக்கிறது. ஆனால் கிளிப்பிள்ளை வாக்கு.

நண்பருக்கு நான் சொன்னேன்: "உங்கள் கொள்கை மற்றதற் கெல்லாம் பொருந்தும். வீடு எதற்கு? வாசல் எதற்கு? மாடு எதற்கு? மனை எதற்கு? எல்லாம் மனிதனுக்காகத்தான். நாடு நகரம், கூட கோபுரம்,

ஆஸ்திகம் நாஸ்திகம் எல்லாமே மனிதனுக்காகத்தான் என்று சொன்னால் கூட ஒரு விதத்தில் சரி என்று ஒப்புக் கொண்டு விடலாம். பாஷை அப்படி அல்ல. பாஷையே மனிதன். ”

என் கருத்தை அவர் எப்படிப் புரிந்துகொண்டாரோ; நான் அறியேன்.

சொத்துச் சுதந்தரங்களை யெல்லாம், சமயத்தையே கூட, ஒரு வேளை எளிதில் துறந்து மனிதன் வாழ்ந்து விட முடியும். பாஷையை அப்படித் துறக்க முடியாது.

‘ பாஷை முக்கியம் அல்ல ; பாரதமே முக்கியம் ’ என்பதற்கு அர்த்தம் இல்லை. அத்தனை பேரும் ஊமைக ளாய்க் கூடி ஒற்றுமைப் பட்டு விடலாமே என்று இவர்கள் எண்ணுகிறார்கள் ?

பாஷை ஒரு கருவிதான். ஆனால் தாய்ப் பாஷை என்பது மனிதனோடு உடன் பிறந்ததுபோல் ஒட்டி ஒன்றிய மகத்தான மனித நாகரிக சாதனம். ஒரு மக்களின் பாஷை அவர்களின் உள்ள மலர்ச்சியின் அளவுகோல் என்று சமுதாய நூல் ஆராய்ச்சியாளர் மதிக்கிறார்கள். மக்களின் அரசியலையும் நாகரிகங்களையுமே பாஷை பாதிக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்கள். எந்தப் பாஷையையும் நினைத்தவனெல்லாம் நினைத்த பொழுதெல்லாம் கற்றுக் கொண்டுவிட முடியாது ; அது அவசியமும் இல்லை. ஒவ்வொரு பாஷையும் ஒவ்வொரு மக்கள் கூட்டத்தின் உள்ளத்திலே பிறந்து மலர்ந்து வளர்ந்திருக்கிறது. ஒவ்வொரு மக்கள் கூட்டத்தின் உள்ளத்துக்கும் அது மலர்ச்சியும் வளர்ச்சியும் நல்குகிறது.

ஓர் எகிப்திய மன்னர், ஒரு மொகலாய மன்னர், ஸ்வீடன் மன்னரான இரண்டாவது ஃப்ரடரிக், ஸ்காட் லந்து நாலாவது ஜேம்ஸ் இந்த நான்கு பேரும் ஒரு சோதனை செய்ததாகச் சொல்வதுண்டு.

அந்த எகிப்திய மன்னருக்கு ப்ஸாமெட்டிகோஸ் என்று பெயர். புதிதாகப் பிறந்த இரண்டு குழந்தைகளை, ஆடுமாடு மேய்க்கும் ஓர் ஆயனிடம் அவர் ஒப்படைத் தாராம். யாரும் அந்தக் குழந்தைகளிடம் ஒரு வார்த்தை கூடப் பேசக்கூடா தென்று கட்டளையிட்டாராம். சில வருஷங்களாகிக் குழந்தைகள் வளர்ந்த பிறகு அவற்றை மன்னரிடம் கொண்டு வந்தான் ஆயன். அவை 'பெக்கோஸ்' என்ற வார்த்தையைச் சொல்லின. 'பெக்கோஸ்' என்ருல் 'சுட்ட ரொட்டி' என்று பொருளாம்.

மொகலாய மன்னர் சோதித்த குழந்தையோ இப்படி ஒரு வார்த்தையுமே சொல்லத் தெரியாமல் என்னவோ ஒலிகளை உளறியது என்று சொல்வதும் உண்டு. 'பாஷை மனிதனுக்கு இயற்கையிலே-பிறவியிலே-தெரியாது; பிறந்த பின்புதான் அதை அவன் கற்றுக்கொள்கிருன்' என்பதாக, இதிலிருந்து அந்த மொகலாய மன்னர் முடிவு செய்தாராம்.

இந்த வரலாறுகள் எல்லாம் எவ்வளவு உண்மையோ, அறியோம். ஆனுல், மொகலாய மன்னரின் முடிவு என்று சொல்லப்படும் விஷயம் மட்டும் உண்மை. மனிதன் பிறந்த பிறகுதான் பாஷையைக் கற்றுக் கொள்கிருன். ஆயினும், தாய்ப் பாஷைக்கும் பிற பாஷைகளுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு.

தாய்ப் பாஷையைத் தாய் மடியிலேயே எவனும் கற்கத் தொடங்குகிறான். அது மெல்ல மெல்ல-தானாக-மிகவும் இயற்கையாக-அவனுக்கு வந்து விடுகிறது. அவன் புழங்கும் பொருள்களோடும், அவனுக்கு அவன் குடும்பத்திடையே ஏற்படும் பழக்க வழக்கங்களோடும், அவனைச் சூழ்ந்த மக்களின் நாகரிகப் பண்பாடுகளோடும் ஒட்டி வந்து, அவனோடு அவனாக ஊறிவிடுகிறது. அவனுக்கு நன்றாகச் சிந்திக்கத் திறமை வரும்போது அந்தச் சிந்தனைக்கெல்லாம் உருக்கொடுப்பது தாய்ப் பாஷை. அவன் மனமும் அந்தப் பாஷை மயமாகி விடுகிறது.

பிற பாஷை அப்படிப்பட்டதல்ல. அது பின்னால் கற்கும் பாஷை. தாய்ப் பாஷை மயமாக இருக்கும் மனத்திலே இன்னொரு பாஷை வந்து புக ஆரம்பிக்கும் போது, தாய்ப் பாஷை மூலமே அதைப் புரிந்துகொள்ள அவனால் இயலும். கற்ற பாஷை, கற்ற பாஷைதான். அது ஒரு நாளும் தாய்ப் பாஷை ஆகமுடியாது. ஆங்கிலக் குழந்தை உளறுவது ஆங்கிலம். நம்மில் ஆங்கிலத்தைக் கரைத்துக் குடித்த மகா பண்டிதன் எழுதுவதுகூட ஆங்கிலம் அல்ல.

நம்மில் சிலர் அருமையாக ஆங்கிலத்தைக் கற்று ஆங்கிலத்திலே பேசியும் எழுதியும் விடுவதாக நாம் வேண்டுமானால் நினைத்துக் கொள்ளலாம். ஆங்கிலேயரே அவர்களை மெச்சுவதாகவும் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் ஊன்றிச் சிந்தித்துப் பார்த்தால் உண்மை புலப்படும். எத்தனை எத்தனை தலைமுறைகளாக நாம் ஆங்கிலம் கற்றுவருகிறோம்!

அப்படி யிருந்தும், ஒரு டிக்கன்ஸ், ஒரு ஹார்டி போல ஓர் இந்தியன் தோன்றிய துண்டா? தாகூர் இருக்கிறுரே என்று நாம் நினைக்கலாம். வெள்ளைக்காரர்கூட அவரைப் போற்றுகிறுர்களே என்று எண்ணலாம். ஆங்கிலேயரின் இலக்கியச் சரித்திரம் எதிலேனும் தாகூருக்கு இடம் கிடைத்ததாகத் தெரியவில்லை. குழந்தைக்குப் பெரியவர்கள் சொப்பை தட்டிக்கொடுப்பது போல, நம் ஆங்கிலத்தை ஆங்கிலேயர் பாராட்டுவார்கள். உண்மையிலே அது அவர்களுடைய பாஷை. ஆங்கிலேயரின் அசல் இலக்கியமாக எதையும் நாம் படைக்க முடியாது. நம்மிலே பல லட்சக் கணக்கானவர், அநேக வருஷங்களாக ஆங்கிலத்தைக் கற்று அதிலே ஊறியிருந்தாலும் ஆங்கிலத்துக்குப் பிரமாணம் ஆங்கிலேயர் சொல்வதும் எழுதுவதும் உளறுவதுங்கூடத்தான். தமிழ்தான் தமிழனுடையது.

மேட்டிலிருந்து கீழேயே தண்ணீர் பாய்கிறது. ஆனல், வாய்க்காலின் அமைப்புக்கு ஏற்றபடி யெல்லாம் அது திசை திரும்பிப் பாய்வது நிச்சயம். இதே போல மனிதனுடைய சிந்தனையும் அவன் பாஷையின் மேதைக்கு—தனித்தன்மைக்கு—சிறப்புக்கு—ஏற்றபடிதான் செல்லும். சிந்தனையைக்கூட ஓரளவு பாதிப்பது பாஷை. வளமுள்ள தாய்ப் பாஷயைப் பெற்றிராத மக்கள் முன்னேற்றம் அடைய முடியாது என்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

டாக்டர் லட்சுமணசாமி முதலியாரைப் போன்ற சிறந்த கல்விமான்கள் ஒன்று சொல்லுகிறுர்கள். 'நம் நாட்டில் ஒரு காலத்தில் உயர்தரக் கல்வி மொழியாகச்

சம்ஸ்கிருதம் இருந்தது. மேல் நாடுகளில் லத்தீனிலும் கிரீக்கிலுமே ஒரு காலத்தில் உயர்தரக் கல்வி கற்று வந்தார்கள். அப்புறம் ஆங்கிலேயர் உள்படப் பலரும் பிரெஞ்சு பாஷையை உயர்தரக் கல்வி மொழியாகக் கொண் டிருந்தார்கள். இதைப் போலவே இன்று நாம் ஆங்கிலத்தையே உயர்தரக் கல்வி மொழியாகக் கொள் வதுதான் புத்திசாலித்தனம்' என்பது ஸ்ரீ முதலியாரைப் போன்றவர்களின் கருத்து. அவர்கள் சொல்வது உண்மைதான். 'கிராவிட்டி' (ஆகர்ஷண சக்தி) என்ற அபூர்வ தத்துவத்தைக் கண்டுபிடித்த ஆங்கில விஞ்ஞான மேதையான நியூட்டன் கூடத் தமது அசல் விஞ்ஞான நூலைப் பிரெஞ்சு பாஷையில்தான் எழுதினர். ஆனல், அது ஒரு காலம். இப்போது நிலைமை அப்படி இல்லை. சகல விஞ்ஞானச் செல்வங்களும் ஆங்கிலத்திலேயே இந்த நாளில் வந்துவிட்டன.

நமது உயர்தரக் கல்விக்கு இன்று ஆங்கிலம் வேண்டியதே. அதைக் கைவிட்டு விடக்கூடாது என்பது நியாயந்தான். ஆனல், என்றென்றும் அது நம்மிடையே அப்படியே நிலைத்து விடத் தக்க முறையில் நடந்து கொள்ளக் கூடாது. உயர்தரக் கல்விக் கெல்லாம், நவீன விஞ்ஞானங்களுக் கெல்லாம், யந்திரக் கலைகளுக் கெல் லாம், சமூக-அரசியல் பொருளாதார சாஸ்திரங்களுக் கெல்லாம் தமிழையே முற்றும் போதிய பாஷையாக வளப்படுத்துவதற்கு ஏற்ற முறையில் இன்று முதலே முழு முயற்சியும் மேற்கொள்ள வேண்டும். இதற்கு ஒரு வழியும் சொல்லாமல், "தமிழ் வளம் பெறும் வரையில் ஆங்கிலம் இருக்கட்டும்; தமிழ் வளம் பெற்றதும் ஆங்கிலத்தைக் கைவிடுவோம்" என்று

மட்டும் சொல்வது சரியல்ல. 'பைத்தியம் தெளிந்தால் கலியாணம் செய்துவிடுவோம்; கலியாணமானல் பைத்தியம் தெளியும்' என்ற கதையைப் போல்தான் ஆகும் இது.

அந்நிய பாஷையின் மூலந்தான் உயர்தரக் கல்வி பெற முடியும் என்ற நிலை நீடிப்பது, மனித சக்தியில் பெருத்த சேதாரம் விளைக்கக் கூடியது. வேறு வழியில்லாததால் பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனல், வருங்காலத்திலாவது இது மாறவேண்டாமா?

இங்கே ஒரு விஞ்ஞானியின் வாழ்க்கைக் குறிப்பு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். முதல் முதல் மூளையைப் பற்றிச் சில அரிய உண்மைகளை ஆராய்ந்து சொன்னவர் டாக்டர் ஃப்ராங்காய் ஜோஸஃப் கால் என்பவர்தான். இவர் காலேஜில் படித்துக் கொண்டிருந்தபோது, தமக்கும் வேறு சில மாணவர்களுக்கும் உள்ள ஆச்சரியமான ஒரு வேற்றுமையைக் கண்டார். சில பாடங்களில் மற்றவர் இவரை மிஞ்சி மிகச் சிறப்பாகத் தேறிக்கொண்டிருந்தார்கள்; வேறு சில பாடங்களில் அவர்களைவிட இவரே சிறப்பாகத் தேறிக்கொண்டிருந்தார். பின் காலத்தில் தம்முடைய விஞ்ஞான ஆராய்ச்சியின் போது, இந்தக் காலேஜ் அநுபவம் இவருக்கு ஞாபகம் வந்தது. எந்தப் பாடங்களில் இவர் சிறப்பாகத் தேறினர்? சொற்களை ஞாபகம் வைத்துக் கொள்வது, வாசகங்களை உருப்போடுவது போன்ற திறமைகள் சில பாடங்களுக்கு அதிகமாக அவசியம். இலக்கியம், இலக்கணம், பூகோளம், சரித்திரம், அந்நிய பாஷை போன்ற பாடங்களுக்கு இந்த மாதிரி ஞாபக

சக்தியே பெரிதும் தேவை. இந்தப் பாடங்களிலே மற்ற மாணவர்கள் சிறப்பாய்த் தேறினர்கள். வேறு சில பாடங்களுக்குக் காரண காரிய விளக்கம் செய்வது, தர்க்க ரீதியாக ஆராய்வது ஆகிய திறமைகள் முக்கிய மாய் வேண்டும். கணிதம், தர்க்க சாஸ்திரம், விஞ்ஞானம் இவற்றை இதற்கு உதாரணமாய்ச் சொல்ல லாம். இந்தப் பாடங்களில் இவர் சிறப்பாய்த் தேறினர். இந்த வித்தியாசம் ஏன் ஏற்பட்டது என்று, தமது பின்கால விஞ்ஞான ஆராய்ச்சியின்போது சிந்தித்துப் பார்த்தார். மனிதனின் மூளை பற்றிய சோதனைகளை நடத்தினர். மூளையிலே சில பகுதிகள் ஞாபக சக்திக்கு உரியவை, சில பகுதிகள் தர்க்கத் திறமைக்கு உரியவை, வேறு பகுதிகள் வெவ்வேறு காரியங்களுக்கு உரியவை என்ற முடிவுக்கு வந்தார். இது எப்படியானாலும், எல்லார் மூளையும் ஒரே விதமாய் அமைந்திருப்பதில்லை. இதனால்தான் ஐன்ஸ்டீன் போன்ற சிறந்த மேதாவிகளின் மூளைகளை அவர்கள் இறந்த பிறகு ஆராய் கிறார்கள். உயிருள்ளவர்களின் மூளை இயல்பையே இன்று பல விதமாய் ஆராயும் விஞ்ஞானம் ஒன்று தோன்றியிருப்பதும் இதனால்தான்.

இந்த நிலையில் ஞாபக சக்தித் திறமை பெரிதும் உள்ளவர்களுக்கு மட்டுமே வசதியான அந்நிய பாஷை கற்பதை எல்லார் மீதும் சுமத்திக்கொண் டிருந்தால், ஒரு மக்கள் எப்படி உய்ய முடியும்? தாய்ப் பாஷை இலக்கியத்தைச் சிறப்பாகக் கற்கக் கூட இந்தத் திறமை பெரிதும் அவசியந்தான். ஆயினும், தன்னோடு தானுகப் பல பொருள்களோடும் நிகழ்ச்சிகளோடும் அநுபவங் களோடும் சூழ்நிலையோடும் ஒட்டிவந்து, பிறவி முதல்

பதிந்து மனத்தை உருவாக்கிய தாய்ப் பாஷை, எப்படியும் எல்லாருக்கும் போதிய அளவு-கருத்துக்களை எப் படியோ பரிமாறிக் கொள்வதற்கு ஏற்ற அளவாவது-தெரிந்திருக்கும். அந்நிய பாஷை இப்படிப்பட்ட தல்ல. அதற்கு முற்றும் ஞாபகசக்தியே வேண்டும். அப்போதும் அதன் பூர்ண பாவத்தையும் முழுப் பொருளையும் நாம் அறிந்து கொள்ள முடியாது. ஏனென்றால் அது நமக்குப் புறம்பான ஒரு சூழ்நிலையில், நமக்குத் தெரியாத பொருள்களுக்கிடையில், நமக்கு அந்நியமான அநுபவங் களிலே பிறந்து வளர்ந்தது-வளர்ந்துகொண் டிருப்பது.

உயர்தரக் கல்வி முழுவதையும் அந்நிய பாஷை யிலேயே ஒரு மக்கள் என்றென்றும் கற்றுக்கொண் டிருக்க வேண்டிய நிலை ஏற்படுமானால், அவர்களுக்குள் இயற்கையிலே காரண காரிய ஆராய்ச்சித் திறமை மட்டுமே மிகுந்து ஞாபக சக்தி குறைந்திருக்கும் மதியூகி களில் மிகப்பெரும்பாலோர் பயனற்றுச் சோடைகளாய்ப் போகவேண்டியதுதான். ஆங்கிலத்தை நன்றாய்க் கற்க முடியாத காரணத்தினாலேயே, கணிதம், விஞ்ஞானம் முதலிய பாடங்களில் நம்மில் பல மாணவர் தேறாது நிற்பதை, நாம் கூர்ந்து விசாரித்துப் பார்த்தால் இன்று கூடக் காணலாம்.

மொத்தத்தில், ஒரு மக்களுக்குத் தாய்ப் பாஷை உதவுவதுபோல், அந்நிய பாஷை-அது எவ்வளவுதான் வளம் பெற்ற தாயினும்-உதவாது. 'தாய் கைப் பொன்னைவிடத் தன் கைத் தவிடு மேல்' இல்லையா ?

பொது மொழி எப்போது?

சிங்கப்பூரில் தமிழ் ராஜாங்க மொழிகளில் ஒன்ருகி யிருக்கிறது.

இலங்கையில் சிங்களமும் தமிழும் இன்று சம அந்தஸ்துப் பெற்றிருக்கின்றன. இந்த நிலையை மாற்றச் சிங்களவர் முயல்கிருர்கள். அது எப்படிப் போய் முடியுமோ என்று சொல்ல இயலாத நிலை தோன்றியிருக்கிறது. தமிழுக்குச் சிங்களத்துடன் சம அந்தஸ்து இல்லை யென்ருல், தனித்துப் பிரிந்த சர்வாதிகாரத் தமிழ் ராஜ்யம் ஒன்றுதான் ஏற்படவேண்டும் என்று கூடத் துணிந்துவிட்ட தமிழ்த் தலைவர்கள் அங்கே தோன்றி யிருக்கிருர்கள்.

தமிழின் தாயகமான தமிழ் நாட்டிலோ, ராஜ்ய சர்க்காரின் பாஷை தமிழாம்; பாரத சர்க்காரின் பாஷை ஹிந்தியாம். "ஹிந்தி கற்காவிட்டால், பாரத சர்க்காரில் உத்தியோகம் கிடைக்காது. ஹே! ஹரிஜனங்களே, நீங்கள் ஏமாந்து போகாதீர்கள்; ஹிந்தி கற்று

விடுங்கள்'' என்று சில தலைவர்கள் மிரட்டக் கிளம்பி யிருக்கிறார்கள்.

பாரத ஒற்றுமைக்கு ஹிந்தி வேண்டும் என்று கிளிப்பிள்ளை மாதிரி திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண் டிருக்கிறார்கள். 'ஹிந்தி வந்துவிடும், வந்துவிடும்' என்று பயமுறுத்திக்கொண் டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் நினைக்கிறபடி தமிழ் நாட்டில் ஹிந்தி வரு மானால், ஜனநாயகம் நடக்காது; ஜனநாயகம் வலுக்கு மானால் ஹிந்தி வராது. அவர்கள் நினைக்கிறபடி ஹிந்தி வராது; ஆங்கிலத்தின் ஸ்தானத்தை ஹிந்தி ஒரு நாளும் பெறாது. தமிழ் நாட்டில் ஜனநாயகம் நடக்குமானால், ஆங்கிலத்தின் ஸ்தானத்தை என்றாவது ஒரு நாள் அடையக் கூடிய ஒரே மொழி தமிழ்தான்.

தலைக்கு மேலே பேராபத்து வந்துவிட்டது போல, 'ஐயோ! பாரத ஒற்றுமைக்கு என்ன செய்வது? ஹிந்தி கற்போம்' என்று நாம் துடிக்கத் தேவை யில்லை. இன்று பாரத ஒற்றமையைக் காப்பாற்ற ஆங்கிலம் போதும்; சர்க்கார் நடத்த அது போதும்; தொழில் செய்ய அது போதும்; உயர்தரக் கல்வி கற்க அது போதும். போதும் என்பது மட்டும் அல்ல; உயர்தரக் கல்விக்கு அது அத்தியாவசியத் தேவையுமாகும்.

சொன்னதைச் சொன்னதை ஹிந்திவாலாக்கள் சொல்லிக்கொண் டிருந்தால், நாமும் சொன்னதைச் சொன்னதையே தான் சொல்லிக்கொண் டிருக்க வேண்டி யிருக்கிறது.

பாரத ஒற்றுமைக்கு ஒரு பாஷை உடனடியாக வேண்டும் என்பதல்ல, உண்மையில் நம்முடைய

இன்றைய பிரச்னை. இந்தியாவின் தேசிய பாஷைகள் என்று இந்திய அரசியல் சட்டத்தில் குறித்திருக்கும் எதுவும், நவீன வாழ்க்கைக்குத் தேவையான அறிவுச் செல்வங்களைப் பெற்றிருக்க வில்லை என்று மொழிக் கமிஷனின் தலைவரான கேர் அவர்களே கூறியிருக்கிறார். ஹிந்தி உள்பட அத்தனை இந்திய பாஷைகளைக் குறித்துமேதான் அவர் இப்படி அபிப்பிராயம் சொல்லி யிருக்கிறார். அவர் சொல்லியிருப்பது உண்மை. இந்த நிலையில் ஆங்கிலத்தை ஒழித்துக் கட்டி, ஹிந்தியைத் தலையின் மீது சுமப்பதால் யாருக்கு லாபம்?

நாளைக்கே ஆங்கிலத்தை ஒழித்து விட்டு ஹிந்திக் காரர்கள் வேண்டுமானால், நாசமாய்ப் போகட்டும். அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அதற்காக நம் மையும் அவர்கள் கட்டி யிழுப்பானேன்?

ஹிந்தி வந்து விடும், வந்து விடும் என்கிறார்களே; அது எப்படி வரும்? சும்மா வராது; தானாக வராது. மிரட்ட வேண்டும்; ஆசை காட்ட வேண்டும்; வலுக்கட் டாயம் செய்ய வேண்டும். அப்போதுதான் அது வரும். "அப்படி யெல்லாந்தான் செய்ய இப்போது ஆரம்பித் திருக்கிறோமே" என்று வேண்டுமானால், அவர்கள் சொல்லலாம். செய்யுங்கள்; எதிர்த்துப் பார்க்கிறோம். ஜனநாயகத்தின் பெயரால் எதிர்த்துப் பார்க்கிறோம்; வாழவேண்டும் என்ற ஆர்வத்தால் எதிர்த்துப் பார்க் கிறோம்; 'ஸத்யமேவ ஜயதே' என்று சூத்திரம் குறித் திருக்கிறீர்களே, அதை நம்பி எதிர்த்துப் பார்க்கிறோம்; நீங்களும் நாங்களும் சரி சமமான பிரஜைகளாக வாழ்ந்து வளர முடியும் என்று எண்ணி எதிர்த்துப் பார்க்

கிறோம். அணுகுண்டு வந்து விடும் என்று பயமுறுத்து கிறவர்கள் மாதிரி நீங்கள் பேசத் தேவையில்லை.

ஹிந்தி தன் சுயபலத்தால், எங்கும் பரவி விடும் என்று சொல்வதற் கில்லை. சரித்திர ரீதியான காரணங் களால்தான் ஆங்கிலம் உங்களிடமும் எங்களிடமும் முன்னே பரவியது. ஆனால் இன்று அது தன் சுயபலத் தாலேயே உங்களிடமும் எங்களிடமும் நிலைநின்றுகொண் டிருக்கிறது. ஆங்கிலம் நம்மிடையே அதிகார பலத்தோடு ஒட்டிக்கொண்டு இன்று நிற்க வில்லை. அதைப்பற்றி இன்று நமக்குத் தாழ்மை மனப் பான்மை இல்லை. அது பயனுள்ள பாஷையாக இருப்பதனால் மட்டுமே அதை நாம் வைத்துக்கொண் டிருக்கிறோம். எது வரையில் அதன் உதவி நமக்குத் தேவையோ அதுவரையில் அதை வைத்துக்கொண்டு, அதனால் பெறத்தக்க உதவியை யெல்லாம் பெற்று, நம் தாய்ப் பாஷைகளை யெல்லாம் வளர்த்துக் கொள்வது உங்களுக்கும் நல்லது; எங்க ளுக்கும் நல்லது. இருபத்தைந்து வருஷங்களுக்கு மேலாக ஹிந்தியைப் பரப்ப மகாத்மா காந்தி பெரு முயற்சி செய்தாரே; அப்போதெல்லாம் இன்று போல் பலத்த எதிர்ப்பு அதற்கு இல்லையே. அந்த நிலையிலும் அது ஏன் பரவவில்லை? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

"ஒவ்வொரு பாஷைக்கும் அலாதியான கலைச் செல்வமும் பாண்பாடும் இலக்கியமும் உண்டு; அந்த அந்தப் பாஷைக்காரர்கள் அது அதை வளப்படுத்திக் கொண்டால்தான் முன்னேற முடியும்" என்றோம். அதற்காகவே பாஷைவாரி ராஜ்யங்களை விரும்பினோம். அவை **அமையும்** இந்த வேளையிலே, "ஐயோ! ஆபத்து

வந்து விட்டாற் போல் இருக்கிறதே!" என்று ஏன் நாம் அலற வேண்டும்.

'உள்ளுக்குத் தமிழ், வெளிக்கு ஹிந்தி, உலகத்துக்கு ஆங்கிலம், வைகுந்தத்துக்கு வடமொழி' என்று வேறு சிலர் பேசுகிறார்கள். லட்டீன் மூலந்தான் பரமண்டலத்துத்குப் போக முடியும் என்று கிறிஸ்தவர் ஒரு காலத்தில் நினைத்துக்கொண் டிருந்தார்கள். இப்போது, ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு, தமிழ், தெலுங்கு எதன் மூலமும் கர்த்தரை நெருங்க முடியும் என்று அவர்களுக்குப் புலனாகிவிட்டது. கிறிஸ்தவ நாகரிகம் இன்று மகோன்னத நிலையில்தான் இருக்கிறது. இன்றும் அவர்கள் லட்டீனைக் கற்கிறார்கள். ஆனால், அது வேறு விஷயம்.

உடனே தீர்க்கவேண்டிய பெரிய பிரச்னையாக இந்தப் பொதுமொழி விஷயத்தை இன்று நாம் நினைக்க வேண்டியதே யில்லை. ஆங்கிலம் எப்படியோ நமக்குப் பொதுமொழியாக உதவிவருகிறது. உயர்தரக் கல்விக்கு மிக அவசியமான மொழியாகவும் இருந்து வருகிறது. உலகத்தில் மிகப் பரவியிருக்கும் பாஷை அது. உலக அறிவுச் செல்வங்கள் அனைத்தும் அதில் இருக்கின்றன. பாரதம் சம்பந்தப்பட்ட மட்டும், எந்த ஒரு பகுதியினரையும் மற்ற எந்தப் பகுதியினருக்கும் தாழவோ உயரவோ செய்யாத நிலையில் இருப்பது ஆங்கிலம். அதைக் கற்பதிலும் அதன் உதவியைப் பெற்றுத் தாய்மொழிகளை வளர்ப்பதிலும் அதைக் கருவியாய்க் கொண்டு ஒரு பகுதியினரோடு மறு பகுதியினர் அரசியல், பொருளாதார, சமூகத்தொடர்புகள் கொள்வதிலும் எல்லாருக்கும்

சரிசமமான வசதிகளும் வாய்ப்பும் இருக்கின்றன. பொதுமொழிப் பிரச்னையை இன்று ஒரு வழியாகத் தீர்த்துக் கட்டியாக வேண்டும் என்று ஆத்திரப்பட நமக்கு என்ன அவசர அவசியம் வந்திருக்கிறது? பிள்ளை பிறந்த நிமிஷத்திலேயே அப்பன் சொத்தை நிர்வாகம் செய்யக் கிளம்பவேண்டுமா, என்ன? நவீனக் கலை, விஞ்ஞான, சமூக, அரசியல், பொருளாதார, தொழில், தத்துவ நூல்கள் சம்பந்தப்பட்ட மட்டும் நம்முடைய அத்தனை பாஷைகளும் மிகவும் பாலியப் பருவத்திலேயே இருக்கின்றன. பிள்ளை பிறக்கு முன் 'மூத்த பிள்ளைக்குப் பட்டம்' என்று சொல்லிக்கொண்டுதான் இருப்பார்கள். பிறந்தது மூங்கையாக இருந்தால், அப்போதும் அப்படிச் சொல்லிக்கொண் டிருக்கமாட்டார்கள். நாக்கை ஒட்டவைத்துவிடப் போகிறோம் என்று பேசிப் பயனில்லை.

இன்று பொதுமொழிப் பிரச்னையே எழவில்லை என்று மதித்து அதை ஒதுக்கி வைத்துவிட்டு, பிற காரியங்களைக் கவனிப்பதுதான் அறிவுடைமையாகும். அந்த அந்தப் பிராந்தியங்களிலே அந்த அந்தப் பாஷைகள் தம் மேதைக்கும் பண்புக்கும் இயல்புக்கும் ஐதிகத்துக்கும் நிலைமைக்கும் ஏற்றபடி வளர உதவும் படியான சூழ்நிலைகளை ஏற்படுத்த வேண்டும்.

ஆங்கிலத்தை ஒழிக்க இப்போது நாம் சத்திர சிகிச்சை செய்யத் தேவையில்லை; பொதுமொழி ஒன்றை-ஹிந்தியையோ வேறு மண்ணாங்கட்டியையோ - அதன் இடத்தில் ஒட்டவைக்கும் வேலையும் தேவை யில்லை.

விதையை நட்டால், செடி முளைக்கிறது. முளை விடும்போது விதையே அதற்குத் தாய்போல் உதவு கிறது. செடி வேரூன்றித் தனக்கு வேண்டிய உணவைத் தானே தேடிக்கொண்டு வாழ்ந்து வளரச் சக்தி பெறும் வரைக்கும் ஊட்டமளித்துக் காக்கிறது விதை. செடிக்குத் தன்னுடைய உதவி எதுவரைக்கும் தேவை யாகிறதோ அதுவரைக்கும் செடியில் விதை ஒட்டிக் கொண்டிருக்கிறது. பிறகு தானுகவே விழுந்துவிடு கிறது. இது இயல்பாக நடக்கும் நிகழ்ச்சி. செடி வேர் விடு முன்னே விதையைக் கத்தரித் தெறிந்தால், செடிக்குச் சுய பலம் ஏற்படாது. அது செத்துவிடும்.

இன்று ஆங்கிலம் நம் மொழிகளுக்கெல்லாம் அந்த விதையைப்போல் ஊட்டம் கொடுக்கும் சாதனமாக இருந்து வருகிறது. இன்று நமது பிரச்னை அதை எப்படி ஒழிப்பது என்பதல்ல; பொதுமொழி எது என்று நிர்ணயிப்பதல்ல; ஹிந்தியை எல்லாரும் ஏந்திச் சுமப்பதல்ல. பாரத மொழிகள் அனைத்தையும் நவீனத் தேவைகளுக்கெல்லாம் ஏற்றபடி வளர்க்கும் வழி வகை களைக் காண்பதுதான் இன்று நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான வேலை. நம்முடைய பதினன்கு பாஷை களும் மிக நன்ருக வளர்ந்துவிட்டால், ஆங்கிலம் தானே நம்மை விட்டு விலகத் தொடங்கிவிடும்; நமக்கு வேண்டிய பொதுமொழியோ அல்லது பொதுமொழி களோ இயல்பாக உருவாகும். தாய்மொழி செய்ய வேண்டிய காரியங்களை யெல்லாம் பொதுமொழி செய்ய வேண்டும் என்று எதிர்பார்ப்பது அறிவுடைமை அல்ல. இன்று நம் பொதுமொழியாக இருந்து வரும் ஆங்கிலம் அப்படித்தான் தாய்மொழியின் பல கடமைகளை

ஆக்கிரமித்துக்கொண் டிருக்கிறது என்பது உண்மை. இந்த நிலை மாறவேண்டும் என்று விரும்பும் நாம், இதே போல் வருங்காலத்தில் மற்றொரு நிலை ஏற்பட இடம் கொடுக்கக்கூடாது. பிராந்திய மொழிகளெல்லாம் சிறந்து வளர்ந்தோங்கிச் செழித்துவிட்டால் அப்போது இயல்பாக வருகிற பொதுமொழியோ, பொதுமொழி களோ, தன் அல்லது தம் கடமையோடு அமைந்து கிடக்கும். பல பிராந்திய மக்களும் ஒருவரோடொருவர் பழகவும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளவும் பயன் படுவது ஒன்றுதான் பொதுமொழி அல்லது பொது மொழிகளின் கடமை. தாய்மொழிகளெல்லாம் ஊட்ட மற்றுக் கிடக்கும் நிலையில், எல்லாமே செவிலித்தாயின் அரவணைப்பில் இருக்கும்போது, அவற்றுக்குள்ளே ஒன்றை மட்டும் அந்தச் செவிலித்தாயின் நிலைக்கு ஏற்றி, அவளை ஓட்டி விரட்டிவிட்டால், எல்லாம் நலிய வேண்டியதுதான். குருடன் குருடனுக்கு வழிகாட்டிய கதையாகவே அது முடியும்.

பாஷையின் இயல்பு

பிரிட்டனில் எத்தனை பாஷைகள் இருக்கின்றன?

"கேட்க வேண்டுமா? ஒன்றே ஒன்றுதான்-ஆங்கிலம்" என்றே நம்மில் பெரும்பாலோர் சொல்லுவோம்.

உண்மையில் அங்கே ஆறு பாஷைகள் இருக்கின்றனவாம் - வெவ்வேறான ஆறு பாஷைகள். ஒரே பாஷையின் சிதைவுகளான 'டையலெக்ட்ஸ்' அல்ல. உண்மையிலேயே வேறுபட்ட பாஷைகள்: வெல்ஷ், கேலிக், மங்க்ஸ், கார்னிஷ், நார்மன் பிரெஞ்ச், ஆங்கிலம்- இப்படி ஆறு பாஷைகள்.

ஒரு காலத்தில், இன்றைய பிரெஞ்சின் மூலமான நார்மன் பிரெஞ்சு பாஷைதான் பிரிட்டனின் துரைத்தனப் பாஷையாக இருந்ததாம். அதையே இன்னும் சிலர் பிரிட்டனில் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்று ஆங்கிலம் துரைத்தனப் பாஷையாக இருந்தாலும், மற்ற ஐந்து பாஷைகளையுமே பேசுவோர்

அங்கங்கே இருக்கத்தான் இருக்கிறார்கள். அந்த அந்தப் பாஷைகளை வளர்க்கவும் அவற்றில் கவிதை, இலக்கியம் முதலியவற்றைப் படைக்கவும், அவற்றுக்குப் பரிசுகள் வழங்கவும் முயற்சிகள் நடந்துகொண்டேயிருக்கின்றன. கேலிக், பிரெஞ்சு இரண்டிலும் ஒழுங்காக பி. பி. ஸி. ஒலி பரப்புக்கள் நடந்துகொண் டிருக்கின்றன.

இது மட்டும் அல்ல. ஆங்கில பாஷையையே வெவ்வேறு பகுதியினர் வெவ்வேறு விதமாய்ப் பேசுகிறார்கள். நார்தம்பர்லாண்டில் உள்ள ஒரு தொழிலாளியும் டேவன்ஷயரில் உள்ள ஒரு தொழிலாளியும் ஒரே பாஷைதான் பேசுவார்கள். ஆனால் ஒருவர் பேசுவது மற்றவருக்குப் புரியாதாம். உச்சரிப்பு மட்டும் அல்ல; வார்த்தைகளே மாறியிருக்குமாம்.'

"உலகம் முழுவதற்கும் இன்று ஒரே பாஷையை ஏற்படுத்தி வெற்றி காண்பதாக வைத்துக்கொள்ளுங்கள். பத்தே வருஷத்தில் அந்த ஒரே பாஷை பல விதமாய் மாறி விடுவதைக் காண்பீர்கள். இது மனித இயல்பு. விதம் விதமாய் மாறும் ஓர் ஆச்சரிய இயல்பு மனிதனிடம் இருப்பதாய்த் தோன்றுகிறது" என்று 'இங்கிலீஷ் டைஜெஸ்ட்' என்ற பத்திரிகையின் 1956 ஏப்ரல் இதழில் ஒரு குறிப்புச் சொல்கிறது.

பாரதத்தில் ஒரு காலத்தில் எப்படிச் சமஸ்கிருதம் உயர்தரக் கல்விக்கான பொதுப் பாஷையாக இருந்ததோ அதே போல, ஐரோப்பா எங்கும் லட்டீன் பொதுப் பாஷையாக இருந்த காலம் உண்டு. இன்று லட்டீன் ஒரு மூலைக்குப் போய் விட்டது. பொதுவாக அதை 'இறந்த பாஷை'. என்கிறார்கள். ஆயினும் அதை

இன்னமும் ஐரோப்பியர் போற்றிக் கற்கிறார்கள். லட்டீன் பல ஐரோப்பிய பாஷைகளுக்கும் சொற்கள் உதவிப் பேருதவி புரிந்திருக்கிறது; இன்னமும் உதவிக் கொண் டிருக்கிறது.

லட்டீனுக்குப் பிறகு பிரெஞ்சு பாஷையே கிழக்கே ருஷ்யா முதல் மேற்கே இங்கிலாந்து வரைக்கும் உயர் தரக் கல்விப் பாஷையாக வழங்கியது. (ருஷ்யப் பிரபுக் களின் பிரெஞ்சு மோகத்தை, டால்ஸ்டாயின் நாவல்கள் கேலி செய்வதைக் காணலாம்.) முன்பே நான் குறித்தது போல, பிரிட்டனில் நியூட்டன் தமது 'பிரின்ஸிப்பியா' என்ற அபூர்வ விஞ்ஞன நூலைப் பிரெஞ்சு பாஷையி லேயே எழுதினர். இன்றே அங்கங்கே அந்த அந்த நாட்டுப் பாஷை வளர்ந்தோங்கி விட்டது.

இங்கே இன்னொரு வரலாற்றையும் குறிப்பிட வேண்டும். "இது கட்டுக் கதை அல்ல; உண்மை" என்கிறார் இதைச் சொல்கிறவர். அவர் யார்? எம். ஆர். ஏ. தலைவர்களுள் முக்கியஸ்தரான பீட்டர் ஹொவார்டு என்பவர்தான். சமீபத்தில் பெர்லின் ரேடியோவில் இந்த விவரத்தை அவர் ஒலி பரப்பினர்:

"என் பழைய நண்பர் ஒருவரைப் பற்றி எனக்கு எப்போதும் ஞாபகம். அவரைப் பற்றிய உண்மை வரலாறு இது. அவர் ரூர் பிரதேசத்தைச் சேர்ந்தவர்; சுரங்கத் தொழிலாளி. இருபத்தாறு வருஷ காலம் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியில் அவர் சேர்ந்திருந்தார். பெரிய லட்சியவாதி. உலகம் முழுவதையும் ஒற்றுமைப் படுத்திவிட வேண்டும் என்று ஆசைகொண்டார். உலகத்தில் உள்ள அத்தனை ஜனங்களும் மட்டும் ஒரே

பாஷை பேசுவார்களானால் உலகமே ஒற்றுமைப்பட்டு விடுமே என்று அவர் எண்ணினர். இதனால் அவர் நவீன உலகப் பொதுப் பாஷையான எஸ்பெராண்டோ என்பதைக் கற்றுக்கொள்ளத் தொடங்கினர்.

“வெகு நாள் வரைக்கும் அதை அவர் கற்றுக் கொண்டு வந்தார். அப்புறம் ஒரு நாள் அவருக்குத் திடீரென்று ஒரு யோசனை எழுந்தது. ‘ஆமாம், நானும் ஜெர்மன் பாஷை பேசுகிறேன்; என் பெண்டாட்டியும் ஜெர்மன் பாஷை பேசுகிறுள். இப்படியிருந்தும், நானும் அவளும் பல வருஷங்களாகக் கடுவன் பூனைகள் மாதிரி ஒருவருக்கொருவர் எந்த நேரமும் சண்டையிட்டுக்கொண்டேயிருக்கிறோமே, ஏன்? ஒற்றுமைக்குத் தேவையாயிருப்பது பொதுப் பாஷை அல்ல; வேறு ஏதோ தேவையாக இருக்கிறது’ என்று எண்ணினர்.

“முதலில் வீட்டிலே ஒற்றுமை ஏற்படுத்திக் கொள்ள முயன்றார். அதற்கு அவருடைய பழைய ஜெர்மன் பாஷையே மிக்க உபயோகமாயிருந்தது. அக்கம் பக்கத்தில் உள்ளவரோடு அவர் அன்பாய்ப் பழகத் தொடங்கினர். தம் வீட்டிலே சமாதானம் தோன்றிவிட்டதால், உலக சமாதானத்தைப் பாது காக்கும் ஒரு சக்தியாகிவிட்டார்.”

இவற்றையெல்லாம் நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

எந்த ஒரு பாஷையும் நிரந்தரமாய்க் கல்விப் பாஷையாக இருந்துவர முடியாது; சில காலம் வேண்டு

மானால், அப்படி இருந்து வரலாம். எந்த அந்நிய பாஷையும் ஒரு மக்களிடையே நிரந்தரமாய்த் துரைத்தனப் பாஷையாக இருந்துவர முடியாது; தமிழனுக்கு ஹிந்தி ஓர் அந்நிய பாஷைதான். எந்த ஒரு பாஷையும் மக்களையெல்லாம் ஒற்றுமைப்படுத்திவிட முடியாது; மக்களின் மனமும் குணமும் உழைப்புமே ஒற்றுமையை உண்டாக்கும்.

ஒரே பாஷைகூட என்றென்றும் ஒரே நிலையில் இருந்து வராது. பாஷை என்பது ஒரே ஒருவனுடைய - ஒரே ஒரு கூட்டத்தினுடைய - ஒரே ஓர் இனத்தினுடைய-தனிச் சொத்தல்ல. பேசுகிறவனுக் கெல்லாம் சொந்தம் பாஷை; பேசுகிறவருக்கும் கற்கிறவருக்கும் கருத்தைச் சொரியும் கருவியாகக் கொண்டவர்களுக்கும் - இந்த அனைவருக்கும் பொது உடைமை பாஷை. பாஷையை யாரும் முளை போட்டுக் கட்டிவைக்க முடியாது.

நாம் அகநானூற்றுக் காலத்திலே வாழவில்லை; புறநானூற்றுக் காலத்திலே வாழவில்லை; பத்துப் பாட்டுக் காலத்திலே வாழவில்லை; பஞ்ச காவியங்களின் காலத்திலே வாழவில்லை; கம்ப ராமாயண காலத்திலே வாழவில்லை. 'தினமணி', 'சுதேசமித்திரன்' காலத்திலே வாழ்கிறோம்; அணுக்குண்டுக் காலத்திலே வாழ்கிறோம்; ஐ. நா.வின் காலத்திலே வாழ்கிறோம்; ரெயில், பஸ், கார், மின்சாரம், ஸினிமா, ரேடியோ இவை அனைத்தும் மூலை முடுக்கெல்லாம் தோன்றிவிட்ட காலத்திலே வாழ்கிறோம். இவற்றையும் தமிழரெல்லாம் சிந்திக்க வேண்டும்.

அரசியலும் பொருளாதாரமும் சமய சமூக இயக்கங்களும் பாஷையைப் பாதிக்கின்றன. ரெயிலும் பஸ்ஸும் விமானமும் மின்சாரமும் ரேடியோவும் பாஷையைப் பாதிக்கின்றன. ஊருக்கு ஊர் பரவிக் கிடக்கும் மக்களின் பிரதேசச் சூழ்நிலைகள் பாஷையைப் பாதிக்கின்றன.

விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் கூடச் சில 'சொற்கள்' தெரியும் - பிராணிகளின் உணர்ச்சியைத் தெரிவிக்கும் 'சொற்கள்'. ஆனால், அதைத் திட்டமான பொருளில் 'பாஷை' என்று சொல்ல முடியாது. சமூக சம்பிரதாயமான ஒலிக் குறிப்புகளின் மூலம் உள்ளக் கருத்தை வெளியிடுவதே பாஷை. அந்தச் சம்பிரதாயம், விரிவடைந்து கொண்டே போகும்; வாழ்க்கை விரிய விரிய அது விரிவடைந்துகொண்டு போகும். புதுப்புது அநுபவங்களை ஒட்டிய புதுப் புதுக் கருத்துக்களை வெளியிட வெளியிடப் பாஷையும் புது மெருகுபெற்றுப் புது வளர்ச்சி பெறும். அதை யாரும் தடுக்க முடியாது. வெள்ளத்துக்கு அணைபோடுவதுபோல அற்ப இடுக்கண்களை அதற்குச் சிலர் விளைவிக்கலாம். ஆனால், அவற்றையெல்லாம் மீறி அது வளர்வது நிச்சயம். ஒரு பாஷை அல்ல; பாரதத்தின் பதினாலு பாஷைகளுந்தான் வளரும். மக்கள் வளர வளரப் பாஷையும் வளரும்; பாஷை வளர வளர மக்களும் வளர்வார்கள். இந்தப் பரஸ்பர வளர்ச்சிக்கு இடையூறு செய்கிறவர்கள், பாஷையின் அன்பர்கள் அல்ல; பகைவர்கள். காலத்துக்கேற்ற போக்குகளை யெல்லாம் ஒட்டிப் பாஷைக்கும் கல்வி ஒளியின் பரப்புக்கும் சமூக வளர்ச்சிக்கும் உதவுவதே அறிவுடைமை.

கல்வியில் புது முறை

இது விஞ்ஞான யுகம். நமக்கு ரெயில் வேண்டி யிருக்கிறது. ரேடியோ வேண்டி யிருக்கிறது. விமானம் வேண்டி யிருக்கிறது. மின்சாரம் வேண்டி யிருக்கிறது. இன்னும் எத்தனை எத்தனையோ இந்த மாதிரி பொருள்கள் வேண்டி யிருக்கின்றன. இவற்றை எல்லாம் எங்கேயோ உள்ள துரைமார்கள் செய்து நமக்கு என்றென்றும் அனுப்பிக்கொண் டிருக்க வேண்டியது; நாம் பத்துப் பாட்டு, கம்ப ராமாயணம், கந்தப் புராணம் ஆகியவற்றைப் படித்துக் கொண்டு, 'எங்கள் தமிழ்! எங்கள் தமிழ்' என்று முழக்கம் செய்துகொண் டிருக்க வேண்டியது; அல்லது சுவரில் எல்லாம் கண்டபடி கரிக்கோடு கிழித்துக்கொண் டிருக்க வேண்டியது. நமது கந்தப் புராணத்தையும் கரிக் கோட்டையும் பார்த்து ஹிந்தி பயந்தோடி விடும்; தமிழ் வாழ்ந்து வளர்ந்து விடும். இப்படி நினைப்பது போல் சிலர் நடந்து கொள்கிறார்கள்.

நான் திரும்பத் திரும்ப ஒரு விஷயத்தை எச்சரிக்க விரும்புகிறேன். நவீன விஞ்ஞானம், சட்டம், அரசியல் பொருளாதார சமூக சாஸ்திரம் ஆகியவை பற்றிய மட்டும் ஹிந்தியும் தமிழும் இன்று ஒரே நிலையில்தான் இருக்கின்றன. ஆனால், அகில இந்திய சர்க்காரின் பலமும் ஆதரவும் ஹிந்திக்கு இருக்கின்றன. ஹிந்தியை வளர்க்கப் பலத்த பலவித முயற்சிகள் நடக்கின்றன. ஹிந்தி வளர்வது நிச்சயம். இன்று போல் என்றென்றும் ஆங்கிலம் நம் நாட்டில் வேரூன்றி இருக்கும் என்றே இருக்க வேண்டும் என்றோ யாராவது நினைத்தால், அது அறிவுடைமையாகாது. பத்து வருஷத்திலோ, இருபது வருஷத்திலோ, ஐம்பது வருஷத்தில் தானோ இந்த நிலை - நம் நாட்டில் ஆங்கிலம் பெற்றிருக்கும் சிறப்பு நிலை - மாறத்தான் மாறும்; அடியோடு மாறிவிடும். அப்போது அதிகாரத்தோடு ஒட்டிய பலத்தாலும் வேறு முயற்சிகளின் பலனாகவும் ஹிந்தி நவீனத் தேவைகளுக்கேற்ற வளர்ச்சி பெற்றிருக்கும். உயர்தர விஞ்ஞானக் கல்விக்கேற்ற சிறந்த பாஷையாக அது வளம் பெற்றிருக்கும். அப்போது தமிழ் அதே போல் மேலான நிலையை அடைந்திராவிட்டால், தமிழுக்குக் கதி மோட்சமே இல்லாது போய்விடும். தமிழின் பலத்தால் தான் ஹிந்தியை நாம் எதிர்க்க வேண்டும்; இதை நான் திரும்பத் திரும்பச் சொல்ல விரும்புகிறேன்.

சென்ற பல வருஷங்களாக நவீன விஞ்ஞானத் துறைகளில் தமிழை வளர்க்க எத்தனையோ முயற்சிகள் யார் யாரோ புரிந்தும் பயன் ஏற்படவில்லை; துளியும் பயன் ஏற்படவில்லை. ஏன்? முயற்சிகள் சரியானவை அல்ல; அதனால்தான் பயன் படவில்லை. சொல்லாக்கல்

முயற்சிகள் பலன் தரவில்லை. எதை யெடுத்தாலும் தர்ஜுமா செய்து விடலாம் என்ற எண்ணம் மிகமிகத் தவறு. மொழி பெயர்ப்புகள் தமிழை வளர்க்க ஓரளவு பயன் படலாம். ஆனல், தமிழ் வளம் பெற வளம் பெறத்தான் மிக உயர்ந்த விஞ்ஞான நூல்களின் மொழி பெயர்ப்பே சாத்தியமாகும்.

முதலில் இன்று உள்ள நிலைமையை நாம் கவனிக்க வேண்டும். தமிழில் நல்ல புலமை உடையவர்களுக்கு விஞ்ஞான விஷயங்களில் பிரக்ஞை இல்லை; விஞ்ஞான விஷயங்களில் புலமை உள்ளவர்களுக்குத் தாய் மொழி தமிழாக இருந்துங்கூடத் தாம் அறிந்த விஷயங்களைத் தமிழில் எடுத்துச் சொல்லும் திறன் இல்லை. உயர்தரக் கல்வியில் முற்றும் ஆங்கிலத்தையே போதனை மொழி யாகக் கொண்டதால் இந்த நிலைமை ஏற்பட்டது. வேண்டுமென்றே யாரும் இப்படிச் செய்யவில்லை. பரந்த நோக்கில் இதைச் சரித்திர ரீதியான நிகழ்ச்சி என்றே நாம் கொள்ள வேண்டும். அரசியல் காரணங்க ளால் எல்லாருமே ஆங்கிலம் கற்க நேர்ந்தது; எல்லா ருக்குமே ஆங்கிலத்தில் மோகம் விழுந்தது. ஆங்கி லத்தில் உயர்தர விஞ்ஞான நூல்களெல்லாம் இருக் கின்றன. ஆகவே, அதையே போதனை மொழியாகக் கொண்டு விஞ்ஞானங்களைக் கற்பதே சாத்தியம் என்று தோன்றியது; சௌகரியமாகவும் தோன்றியது. விஞ் ஞான அறிவோடு ஆங்கில அறிவும் பெற்றிருப்பது பதவியும் பெருமையும் பெற ஒரு வழியாகவும் இருந்தது. பல வித நவீன விஞ்ஞானங்கள் முக்கியம்; ஆங்கிலம் முக்கியம்-இப்படிப்பட்ட ஒரு மனோபாவம் ஏற்பட்டது. நவீன சாஸ்திரங்களிலும் பதவியிலும் புகழிலும் ஆசை

கொண்டவர்கள் தமிழை அடியோடு புறக்கணித்தார்கள்; அப்படி அவர்கள் புறக்கணிக்க நேர்ந்தது.

தமிழை மட்டும் கற்றிருப்பவர்களுக்கு இன்று விஞ்ஞானத் துறைகள் அடைந்திருக்கும் விரிவும் ஆழமும் தெரியவில்லை. சமுத்திரத்தைப் போல் அவை பரந்து விரிந்து கிடக்கின்றன; ஆழமாய்க் கிடக்கின்றன. நிமிஷத்துக்கு நிமிஷம் அவை விரிவடைந்துகொண்டு வருகின்றன; பிரமிக்கத் தக்க அளவு விரிவடைந்து கொண்டு வருகின்றன. விஞ்ஞானம் என்ற பெயரால் தமிழில் இன்று வெளிவரும் சில சில்லறைக் கட்டுரைகளையும் சில்லறைப் புத்தகங்களையும் பார்த்து விட்டு, 'இவ்வளவு தானே விஞ்ஞானம்' என்று எவராவது நினைத்தால் அதைப் போல் அசட்டுத்தனம் வேறில்லை. ஆனால் தமிழில் மட்டும் விரிந்த புலமை உள்ள சிலர் இன்று இப்படித்தான் நினைப்பதாக அஞ்ச வேண்டி இருக்கிறது.

சுருக்கமாகச் சொன்னால், விஞ்ஞானப் புலவர்கள் "தமிழில் விஞ்ஞானத்தை எடுத்துரைக்க முடியாது; எழுத முடியாது; விளக்க முடியாது" என்கிறார்கள். காரணம் என்ன? அவர்களுக்கு விஷயம் தெரிந்தாலும் தமிழைப் பயிலாததால், தட்டித் தடுமாறியாவது தமிழிலே எளிய அடிப்படையான விஞ்ஞான விஷயங்களைக்கூட எடுத்துச் சொல்லும் திறனில்லாது போனது தான் காரணம். தமிழைக் கண்டு இன்று அவர்களுக்கு ஒரு பயம் ஏற்பட்டிருக்கிறது; தாழ்மை மனப்பான்மை ஏற்பட்டிருக்கிறது. தமிழ் என்றவுடனே 'பத்துப் பாட்'டையும் 'புறநானூற்'றையும் அவர்கள் நினைத்துக்

கொள்ளுகிறார்கள். தமிழ்ப் புலவர்களும் தூய தமிழ்க் காரர்களும் இப்படி அவர்களை அஞ்சச் செய்து விட்டார்கள்; அஞ்சச் செய்து வருகிறார்கள். தமிழ் இப்போது 'பெரிய விஷயம்' ஆகிவிட்டது!

இதே சமயம் இந்தத் தமிழ்ப் புலவர்கள் என்ன நினைக்கிறார்கள்? "விஞ்ஞானம் கற்றவர்கள் வீண் பிடிவாதம் காட்டுகிறார்கள்; சூழ்ச்சி செய்கிறார்கள். தான் அறிந்த விஷயத்தைத் தமிழன் ஒருவன் மற்ற வருக்கு ஏன் தமிழிலே எடுத்துரைக்க முடியாது? முடியாது என்று அவன் சொல்லுவது வெறும் சூழ்ச்சி. வார்த்தைகளைக் கண்டுபிடிக்க வேண்டும்; அல்லது படைக்க வேண்டும். அவ்வளவுதானே! பிறகு எதையும் தமிழிலே சொல்லி விடலாம்; தர்ஜுமா செய்து விடலாம்" என்று சொல்லும் தீவிரத் தமிழ்ப் புலவர்கள் இருக்கிறார்கள்.

ஆங்கில இலக்கியங்கள் மட்டுமோ, சரித்திரம், தத்துவம் பற்றி மட்டுமோ பயின்று விஞ்ஞான விஷயங்களை அறியாத சிலரும் இந்தத் தமிழ்ப் பண்டிதர் களைப் போலவே பேசுகிறார்கள். எங்கே, அவர்களுக்குத் தான் ஆங்கிலம் தெரியுமே; உயர்தர விஞ்ஞான நூல் ஒன்றை எடுத்துப் பார்க்கட்டும். அதில் நாலு பக்கத்தை யாவது அவர்களால் புரிந்து கொள்ள முடியுமா? முடியாது; நாம் பந்தயம் கட்டலாம்.

விஞ்ஞானப் புலவர்களின் திக்கற்ற தவிப்பு ஒரு புறம்; மொழி மட்டும் கற்றவர்களின் தீவிரத் துடிப்பு மறு புறம். ஒருவர் நிலை ஒருவருக்குத் தெரியவில்லை. இன்றல்ல; இருபது அல்லது இருபத்தைந்து வருஷங்க

ளாகவே இந்த நிலைமை இருந்து வருகிறது. இந்த இரண்டுக்கும் இடையிலே சமரசமான முயற்சிகள் சில நடந்தன. விஞ்ஞானங்களைத் தமிழிலே கொண்டு வரச் சிலர் முயன்றார்கள். சொல் ஜாபிதாக்கள் தயாராயின ; சத்தற்ற சில்லறை விஞ்ஞான நூல்கள் சில தோன்றின. ஒன்றும் பயன் படவில்லை. காரணம் பல. முக்கியமாக, முயற்சிகள் சரியானவை அல்ல ; நிலைமைகள் அநுகுண மாக இல்லை.

இயற்கையான சூழ் நிலைகள் ஏற்படச் செய்து, சரியான முயற்சிகள் நடக்கத் தூண்டுதல் உண்டாக்கினு லொழிய, இந்தச் சிக்கல் தீராது. என்னைக் கேட்டால் இதற்குச் சில யோசனைகள் தான் எனக்குத் தோன்று கின்றன. இன்று ஆங்கிலத்தை நாம் விடக் கூடாது. இனியும் சில தலைமுறைகள் ஆங்கிலம் கற்கத்தான் வேண்டும் ; படிப்பவரெல்லாம் ஆங்கிலம் கற்க வேண்டும். ஆனால், ஏற்கெனவே நாம் அதனிடம் கொண்டிருந்த நோக்கம் மாற வேண்டும். ஆங்கிலேய ரைப்போல ஆங்கிலம் பேசவும் எழுதவும் வேண்டும் என்று நாம் கொண்டிருந்த மனோபாவம் மாறவேண்டும். ஆங்கிலத்துக்காக ஒரே மூச்சாகப் பாடுபட்டோமே, அந்தப் பாடு இனி வேண்டிய தில்லை. ஆங்கிலத்தில் உள்ள விஷயங்களை யெல்லாம் புரிந்துகொள்ளும் சக்தி ஏற்படும்படி அதை நாம் கற்கவேண்டும். இது போதும். இதற்கு மொழி பெயர்ப்பு முறையையும் விளக்க முறை யையும் நாம் கைக் கொள்ளலாம். இந்த முறைகளை மிகக் கீழ் வகுப்புக்களிலிருந்து மிக உயர் தர வகுப்புக்கள் வரைக்கும் நம் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் கைக்கொள்ளலாம். ஆங்கிலத்தின் மூலமே ஆங்கிலம்

போதிக்கும் நேரடியான முறை தேவையே இல்லை. ஆங்கில நூல்களைப் போதிக்கும்போது தமிழைக் கலப்பது பஞ்சமா பாதகங்களில் ஒன்று என்பதுபோல் அஞ்சத் தேவை இல்லை. பிரெஞ்சு, லட்டீன், ஹிந்தி, உர்தூ எந்தப் பாஷையானாலும் அதைத் தங்கள் ஆங்கிலத்தின் மூலமே ஆங்கிலேயர் கற்க முயல்கிறார்கள். இதனால் ஒன்றும் வானம் இடிந்து விழுந்து விடவில்லை.

விஞ்ஞான பாட நூல்களைத் தமிழிலே கொண்டு வந்த பிறகுதான் அவற்றைத் தமிழிலே போதிக்க வேண்டும் என்று காத்திருக்கத் தேவையில்லை. மட்டமான பாட நூல்கள் வந்ததும், அவை தமிழிலே இருக்கின்றன என்பதற்காக அவற்றைப் பயன்படுத்தத் தேவையும் இல்லை. விஞ்ஞான பாட நூல்கள் சிறந்தவையாகத் தமிழிலே வந்தாலொழிய, ஆங்கில பாட நூல்களையே வைத்துக் கொண்டு அவற்றை மாணவர்களுக்கு மொழிபெயர்ப்பும் விளக்கமும் கொண்ட முறையின் மூலம் போதிக்க வேண்டும். இதனால் ஆங்கிலத்தைப் புரிந்துகொள்ளும் திறன் மாணவர்களுக்கு ஏற்படுவது மட்டும் அல்ல; தமிழில் தாம் அறிந்த விஷயங்களை எடுத்துச் சொல்ல ஆசிரியர்களிடமும் முயற்சி தோன்றும்.

தமிழ்ப் பாடத்தில் மட்டும் இலக்கணப் பிழையற்ற துப்புரவான தமிழ் முக்கியம் என்று கொண்டு மற்றப் பாடங்களில் 'ஆங்கிலமும் தமிழும் கலந்த மணிப் பிரவாளமா யிருந்தாலும் பரவாயில்லை; விஷயமே முக்கியம்' என்று கொள்ளவேண்டும். வகுப்புக்களில் ஆசிரியர்கள் பாடம் போதிக்கும்போதும் சரி, பரீட்சை

களில் மாணவர்கள் விடையளிக்கும்போதும் சரி, இப்படி மணிப்பிரவாள பாஷையை - தமிழைத் தவிர்த்த பிற பாடங்கள் பற்றிய மட்டும் - உபயோகிக்க அநுமதி அளித்துவிடவேண்டும்.

உயர்தரக் கல்வியில் எவன் எந்தப் பாடம் எடுத்துக் கொண்டாலும் சரி, எதில் சிறப்புப் பெற விரும்பினாலும் சரி; மூன்று விஷயங்களைக் கட்டாயமாகச் செய்துவிட வேண்டும்: ஒன்று, ஆங்கில அறிவு; இரண்டு, தமிழ் அறிவு; மூன்று, ஏதாவது விஞ்ஞானம் அல்லது நவீன அரசியல் பொருளாதார சமூகக் கலை ஒன்றில் அறிவு. இந்த மூன்றையும் எவருக்கும் கட்டாயமாகச் செய்துவிடவேண்டும். சில தலைமுறைகளில் தமிழ் வளம் பெறுகிற வரைக்கும் இந்தக் கட்டாயம் இருந்து வரவேண்டும். உயர்தரப் படிப்புப் படித்த எவனுக்கும் ஆங்கிலத்தை நன்ருக அர்த்தம் செய்துகொள்ளத் தக்க திறமை வேண்டும; தான் அறிந்த விஷயங்களை எப்படியோ தட்டித்தடுமாறித் திணறியாவது தமிழிலே விளக்கிச் சொல்லும் திறன் வேண்டும்; ஏதாவது ஒரு விஞ்ஞானம் அல்லது கலையிலே போதிய அறிவு வேண்டும். இந்த மூன்றும் இணைந்திராத எவனுமே உயர்தரப் படிப்புப் படித்தவர்களுள் இல்லை என்ற நிலை தமிழ்நாட்டில் ஏற்படவேண்டும்.

இதனுல் இரண்டு மூன்று தலைமுறைகளில் புதிய விஞ்ஞான நூல்கள் இயல்பான சூழ்நிலையில் தமிழ் நாட்டிலே பிறக்க வழி ஏற்படும். தமிழ் மட்டும் அறிந்தவர்கள் மற்றவர்களைத் தவருக நினைப்பதற்கோ விஞ்ஞானமும் கலையும் அறிந்தவர்கள் தாம் கற்ற

விஷயங்களைத் தமிழில் எடுத்து விளக்க முடியாது தவிப்பதற்கோ இடமில்லாத ஒரு நிலை இதனால் ஏற்படும். இதற்கிடையிலே, புது விஞ்ஞான நூல்களும் சொல்லாக்கும் முயற்சிகளும் அரை குறையாகவோ ஓரளவு திறம்படவோ நடந்துகொண் டிருக்கலாம். அவையும் இந்தப் புதிய கல்வி முறையும் ஒன்றுக்கொன்று உதவுபடியாக இருந்துகொண்டு நல்ல பலன் விளைய ஏதுவாகும். எதற்கும் கல்வி முறையிலே புதியதொரு மாறுதல் வருவதுதான் தக்க சூழ்நிலையை ஏற்படுத்தும்.

ஆங்கிலத்தின் நிலை

மிகப் பிரபலமான தமிழ் நாட்டுத் தலைவர் ஒருவர் இருந்தார். எல்லாருக்கும் அவரைத் தெரியும். பெயரைக் குறிப்பிட வேண்டாம். தலைவர் அற்புதமாய்ப் பிரசங்கம் செய்வார். தமிழானாலும் சரிதான், ஆங்கிலமானாலும் சரிதான்; அவருக்குப் பிரசங்கத்தில் அவர்தான் இணை. ஆங்கிலத்தில் கட்டுரைகளும் மிக நன்றாய் எழுதுவார். அவரைத் தமிழ்ப் பத்திரிகைக்காரர் எவரோ ஒரு சமயம் ஒரு கட்டுரை கேட்டு விட்டார். அவரும் எழுதினார். பத்திரிகையிலும் வெளிப்பட்டது. அதன் ஆரம்பத்தைப் படித்தபோது, எங்களுக் கெல்லாம் சிரிப்புத்தான் வந்தது. நான் பிரசங்கம் செய்தால் எப்படி மற்றவர் சிரிப்பார்களோ அப்படியே அவருடைய எழுத்தைக் கண்டு நாங்கள் சிரித்தோம். கட்டுரையின் ஆரம்பம் எப்படி இருந்தது, தெரியுமா? திட்டமான வார்த்தைகள் ஞாபகமில்லை. வாசகத்தின் ஓட்டத்தைக் கோடி காட்டு கிறேன். அது இதுதான்: "கடல் சூழ்ந்த இந் நிலவுலகின் கண்மணி, பண்டைப் புண்ணிய பூமியாம் நம் இந்தியா,

முன்னொரு காலத்தில் கல்வி வளமும் செல்வ வளமும் கொழித்து, பூமாதேவிக்கே ஒரு திலகம்போல் விளங்கியது. அது எப்படி என்ருல்...” போதும், போதும், போதும்; இதற்குமேல் தேவை இல்லை. தேவை என்ரு சொல்லுகிறீர்கள் ?

பிரசங்கம் செய்வது ஒரு கலை; எழுதுவது இன்னொரு கலை. கற்ற பாஷையில் எழுதுவது ஒன்று; நன்ருய்க் கற்காத பாஷையில் - அது தாய் மொழியாக இருந்தாலுமே கூட-எழுதுவது மற்ருென்று. வளமுற்ற இலக்கியச் செல்வங்களைப் படைத்த பாஷையில் - எழுதுவது ஒன்று; வளமில்லாத பாஷையில்-நவீனத் தேவைகளுக்கேற்றபடி வளம் பெற்றிராத பாஷையில்-எழுதுவது மற்ருென்று. ஒரு பாஷையில் தமக்கு மிகவும் பரிசயமான இலக்கியங்களிலிருந்து கொய்து உருப்போட்ட பல வாசகங்களைச் சற்றே மாற்றி நிரல் படுத்தி இணைத்து அதே பாஷையில் ஓர் அழகிய கட்டுரையாக ஒருவர் தோற்றுவித்து விடலாம். இன்னும் சற்றுத் திட்டமாகவே சொல்கிறேன். ஹ்யூம் கூறியது, மில் கூறியது, பெந்தாம் கூறியது, ஷேக்ஸ்பியர்,மில்டன், வேட்ஸ் வொர்த், ஸ்பென்ஸர் இவர்களெல்லாம் கூறியவை எல்லா வாசகங்களையும் நம் நிலைமைக்கும். இந்த நாளைக்கும் ஏற்றபடி செப்பனிட்டு ஆங்கிலக் கட்டுரை எழுதி விடுவார் ஒருவர். அது அருமையாகவும் இருக்கும். ஆனல், அவரே சரியான விதத்தில் தமிழ் பயிலாத ஒரு தமிழர் என்று வைத்துக் கொள்ளுங்கள்; தமிழிலே புதுப் பழக்கமாக ஒரு கட்டுரை எழுதுவாராஞல் எப்படியிருக்கும் என்று நினைக்கிறீர்கள்? எப்படியிருக்கும்? அநேகமாகச் சகிக்க முடியாது, போங்கள்.

கர்த்தாவின் திறமை மட்டும் அல்ல; கருவியின் இயல்புமே படைப்பை உருவாக்குகிறது. கருவியிடம் கர்த்தாவுக்கு உள்ள பயிற்சியும் படைப்பிலே பிரதி பலிக்கிறது. பாஷை கருத்துக்களை வெளியிடும் ஒரு கருவி. "ரெயில் எஞ்சினுந்தான் இழுக்கிறது; நானுந் தான் இழுக்கிறேன். எங்களுக்குள்ளே என்ன வித்தியாசம்?" என்று மாடு கேட்க முடியுமா?

"எங்கள் தேசிய பாஷைகளில் சொல்ல முடியாததும் ஒன்றுண்டா? முயன்றால் எதையும் சொல்லி விடலாம்" என்று நாம் வீறு பேசிப் பயனில்லை. அந்நிய ஆங்கிலத்தைப் பாராட்டுவதை நம்மில் சிலர் தாழ்மை மனப்பான்மை என்று எண்ணுகிறார்கள். அதைக் குறை கூறுவதுதான் உண்மையில் தாழ்மை மனப்பான்மையாகும். இன்றைய நிலை என்ன என்ற உண்மையை ஒப்புக் கொள்ளுவதால், நம்முடைய தாய் மொழி அன்புக்குக் குறை வந்து விடாது. அந்நிய ஆங்கிலம் நமக்குப் பேருதவி செய்யக்கூடிய நிலையில் இன்று இருக்கிறது. அதன் துணைக்கொண்டு, நம் தேசீய மொழிகளை வளர்ப்பதுதான் அறிவுடைமை; தாய்மொழிப் பற்றுடைமை. ஆங்கிலத்தை இன்று அடியோடு கைவிட்டு விடவேண்டுமென்று எண்ணுவது, நம் தலையில் நாமே மண்ணைப் போட்டுக் கொள்வது போலாகும்.

பௌதிகம், கணிதம், ரசாயனம், உயிர்நூல், வான நூல், பூமி நூல், தத்துவ சாஸ்திரம், உடல் நூல், வைத்தியம், யந்திர நூல், மின்சாரம், ரேடியோ இப்படி எண்ணற்ற அறிவுக் கலைகள் ஆங்கிலத்தில் இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஆயிரமாயிரம் விசேஷத் துறைகள் இருக்கின்றன. பூச்சிகளைப் பற்றி எடுத்துக்

கொள்ளுங்கள். இருபது லட்சம் பூச்சி வகைகள் இருப்பதைப் பூச்சி நிபுணர்கள் கண்டுபிடித் திருக்கிருர்கள். அவற்றில் ஆறு லட்சம் பூச்சிகளை இனங்கண்டு வர்ணித்து ஜாபிதா தயாரித்திருக்கிருர்கள். ரேடியோ பற்றி ஒவ்வொன்றும் சுமார் ஆயிரம் பக்கங்கள் கொண்ட இரண்டு வால்யங்களைச் சமீபத்தில் பார்த்தேன். ரேடியோ பற்றி இன்னும் ஆயிரக் கணக்கான புத்தகங்கள் இருக்கின்றன. ஒரு மோட்டார்க் காரில் இன்று சுமார் ஐயாயிரம் பகுதிகளுக்கு மேல் இருக்கின்றனவாம். காரிலேயே இப்படி என்ருல், பிரம்மாண்டமான ஒரு ரெயில் எஞ்சினில் லட்சக் கணக்கில்தான் பகுதிகள் இருக்கும். இவைபற்றி யெல்லாம் புத்தகங்கள் ஆங்கிலத்தில் உண்டு. உயர்தரக் கணிதத்தில் நூற்றுக் கணக்கான பிரிவுகள் உண்டு. அவை பற்றிய புத்தகங்கள் ஆங்கிலத்தில் இருக்கின்றன. நவீன கணித முறைகளின் அற்புத நுணுக்கங்களைப் பயிலும்போது நமக்குப் பரவசமும் பெருவியப்பும் உண்டாகும். 'லீலாவதி' யையும் முந்திரி அரைக்காணிக் கணக்கையும் சொல்லிச் சொல்லி நாம் பெருமை கொள்ளலாம். தசாம்ச எண் முறையையும் பூஜ்யத்தையும் இந்திய ரிஷிகள்தான் கண்டு பிடித்தார்கள் என்ற உண்மை நமக்கு மிகப் பெருமை தருவதுதான். ஆனுல், அன்று கணித சாஸ்திரத்தில் உலகம் இருந்த நிலையில்தான் இவை அற்புதங்கள். இவற்றுக் கப்பால் கணித சாஸ்திரம் வெகுதூரம் முன்னேறி யிருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். இன்றைய கணித சாஸ்திரங்களுக்கும் பாஸ்கரரின் 'லீலாவதி' க்கும் மலைக்கும் மடுவுக்கும் போன்ற வித்தியாசம் உண்டு.

சமீபத்தில் வட நாட்டு எழுத்தாளர் ஒருவருடன் பேசிக்கொண் டிருந்தோம். எங்களுக்கு நடுவில் தமிழ் நாட்டு டாக்டர் ஒருவரும் இருந்தார். ரத்த பரி சோதனையில் அவர் ஒரு நிபுணர்.

"ஆங்கிலத்தை அறவே இன்று கைவிட்டு விடுவதாக வைத்துக் கொள்ளுங்கள். நவீன வைத்திய சாஸ்திரத்தை எந்தத் தரம் வரையில் கற்றுக் கொடுக்கக்கூடிய தமிழ் நூல்கள் உங்களிடம் இப்போது இருக்கின்றன?" என்று வட நாட்டு எழுத்தாளர் கேட்டார். இதற்கு டாக்டர் என்னவோ ஒரு தினுசாகப் பதில் அளித்தார். ஆனல், பேச்சு வேறு பக்கம் திரும்பியது.

"விஞ்ஞானத்தை முற்றும் தமிழிலே எந்த வகுப்பு மட்டும் நீங்கள் சொல்லிக் கொடுக்க முடியும்?" என்று வட நாட்டு நண்பர் கேட்டார்.

"ஏன், பத்தாம் வகுப்பு வரைக்கும் இப்போதே சொல்லிக் கொடுக்கிறோமே" என்று எங்களில் பல நண்பர்கள் கம்பீரமாகச் சொன்னர்கள்.

இது உண்மைதான். ஆனலும், விஞ்ஞான பாடப் புத்தகங்கள், முந்தி ஆங்கிலத்தில் பத்தாம் வகுப்புக்கு இருந்ததற்கும் இப்போது தமிழில் இருப்பதற்கும் தரக் குறைவு எவ்வளவு ஏற்பட் டிருக்கிறது! இதைக் கல்விமான்கள் எல்லாம் சொல்லித் தவிக்கிறார்கள். போகட்டும்; பத்தாம் வகுப்புக்கு இதுவே போதும் என்று வைத்துக் கொள்வோம். பிறகு?

பின்னல் காலேஜ் இருக்கிறதே! காலேஜுக்குரிய விஞ்ஞான பாடங்களை யெல்லாம் தமிழில் உடனடியாக எழுதிவிட முடியுமா? எவையோ ஒன்றிரண்டு கணித

பாட புத்தகங்களும் மற்றவையும் வந்திருக்கின்றன. தரத்தில் அவை மட்டம் என்றே சொல்லவேண்டும். தவிர, பல விஞ்ஞானத் துறைகளில் சாதாரணமான புத்தகங்கள்கூட இன்னும் தமிழில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. அப்படியே எல்லாம் வந்துவிடுவதாக வைத்துக்கொள்ளலாம். காலேஜ் படிப்பு முடிகிறவரைக்கும் ஆங்கிலத்தின் வாசனையே தேவையில்லாத நிலையில் தமிழில் சகல துறைப் பாடப் புத்தகங்களும் தயாராகி விடுவதாக உத்தேசித்துக் கொள்வோம். இதுவே இன்னும் இருபது வருஷங்கள் வரைக்கும் சாத்தியம் இல்லை என்றுதான் தோன்றுகிறது. வேண்டாம், இப்போதே இது சாத்தியம் என்று வைத்துக்கொள்வோம். காலேஜ் படிப்புத் தமிழிலேயே முடிந்துவிடுகிறது. அப்புறம்? அப்புறந்தான், விஞ்ஞானத் துறையில் விசேஷப் படிப்புகள் இருக்கின்றன. காலேஜ் படிப்பு ஓர் அஸ்திவாரம். அதற்குப் பின்னே உள்ள படிப்புகள் பிரம்மாண்டமான மாளிகை. இந்த வித்தியாசத்தை நாம் உணரவேண்டும்! காலேஜ் படிப்பை மாணவருக்குப் போதிக்கும் புரொபஸர்கள், மாணவருக்குரிய அதே பாடப் புத்தகங்களைப் படித்ததோடு நின்று, மேலே ஏதும் தெரிந்துகொள்ளாமல் போதித்தால்தான் போதுமா? ஆங்கிலத்தை இன்றே அடியோடு ஒழித்துவிட்டு, காலேஜ் விஞ்ஞான பாடப் புத்தகங்களையெல்லாம் தமிழிலே தயார் செய்துகொண்டு போதித்து வந்தோமானால், இரண்டு மூன்று தலைமுறைகளுக்குப் பிறகு, புரொபஸரும் சரி, மாணுக்கரும் சரி, ஒரே பாட புத்தகங்களை வைத்துக்கொண்டு திணறிக்கொண்டிருக்க வேண்டியதுதான்!

ஓர் எஞ்சினீரிங் கலாசாலையில் பௌதிகப் பகுதியின் தலைவரான நண்பர் ஒருவரிடம் ஒரு சமயம் நான் பேசிக் கொண் டிருந்தேன். "உங்கள் காலேஜில் ஒருவன் ரேடியோ கற்கலாமா ?" என்று கேட்டேன்.

"ஆஹா ! கற்கலாம். ஆனல், அவன் பௌதிக விஞ்ஞானம் படித்த காலேஜ் பட்டதாரியாக இருக்க வேண்டும். பௌதிகத்திலும் கணிதத்திலும் நல்ல மார்க் வாங்கியிருக்கவேண்டும். எங்கள் கலாசாலையில் சேர்ந்து மூன்று வருஷம் படிக்கவேண்டும்" என்று அவர் சொன்னர்.

சாதாரணக் காலேஜ் பாடப் புத்தகங்களுக்கு அப்பாலே மலை போன்ற விஞ்ஞான நூல்குவியல் ஒன்று இருப்பதை நாம் உணரவேண்டும்.

இரண்டாம் உலக யுத்த முனையில், பல ஸர்ஜன்கள் இருந்தார்களாம். அப்போதப்போது ஆப்பரேஷன் செய்கையில், மயக்க மருந்து கொடுப்பதற்கு மட்டும் சில ஸர்ஜன்கள் உதவினர்களாம். எல்லாருமே ஆப்ப ரேஷன் செய்வது, மயக்க மருந்து கொடுப்பது இரண்டு காரியங்களையும் கவனிப்பதைவிட, சிலர் ஆப்பரேஷன் செய்வதும் சிலர் மயக்க மருந்து கொடுக்கும் வேலையைக் கவனிப்பதுமாகச் செயலாற்றுவது சௌகரியமா யிருந்த தாம். இதிலிருந்து, சில ஸர்ஜன்கள் மயக்க மருந்து கொடுப்பதில் மட்டும் நிபுணர்களாகவும் சில ஸர்ஜன்கள் ஆப்பரேஷன் செய்வதில் மட்டும் நிபுணர்களாகவும் ஊர் திரும்பினர்கள். இதன்மேல் பல நாடுகளில் இன்று இப்படிப் பங்கு பிரித்துக்கொண்ட முறையையே வைத்தியத் துறையில் கைப்பிடிக்கிறர்களாம். (நம்

நாட்டில் எப்படியோ? எனக்குத் தெரியாது.) பல ஸர்ஜன்கள் மயக்க மருந்து கொடுக்கும் 'ஸ்பெஷலிஸ்ட்' ஆகிவிடுகிறார்களாம்.

இப்படி ஒவ்வொரு துறையிலும் விஞ்ஞானம் மிக்க அபாரமாய் வளர்ந்திருக்கிறது. அத்தனைக்கும் அவ்வளவுக்கும் ஆங்கிலத்தில் எண்ணற்ற புத்தகங்கள் தோன்றியிருக்கின்றன; நிலைமை இப்படி இருக்க, ஆங்கிலத்தை நாம் அடியோடு புறக்கணிக்க எண்ணுவது முற்றும் விபரீதமாக முடியும் என்று சொல்லவா வேண்டும்? முன் நாட்களில் நடந்தது போல் ஆங்கிலத்தை இன்றும் மிகச் சிறு வகுப்பிலிருந்தே நம் பள்ளிக்கூடங்களில் கட்டாயமாகக் கற்பிப்பது அவசியம். அப்போதுதான் காலேஜை அடையும் போதும் அதற்குப் பின்பும் அவதியில்லாமல் நம் சிறுவர்கள் உயர்தரக் கல்வி கற்க முடியும். "மேல் படிப்புப் படிக்கிறவர்களுக்குத்தான் ஆங்கிலம் வேண்டும்; மற்றவர்களுக்கு எதற்கு?" என்று சொல்லி, வகை பிரிக்க முயல்வதும் அறிவுடைமை அல்ல. யாரை மேல்படிப்புப் படிக்கத் தகாதவர் என்று கீழ் வகுப்பிலேயே நாம் தள்ளி வைக்க முடியும்? தவிர, எங்கும் நன்றாய் ஆங்கிலம் பரவியிருக்கிற நிலையில்தான், அது நமக்கு உதவக் கூடிய இயல்போடு நம்மிடையே இருக்கும். இல்லாவிட்டால், அது நம்மிடம் மங்கி மறைந்துவிடும்.

ஆங்கிலத்தை நாம் கற்றதோ கற்பதோ தவறல்ல; தமிழைப் புறக்கணித்தும் புறக்கணிப்பதுந்தான் தவறு. விசேஷ விஞ்ஞானத் துறையில் எவன்

கல்வி கற்றாலும் தமிழையும் கடைசி வரைக்கும் கட்டாய பாடமாகப் பயின்றாக வேண்டும் என்ற நியதி இருந்திருக்குமானால், இன்று தமிழ் அந்தத் துறைகளில் எவ்வளவோ வளர்ச்சியுற்றிருக்கும். விசேஷ விஞ்ஞான அறிவு முக்கியம்; தமிழ் முக்கியம். அந்தத் தமிழ் நவீனத் தேவைகளுக்கு ஏற்ற உதவியைப் புரிவதற்கு - மற்றவையெல்லாம் ஒருபுறமிருக்க, இந்தக் காரியம் ஒன்றுக்காகவே - இன்று நமக்கு ஆங்கிலம் மிக மிக முக்கியம்.

சொல்லாக்கல் முயற்சி

'இறவாத புது நூல்கள்' தமிழிலே வரவேண்டும் என்று ஆசைப்பட்டார் பாரதியார். நாம் ஒவ்வொருவருந் தான் இன்று அப்படி ஆசைப்படுகிறோம். 'இறவாத புது நூல்கள்' மிக்க அபூர்வமாகத்தான் பிறக்கும். அது தெய்வப் பிறப்பைப் போன்றது. அது எப்போ தெப் போது பிறக்குமோ அப்போ தப்போது பிறக்கட்டும். தமிழிலே ஏராளமான புது நூல்கள் வேண்டும்; நவீன வாழ்க்கைக்குப் பயன்படும் நூல்கள் வேண்டும்; பல கலை நூல்கள் வேண்டும். கதை இலக்கியம் தமிழிலே பெருகி வருகிறது. சிறு கதைத் துறையிலும் கவிதை யிலும் பிரமிக்கத் தக்க எண்ணிக்கையில் புது நூல்கள் தோன்றவில்லை என்றாலும், ஓரளவு நிறையவே அவை தோன்றி வருகின்றன. முக்கியமாக, நம் சிறு கதை களில் சில, உலகத்துச் சிறந்த கதைகளுடன் சம அந்தஸ்துப் பெறத்தக்க மதிப்பு வாய்ந்திருக்கின்றன என்று கூடச் சொல்லலாம். ஆனால் பிற துறைகளில் இப்படிப் புது நூல்கள் தோன்றவில்லை.

கொஞ்ச நாளைக்கு முன் 'ஹிந்து'வில் இந்த மொழிப் பிரச்னை பற்றி ஒரு தலையங்கம் வந்தது. திடீரென்று விஞ்ஞானத்தில் ஆங்கிலப் பாடப் புத்தகங்களை விட்டுத் தமிழில் பாடப் புத்தகங்கள் கொண்டு வருவது சாத்தியம் அல்ல என்பதை அது மிகத் தெளிவாக விளக்கியிருந்தது. ஆங்கில விஞ்ஞானப் புத்தகங்களை யெல்லாம் அப்படியப்படியே மொழி பெயர்த்து விடலாம் என்று யாராவது எண்ணினால், அதைப் போல் அசட்டுத்தனம் வேறில்லை; அந்தக் காரியம் சாத்தியமே இல்லை. சிறிய, சாதாரணமான, சிக்கலில்லாத, கணித நுணுக்கங்களெல்லாம் கலவாத விஞ்ஞானக் கட்டுரை ஒன்றை மொழி பெயர்த்துப் பார்த்தாலே, அது எவ்வளவு அசாத்தியமான காரியம் என்பது புரியும். வீம்புக்காகவோ, தற் பெருமையாலோ விஞ்ஞான நூல் ஒன்றை ஒருவர் மொழி பெயர்த்து விடலாம். 'தமிழிலே முடியும்' என்று இப்படி அவர் நிரூபித்து விடலாம். ஆனால் தமிழிலே அவர் எழுதியதைப் பிறர் புரிந்துகொள்ள வேண்டும்; அது முடியும் என்பதை அவரால் நிரூபிக்க முடியாது. மொழி பெயர்த்தவரை 'இது ஏன்?' என்று கேட்டால், "விஞ்ஞானம் பெரிய விஷயம், ஸார். அதை இங்கிலீஷிலேயே எல்லாரும் புரிந்துகொள்ள முடியாது; முறையாகக் கற்பவர்தான் புரிந்துகொள்ள முடியும்" என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளுவார். இதில் சிறிது உண்மை இருக்கிறது. ஆனால் இது முழு உண்மை அல்ல.

நவீன விஞ்ஞான நூல்களில் மிக அடிப்படையான ஆரம்ப நூல்கள் கூடத் தமிழில் இல்லாத இன்றைய

நிலையில், விஞ்ஞானத்துக்குத் தேவையான கலைச் சொற்கள் பஞ்சமா யிருக்கின்றன. சொற்களை இரவல் வாங்கிக் கொள்ளலாம் என்கிறது ஒரு கட்சி; அது கூடவே கூடாது என்கிறது மறு கட்சி. இந்த விஷயத்தில் புத்தரைப்போல-வௌவாலைப்போல அல்ல-ஒரு 'மத்திம' மார்க்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறது ஒரு நடுக் கட்சி. ராஜாஜியைப் போன்ற பெரியோர்களே இதில் குறுக்கே புகுந்து குட்டை குழப்பி விடுகிறார்கள். 'கல்சர்' என்ற சொல்லுக்குக் 'கலாசாரம்' என்ற சொல்லை வழங்கியவர்களைப் 'பத்திரிகை அவசரா ளர்கள்' என்று மதுரைத் தமிழ்ச் சங்கக் கூட்டத்தில் அவர் கேலியாகக் குறிப்பிட்டார். 'கல்ச'ரைப் 'பண்பாடு' என்று சொல்வதே நல்லது என்பது அவருடைய அபிப்பிராயம். 'சால்பு' என்ற சொல்லே 'பண்பாட்'டை விட மேல் என்றும் மரபை ஒட்டியது என்றும் சிறந்த தமிழ் அறிஞரான என் நண்பர் கி. வா. ஜகந்நாதன் போன்றவர் சொல்வது ராஜாஜிக்குத் தெரியுமோ, தெரியாதோ; அதை நானறியேன். 'கல்சர்' என்பது ஓர் அற்புதமான சொல் என்றும் அதை அப்படியே உபயோகிப்பதுதான் சரி என்றும், வெகு நாட்களுக்கு முன் அறிஞர் டி. என். சேஷாசலம் நடத்திய 'கலா நிலயம்' என்ற செந்தமிழ்ப் பத்திரிகையில் ஒரு கட்டுரையே வெளிவந்தது இப்போது எனக்கு ஞாபகம் வருகிறது. என்னைப் பற்றிய மட்டும் இப்போது நான் 'பண்பாடு' என்ற சொல்லையே 'கல்ச'ருக்குச் சமமாகப் பயன்படுத்தி வருகிறேன். ஆயினும், பத்திரிகைக் காரர்களை 'அவசராளர்கள்' என்று ராஜாஜி கேலி செய்வது நமக்கெல்லாம் மிக்க வருத்தமே தருகிறது.

தமிழில் இன்று எழுதுகிறவர்கள், சொல்லுக்குத் தவிப்பதைப் பற்றி, 'வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ?' என்பது மாதிரி கேலி செய்வது சற்றும் நியாயம் அல்ல. பத்திரிகை அவசராளர்கள் போகட்டும்; மற்ற 'மெதுவாளர்கள்' என்ன செய்து விட்டார்கள் என்று கேட்கிறேன். இவர்கள் சுமார் இருபத்தைந்து வருஷமாக முக்கி முக்கிச் 'சொல்லாக்கல்'வேலை செய்து வருகிறார்களே; ஏதும் பயன் பட்டதா? ராஜாஜியையே பார்ப்போம். அவர் உள்ளிட்ட சிலர் சேர்ந்து, கலைச் சொற்கள் ஜாபிதா ஒன்று சுமார் கால் நூற்றாண்டுக்கு முன் தயாரித்தார்கள். அந்த ஜாபிதா போன இடம் புல்லு முளைத்து விட்டது. அந்த ஜாபிதாவையே பின்பற்றித் 'தமிழில் முடியுமா?' என்று ராஜாஜி ஒரு புத்தகமே எழுதினர். அது இருக்கிற இடம் தெரிய வில்லை. அப்புறம் சர்க்காரில் வெவ்வேறு விஞ்ஞானத் துறைகளுக்குத் தனித் தனிப் பகுதிகளாக எட்டுச் சிறு சிறு கலைச் சொல் ஜாபிதாக்கள் தயாரித்தார்கள். அவற்றில் சில சொற்களையல்லாது மற்றவை யெல்லாம் அப்படியே ஆங்கிலமாகத்தான் வைத்திருந்தார்கள். அவை பரவாயில்லை என்றே தோன்றின. 'உப்புக்குச் சப்பாணி; ஓலைக்கு எழுத்தாணி' என்பது போல, அவை என் போன்றவருக்குச் சற்று உதவக் கூடியவை. இப்போது, அவை கூட அச்சில் இல்லையாம்; விலைக்குக் கிடைக்கவில்லை. எவ்வளவுதான் மெதுவான மெதுவாளர்கள் இந்தச் 'சொல்லாக்கல் பிஸினெ'ஸைக் கைக் கொண்டாலும், திரும்பத் திரும்ப இது பயன் படாமலே போய்க்கொண் டிருக்கிறது. 'பத்திரிகை அவசராளர்கள்' ஆக்குகிற பல சொற்கள் நிலைத்து

விடுகின்றன; சில சொற்கள் போய்விடுகின்றன. ராஜாஜி போன்ற 'மெதுவாளர்கள்' ஆக்குகிற சொல் ஜாபிதாக்களே ஒரேயடியாய்ப் போய்விடுகின்றன. இதற்கு என்ன காரணம்? ராஜாஜி யோசித்தது உண்டா? ராஜாஜி ஒரு மேதை; பெரிய புத்திமான். அவருடைய அரசியல் பல சமயம் எனக்குப் பெரிதும் பிடிக்கிறது; சில சமயம் பிடிப்பதில்லை. ஆனால், அந்த அரசியல் துதிக்கையை எழுத்தாளர்களிடமும் பத்திரிகைக்காரர்களிடமும் அவர் பல சமயம் நீட்டுவதுதான் கட்டோடு பிடிக்கவில்லை.

இதையெல்லாம் மிக்க வருத்தத்தோடுதான் இங்கே குறிக்கிறேன். ஏன் குறிக்கிறேன் என்றால், இந்தச் சொல் பஞ்சத்துக்கான உண்மைக் காரணத்தை நாம் அறிந்துகொள்வது மிகமிக அவசியம் என்று வற்புறுத்துவதற்காகத்தான். கருத்துக்களை வெளியிடும் முயற்சியிலேதான் சொற்கள் பிறக்கும்; கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலமே சொற்கள் புழங்கி நிலைக்கும். மனிதர்கள் வாழும் வாழ்விலே திசைச் சொற்கள் ஒரு பாஷையில் வந்து புகுகின்றன. ரேடியோ, மோட்டார்க் கார், ரெயில், சைக்கிள், ஏரோப்ளேன், கோர்ட் என்ற சொற்களை எந்த இங்கிலீஷ்காரனும் வேண்டுமென்றே நம் தலையில் சூழ்ச்சியாகக் கொண்டு வந்து சுமத்தவில்லை. ரோஜாப் பூவைக் கொடுத்தான் பாரசீகன். ரோஜா என்ற சொல்லும் கூடவே வந்தது. அகராதி என்பது சொற்களைப் பயிரிட்டு வளர்க்கும் இலக்கியப் பண்ணை அல்ல; வளர்த்த இலக்கியத்தின் சொல் விவர ஜாபிதாவேயாகும். அகராதியால் சொற்கள் புழங்கிப் பரவமாட்டா; இலக்கியத்தால்தான் புழங்கிப்

111025

பரவும். புதுப்புது நூல்கள் பிறந்து மக்களுக்குப் புதுப் புது அறிவுச் செல்வத்தை வழங்கினுல், அவற்றோடு கூடவே அவற்றுக்குரிய சொற்களும் புழங்கிப் பரவி நிலைக்கும்.

இதற்காக அகராதி முயற்சிகள் அனைத்தையும் நான் குறை கூறுவதாக நண்பர்கள் கருதிவிடக் கூடாது. ஸ்ரீ. வையாபுரிப்பிள்ளை அவர்கள் பதிப்பாசிரியராயிருந்து தயாராகியுள்ள தமிழ் லெக்ஸிகன் ஓர் அருமையான அகராதி. ஆனுல், இன்று அதை அப்படியே குழி வெட்டிப் புதைக்கும் முயற்சிகள் நடந்துகொண் டிருப்ப தாகச் சொல்கிருர்கள். அந்த அகராதி இப்போது அச்சில் இல்லை; விலைக்கு அகப்படவில்லை. ஆங்கிலத்தில் ஆக்ஸ்போர்டு அகராதி, வெப்ஸ்டர் அகராதி, சேம்பர்ஸ் அகராதி போன்றவற்றை அப்படியே மிகப் பெரிய வையாக அதிக விலையிலும், பல அளவுகளில் சுருக்கிய பல சிறு அகராதிகளாகவும் பதிப்பித்து லட்சக் கணக்கில் விற்கிருர்கள். இவை தவிர, எண்ணற்ற வேறு சொல் அகராதிகளும் தோன்றிப் புழங்குகின்றன. காரியத் துக்குதவாத எவையோ ஒன்றிரண்டு சிறு அகராதி களைத் தவிர்த்தால், அத்திபூத்தாற்போல நமக்கு உள்ள ஒரே பெரிய அகராதி தமிழ் லெக்ஸிகன்தான். அது இன்று எல்லாருக்கும் பயன்படாத நிலையில் குற்றுயி ராகக் கிடக்கிறது என்ருல், நாம் வருந்தத்தான் வேண்டும். அதற்கு ஏன் மறுபதிப்புக் கொண்டுவரக் கூடாது? அதில் உள்ள அத்தனை சொற்களையும் பொருள்களையும் அப்படியே சிறு எழுத்திலும் மெல்லிய காகிதத்திலும் பதிப்பித்தாலே, மிக ஏராளமான பேர் வாங்கக் கூடியபடி குறைந்த விலை வைக்க முடியும்.

ஸ்ரீ டி. எஸ். அவினாசிலிங்கம் அவர்களின் முயற்சியால் ஸ்ரீ பெ. தூரன் அவர்கள் பதிப்பாசிரியராக இருந்து தயாராகிவரும் 'கலைக் களஞ்சிய'மும் போற்றத் தக்க முயற்சிதான். இந்த மாதிரி பொருளகராதிகளை ஆதி காலத்திலே சீனர்கள் தயாரித்தார்களாம். பின்னால் மேல் நாட்டில் 'என்ஸைக்ளோபீடியா' என்ற பொருளகராதிகள் பல தோன்றின. மிகப் பிரசித்தமான பொருளகராதி பிரெஞ்சு என்ஸைக்ளோபீடியாதான். இப்போது என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்கா உலகப் பிரசித்தி பெற்றிருக்கிறது. பிரெஞ்சு என்ஸைக்ளோ பீடியாவுக்கு அந்தக் காலத்துப் பிரபல பிரெஞ்சு அறிஞர்களெல்லாம் எழுதினார்கள். ஒரு பேரியக்கமே அதனால் தோன்றி, என்ஸைக்ளோ பீடிஸ்ட்ஸ் என்ற ஒரு கோஷ்டியாரே ஏற்பட்டு விட்டார்கள். தமிழிலே இந்தக் 'கலைக் களஞ்சியம்' தயாரிப்பதில் உள்ள பெருஞ் சிரமங்களை ஸ்ரீ தூரனைப் போய்க் கேட்டால் தெரியும்; மற்றவர்களுக்குத் தெரியாது. ஆயினும், இந்தக் 'கலைக் களஞ்சியம்' உடனே பயன் தருவது சாத்தியம் இல்லை என்றே நான் நினைக்கிறேன்.

கதை, கட்டுரை, கவிதை போன்ற தூய இலக்கியப் பயிற்சிக்குத் தமிழ் லெக்ஸிகன் முற்றும் உதவும். விஞ்ஞானப் பயிற்சிக்கு இந்தக் கலைக்களஞ்சியம் அந்த மாதிரி உதவ முடியாது. மூன்று வால்யத்தில் முதல் பதிப்பை ஆரம்பித்த என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்கா இன்று இருபது வால்யங்களுக்கு மேல் விரிந்து விட்டதென்றால், அதற்குக் காரணம் தானாக அது வளர்ந்த தல்ல; ஆங்கிலத்தில் விஞ்ஞான நூல்கள்

எண்ணற்றவை வெளிவந் திருப்பதுதான். இப்படித் தமிழில் புதுப்புது விஞ்ஞான நூல்கள் வெளிவரும் போதுதான், அவற்றைப் படிப்பவர் சந்தேகந்தெளியவும் மேலும் விஞ்ஞான அறிவை விரிவுபடுத்திக்கொள்ளவும் இந்தக் 'கலைக் களஞ்சியம்' உதவும். இந்த கலைக் களஞ்சியம் தயாரிப்பதில், சொல் பஞ்சத்தாலும் பாஷை வளர்ச்சியில்லாக் குறையாலும் ஏற்பட்டுள்ள சிரமங்கள் போதாததற்கு, வேறு தொல்லைகளும் நேர்கின்றன. 'கிள்ளிவளவனுக்கு எட்டு வரி; பாணபட்டனுக்கு ஒரு வரிகூட இல்லையா?' என்பது போன்ற குற்றச் சாட்டுகள் வேறே! என்னைக் கேட்டால், இந்தக் 'கலைக் களஞ்சிய'த்தை இப்போது தயாரிக்காமல், மிக உயர்ந்த தரமான பல துறை விஞ்ஞான நவீனக் கலை நூல்களை முப்பது வால்யங்களுக்குத் திட்டமிட்டு, முடிந்த மட்டும் கலைச் சொற்களை நீக்கிய எளிய விளக்கமான நடையில் கொண்டுவந்தால், எவ்வளவோ பலன் தரும் என்றுதான் சொல்லுவேன்.

மொத்தத்தில், வண்டிக்கு முன் குதிரை பூட்டாமல் குதிரைக்கு முன் வண்டி பூட்டுவதுபோல், சொல்லாக்கல் முயற்சிகளும் அகராதி முயற்சிகளும் நடவாமல், புதுப் புதுத் துறை நூல்களை இயற்றும் முயற்சியில் நாம் இப்போது ஈடுபடுவதே மிகச் சிறந்த பயன் தரும்.

தமிழிலே புது நூல்கள்

சென்னையில் இந்திய சர்க்காரின் இன்பர்மேஷன் ஆபீஸராகப் பதவி வகித்த காலஞ் சென்ற ஸ்ரீ வரதன் அடிக்கடி நண்பர்களின் கூட்டத்தில் ஒன்று சொல்லுவார். "தமிழிலே கொஞ்ச காலத்துக்குக் கதைகளை யாரும் எழுதக் கூடாது என்று தடைபோட்டு விட வேண்டும். விஞ்ஞானம் போன்ற பொருள் அறிவு பரப்பும் நூல்களைத்தான் எவரும் எழுதலாம் என்று கட்டளை போட்டு விடவேண்டும்" என்று அவர் கூறுவார். ஒரு முறை பஸ்ஸுக்கு நாங்கள் இருவரும் காத்துக்கொண்டு நின்றபோதும், இதைத்தான் அவர் திரும்பத் திரும்ப வலியுறுத்திச் சொன்னார். அந்தப் பேச்சின் போதுதான், இப்படி அவர் சொன்னதன் கருத்து விளங்கியது.

அவருக்குக் கதைகளில் வெறுப்பு இல்லை; 'கற்பனை இலக்கியமே பயனற்றது' என்று கருதினவர் அல்ல அவர். சொல்லப் போனால், சர்க்காரின் தகவல் இலாக்கா

அதிகாரியாகப் பதவி ஏற்பதற்கு முன் ஆங்கில இலக்கியம் போதிக்கும் ஒரு காலேஜ் புரொபஸராக அவர் இருந்திருக்கிறார். ஷேக்ஸ்பியர் நாடகங்களையும் பழைய ஆங்கில இலக்கியங்களையும் மட்டும் அல்ல; நவீன ஆங்கில நாவல்களையும் சிறு கதை முதலிய கற்பனை இலக்கியங்களையும் படிக்காமல் ஒருவர் ஆங்கிலப் புரொபஸராக இருக்க முடியாது. தவிர, இலக்கியங்களை மதிப்பிடும் கிரிட்டிஸிஸம் என்ற விமர்சனக் கலைகளையும் நிச்சயம் அவர் பயின்றிருக்க வேண்டும்.

எனவே, ஸ்ரீ வரதன் தமிழின் வளர்ச்சிக்குக் கதை இலக்கியங்கள் வேண்டாம் என்று நினைத்தவர் அல்ல. தமிழில் வந்த புதுக் கதைகளையும் நாவல்களையும் கட்டுரைகளையும் படித்து மதிப்பிட்டவர் அவர் என்பது அவருடைய ஒரு கட்டுரையிலிருந்தே புலனாகிறது. அவரே சில தமிழ்க் கதைகளை எழுதியிருக்கிறார் என்று சொன்னதாகவும் எனக்கு ஞாபகம். ஆயினும், கொஞ்ச காலத்துக்கு - அதாவது பத்து வருஷத்துக்கு என்று வைத்துக் கொள்ளுங்கள் - தமிழிலே கதைகளே கூடாது என்று தடை விதிக்க வேண்டும் என்று அவர் சொன்னார். ஏன்? அதற்கு இரண்டு காரணங்கள்: ஒன்று, தமிழின் வளர்ச்சிக்குக் கதை இலக்கியம் மட்டும் பெருகுவது போதாது; இரண்டு, இப்போது மிக ஏராளமாய்த் தோன்றி வரும் கதைகள் மிகப் பெரும்பாலும் பொருளாழமும் அநுபவ விரிவும் கொண்டவையாக, தரத்தில் சிறந்தவையாக, விளங்கவில்லை. இவைதான் தமிழார்வம் கொண்ட அவருடைய உள்ளத்துக்கு வருத்தம் அளித்தன. சில காலம் தமிழிலே கதைகளே கூடாது என்று தடுத்தால்தான் தமிழ் வளரும் என்ற

கடுமையான யோசனையும் இதனாலேயே அவருடைய நொந்த மனத்தில் உதித்தது.

கற்பனைக் கதைகள், கவிதை, பொருளறிவு நூல்கள் மூன்று வகையும் செழித்தால்தான் தமிழ் முழு வளர்ச்சி பெறும். மூன்றில் எதையும் முக்கியம் அல்ல என்று சொல்ல முடியாது. மூன்றும் நேரடியில் ஒன்றுக் கொன்று தொடர்பற்றவையாகத் தோன்றும். உண்மையில் மூன்றுக்கும் தொடர்பு உண்டு. கற்பனை இலக்கியமும் கவிதையும் சொல்லுக்கும் நடைக்கும் நய மூட்டி மெருகேற்றி, கருத்தை வெளியிடும் ஆற்றலைப் பெருக்கிப் பக்குவப் படுத்தி, உள்ளத்தைப் பண் படுத்தும். விஞ்ஞானம் முதலிய அறிவு நூல்கள், புதுப் புதுப் பொருள்களில் மக்களுக்கு ஞானமளித்து, அறிவு விரிவை உண்டாக்கும்.

அறிவு விரிவும் பண்பட்ட உணர்ச்சியும் உடைய நிலையிலே தோன்றும் கற்பனை இலக்கியத்திலும் கவிதை யிலுந்தான் ஆழத்தையும் நுணுக்கத்தையும் காண முடியும்; சொல்லும் நடையும் பக்குவம் பெற்ற நிலையிலே தோன்றும் அறிவு நூல்கள்தான் திட்டமும் தெளிவும் பெற்றிருக்கும். அறிவில்லாத உணர்ச்சி அபாயமானது; உணர்ச்சியில்லாத அறிவு குரூரமாய்ப் போகும். அறிவில்லாத இடத்திலே உண்மையின் ஒளியைக் காண முடியாது; பண்பட்ட உணர்ச்சி யில்லாத இடத்திலே வாழ்வு இனிக்காது. அறிவை வளர்ப்பது விஞ்ஞானம்; உணர்ச்சியைப் பண்படுத்துவது தூய கற்பனை இலக்கியம். இரண்டும் ஒன்றுக் கொன்று வாழ்விலும் சரி, மொழி வளர்ச்சியிலும் சரி, உதவிக்

கொள்பவை. அறிவின் ஆழமில்லாத இலக்கியம் குருட்டுத்தனத்தைப் பலமாய்ப் பரப்பிவிடும்; பண்பட்ட சொல்லும் நடையு மில்லாத அறிவு நூல்களால் மயக்கமும் சலிப்புந்தான் ஏற்படும்-அறிவு விரிவடையாது, பரவாது.

இன்று தமிழிலே கற்பனை இலக்கியம் மட்டுமே பெருகி வருகிறது. நவீன அறிவு நூல்கள் அங்கொன்று இங்கொன்றாக அத்தி பூத்தாற் போலத் தோன்றுகின்றன. அவையும் கவைக் குதவாத நிலையில் இருக்கின்றன. இதனால் தமிழின் வளர்ச்சி முழுமையாக இல்லை; ஊனமாக இருக்கிறது. இந்தக் குறை வர வர அதிகமாய்க் கற்பனை இலக்கியத்திலே பிரதிபலித்து வருகிறது. அறிவிலே ஆழமில்லாத ஒருவன், நவீன வாழ்க்கையைச் சித்திரிக்கும் கற்பனை இலக்கியங்களை எப்படிப் படைக்க முடியும்? மனத் தத்துவத்தைத் துளியும் அறியாத ஒருவன், மனித குணாதிசயங்களை எப்படி வர்ணிக்க முடியும்? பாத்திரங்களை எப்படிப் படைக்க முடியும்? நவீன விஞ்ஞானப் பொருள்கள் நம்மை எங்கும் சூழ்ந்திருக்கும்போது, அவற்றைப் பற்றித் துளியும் சொல்ல வகை யில்லாத நிலையில் நம் மொழியை வைத்துக்கொண்டு, தத்ரூபமாக வாழ்க்கை நிகழ்ச்சிகளை எப்படிப் புனைந்து விவரிக்க முடியும்? 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்ற முறையில் அபத்தக் களஞ்சியமான கற்பனை, இலக்கியத்தைப் படைத்து விடலாம். அதற்கு எந்தப் பொருள் அறிவும் தேவையில்லை என்பது போலவே எண்ணற்ற கதைகள் தோன்றி வருவதைக் கண்டுதான், ஸ்ரீ வரதனைப்போன்ற அறிஞர்கள் வருந்துகிறார்கள்.

ஆனால், ஸ்ரீ வரதனைப் போல் நான் சொல்ல மாட்டேன். கதைகள் எழுதுவதற்கு எந்தக் கால அளவுக்காவது தடை போட வேண்டும் என்று நான் கூறவில்லை. இன்று தமிழிலே அறிவு நூல்களும் ஏராளமாய்த் தோன்றுவதற்கான வேலையில் அறிஞ ரெல்லாம் ஈடுபட வேண்டும் என்பதே என் ஆசை. அவை வரவர அதிகமாய்த் தோன்றினால், அந்தச் செழிப்புத் தானாகவே நம் கற்பனை இலக்கியத்திலும் பிரதிபலிக்கத் தொடங்கிவிடும்; அப்போது தமிழின் வளர்ச்சி முழுமை பெற்றதாகும்.

புதுப்புது அறிவு நூல்கள் உடனடியாகத் தோன்றாத-எளிதில் தோன்ற முடியாத-நிலை இன்று ஏற்பட்டதற்குரிய காரணத்தை ஏற்கனவே சொல்லி யிருக்கிறேன். பல பொருள் அறிவு வாய்ந்தவர், தாமறிந் ததைத் தமிழில் சொல்ல ஆற்றலற்றவர்களா யிருக் கிறார்கள்; அழகு படத் தம் கருத்துக்களை வெளியிடும் ஆற்றல் உள்ளவர்களுக்குப் பல பொருள் அறிவு இல்லை. இந்த நிலை மாறுவதற்கான வழியைக் கல்விச் சாலைகளிலே நாம் கைக்கொள்வதன் அவசியத்தையும் முன்னமே குறிப்பிட் டிருக்கிறேன். இதே சமயத்தில் இன்றே பல அறிவு நூல்களும் தமிழிலே வர இயன்ற அளவுக்கு இயன்ற முறையில் நாம் பாடுபட வேண்டும்.

பாட புத்தக ரீதியாகப் பல அறிவு நூல்களையும் தயாரித்தாக வேண்டும் என்று நாம் எண்ண வேண்டிய தில்லை. படித்தவரெல்லாம் புரிந்து கொள்ளக் கூடியபடி விஞ்ஞான பரிபாஷைச் சொற்களை நீக்கிச் சுலபமான

நடையில் எழுதிய எத்தனையோ அறிவு நூல்கள் ஆங்கிலத்தில் இன்று வந்துகொண்டிருக்கின்றனவே ; அவற்றை நாம் நமக்கு இந்த விஷயத்தில் உதாரணமாகக் கொள்ளலாம். முக்கியமாக லான்ஸெலட் ஆக்பென் என்பவரின் 'மாத்தமாட்டிக்ஸ் ஃபார் தி மில்லியன்ஸ்' என்ற கணித நூலையும், 'ஸயின்ஸ் ஃபார் தி ஸிட்டிஸென்ஸ்' என்ற விஞ்ஞான நூலையும் குறிப்பிடலாம். இரண்டும் இரண்டு அற்புதங்கள். 'ப்ராபபிலிட்டி,' 'ஸ்டாட்டிஸ்டிக்ஸ்', 'கால்குலஸ்' போன்ற உயர் தரக் கணிதங்களின் அடிப்படைகளைக் கூட அந்தக் கணித நூலில் அவர் விளக்கியிருக்கிறார். 'அஸ்ட்ரானமி', 'கிராவிட்டி', 'மெக்கானிக்ஸ்', 'எலெக்ட்ரிஸிட்டி' 'கெமிஸ்ட்ரி', 'ரேடியோ', 'ஜெனெட்டிக்ஸ்', 'இவல்யூஷன்', 'ஜியாலஜி' இப்படிப் பல துறை விஞ்ஞானங்களின் அடிப்படைகளையும் அந்த விஞ்ஞான நூலில் அவர் விளக்கியிருக்கிறார். இவ்வளவுக்கும் விஞ்ஞான பரிபாஷைச் சொற்களை மிகப் பெரும்பாலும் அவர் விலக்கி விட்டார். இடை இடையே வரும் ஒன்றிரண்டு மிக முக்கியமான பரிபாஷைச் சொற்களை அந்த அந்த இடத்தில் வரும் விளக்கத்தையும் நடையின் போக்கையும் கொண்டே நாம் புரிந்து கொள்ளலாம். இவை இரண்டையும் தவிர, 'பெங்குவின் பாக்கட் புக்' வரிசைகளில் இந்த மாதிரி எண்ணற்ற விஞ்ஞான அறிவு நூல்கள், எளிதில் விளங்கும் நடையிலும் முறையிலும் அமைந்து வெளி வருகின்றன. காலேஜில் படித்த பட்டதாரிகளுக் கல்லாத மற்றவர்க்கெல்லாம் விஞ்ஞான அறிவைப் பரப்ப இந்த நூல்களெல்லாம் மகத்தான உதவி புரிகின்றன. விஞ்ஞானத்தில் அசலாகத் தாமே

புது உண்மைகளைக் கண்டுபிடித்த ஐன்ஸ்டீன், ஜீன்ஸ், எட்டிங்டன், கமாவ் போன்ற நிபுணர்களே மனங்கவரும் தெள்ளிய நடையில் விஞ்ஞான விளக்கங்களை எழுதியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் முன் மாதிரிகளாகக் கொண்டு தமிழிலே பல நூல்கள் வரவேண்டும் என்பது என் ஆசை. மிகச் சிக்கலான நுணுக்கமான விஷயங்களையெல்லாங்கூட விசாரித்து விளக்கிய விஞ்ஞான நூல்கள் தமிழிலே வர வேண்டும். இன்று ஆங்கிலத்தில் நூறு பக்கத்தில் சொல்லும் ஒரு விஷயத்தைத் தமிழிலே இரு நூறு பக்கத்தில் சொல்ல நேரலாம். ஒன்று பாஷை நிலை காரணமாகவும், இரண்டு படிப்பவர் நிலை காரணமாகவும், இப்படி நேரலாம். அதனால் பரவாயில்லை; விளக்கமுந் தெளிவுந்தான் மிக மிக முக்கியம். அப்போது தான் திசைச் சொற்கள் வந்து ஜீர்ணமாகியோ புதுச் சொற்கள் உருவாகி நிலைப்பட்டோ தமிழ் வளம் பெறும்.

இப்படிப் புதிய புதிய விஞ்ஞான நூல்களுக்கு மார்க்கட் உண்டா? இவற்றை இன்று யார் எழுதுவது? எப்படி எழுதுவது? என் சொந்த அநுபவத்திலிருந்து அவற்றுக்கு நிச்சயம் தமிழ் மக்களிடையே மார்க்கட் உண்டு என்றே நான் மதிக்கிறேன். பள்ளிக்கூடங்களையும் அதிகாரிகளையும் நாம் சந்திக்கத் தேவையே இல்லை; பொது மக்களையே சார்ந்து இவற்றை நாம் தயாரித்து வெளியிட வேண்டும். பாட புத்தக தோரணையில் இவற்றை எழுதத் தேவையேயில்லை. நுணுக்கமான சிக்கலான விஞ்ஞான விஷயங்களைக் கூடத் தெளிந்த நடையில் சுவைபட எழுத முடியும் என்பதற்குச் சான்றாகப் பல ஆங்கில நூல்களை இன்று நாம் காண்கிறோம். அப்படிப்பட்ட (அவற்றையும் விடச்

சற்று விளக்கமாகத்தான்) தமிழ்நூல்கள் வெளிவந்தால், தமிழ்ப் பொது மக்கள் நிச்சயம் ஆதரிப்பார்கள். அவர்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்று சொல்வது வீண் பழியாகும். தெளிவோ சுவையோ இல்லாமல் விஞ்ஞானம் பற்றிய சுலப நூல்கள் சிலவற்றைத் தயாரித்து வெளியிட்டவர்கள், அவற்றை விற்க வகை யில்லாது ஊறுகாய் போட்டுக்கொண் டிருப்பதைப் பார்த்து நாம் அஞ்ச வேண்டிய தில்லை.

யார், எப்படி இந்த நூல்களை எழுதுவது என்பது பற்றி வெகு நாளாகவே எனக்கு ஒரு யோசனை உண்டு. அந்த யோசனையைச் சில பிரசுரகர்த்தர்களிடம் நான் பல முறை சொல்லிப் பார்த்தேன். பலிக்கவில்லை. பணமுள்ள வர்களிடம் மனமில்லை; மனமுள்ளவர்களிடம் பண மில்லை. ஆனால், அப்படி, ஒன்றும் மற்றப் புத்தக வெளியீடுகளை விட இவற்றுக்கு அதிகப் பணம் தேவை யில்லை; மனந்தான் வேண்டும். என் யோசனையைச் சொன்னால் உங்களுக்குப் புரியும். தமிழில் கதையும் கட்டுரையும் எழுதும் எழுத்தாளர் பலருக்குத் தாங்கள் அறிந்த விஷயங்களை அழகாகவும் சுவை படவும் வெளியிடும் ஆற்றல் இருக்கிறது. விஞ்ஞான விஷயங்களை நன்றாக அறிந்த நிபுணர் பலர் நம்மிடையே இருக்கிறார்கள்.

முக்கியமாக, காலேஜ் புரொபஸர்களைக் குறிப் பிடலாம். அந்த நிபுணர்கள் தாங்களே தமிழில் எழுதி விட வேண்டு மென்றும் அப்படி எழுதாமல் பிறர் துணையை நாடுவது கௌரவக் குறைவென்றும் எண்ணக் கூடாது. எழுத்தாளர்களும் விஞ்ஞான அறிஞர்களும்

துணை சேரவேண்டும். முடவரும் குருடருமான இரட்டைப் புலவர்களின் உதாரணத்தை இந்தக் காரியத்துக்குப் பின்பற்றுவதால் இருவரில் எவருக்கும் இழுக்கு வந்துவிடாது. எந்த விஷயத்தில் எந்த எழுத்தாளருக்கு ஆஸ்தை உண்டோ அந்த விஷயத்தை நன்கறிந்த அறிஞருடன் அவர் துணை சேரலாம். உதாரணமாக, எனக்குப் பௌதிகம், வான சாஸ்திரம், கணிதம், மின்சாரம், ரேடியோ போன்ற துறைகளில் விசேஷ ஆஸ்தை உண்டு. இவற்றை நன்கறிந்த ஒருவரின் துணை எனக்குக் கிடைத்தால் இவை பற்றித் தமிழில் நூல்கள் எழுத நான் களிப்புடன் இசைவேன். ஆனால் இப்படித் தயாராகும் நூல்களை வெளியிடச் சில பிரசுர கர்த்தர்கள் முன் வந்தாலல்லாது இது சாத்தியமில்லை.

என்னைக் கேட்டால், இப்படி, எழுத்தாளரும் பொருளறிவோரும் துணை சேரப் பிரசுரகர்த்தர் சிலரே முயற்சி எடுப்பதுதான் பலன் அளிக்கும் என்று சொல்வேன்.

எப்படியானாலும் சரி, தமிழிலே அறிவுப் பொக்கிஷங்களான சுவையான பொருளறிவு நூல்கள் பல இன்றே வந்தாக வேண்டும். இயன்றவரெல்லாம் அதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

தமிழின் தனி நிலை

எங்கள் வீட்டிலே அடிக்கடி பழமொழிபோல ஒரு பதத் தொடர் சொல்வார்கள். 'எட்டே கடுக்காய், எட்டே கடுக்காய்' என்பதுதான் அது. கிராமத்திலே ஒரு நாட்டு வைத்தியன் இருந்தானும். போலி ஆசாமி! அவனுக்குத்தான் 'எட்டே கடுக்காய்' என்று பெயர். ஏன் அந்தப் பெயர் வந்தது ?

அவனிடம் யாராவது போய்த் "தலைவலி" என்று சொல்வார்கள்.

"அவ்வளவு தானே! நொடியில் தீர்த்து விடுகிறேன். எட்டே கடுக்காய்!" என்பானும் அந்த வைத்தியன்.

"வைத்தியரே, மூக்கு வலி."

"அவ்வளவு தானே! நொடியில் தீர்த்து விடுகிறேன். எட்டே கடுக்காய்!"

காய்ச்சல், கபஜ்வரம், தலை சுற்றல், ஆஸ்த்மா, க்ஷயம், சொறி, சிரங்கு எதுவானாலும் சரி; எட்டே கடுக்

காயில் தீர்த்து விடுவதாக அவன் சொல்வானும். உண்மையிலே ஆயுர்வேத நூலார் கடுக்காயை வாதாதி திரிதோஷங்களையும் நீக்கும் சர்வ ரோக நிவாரணி என்றும் கிழத்தன்மையைப் போக்கும் அமிர்தம் என்றுந் தான் சொல்லுகிறார்கள். ஆனால், உண்டால், மோந்தால், தொட்டால், கண்டால் பேதி யாகும் வகைகளெல்லாம் கடுக்காயில் இருப்பதாகவும் அவர்களே அபாய எச்சரிக்கை செய்கிறார்கள். ஆகவே, இந்தக் கடுக்காய் விஷயத்தில் நாம் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே இருக்க வேண்டும்.

அரசியல், மொழி, பொருள் முதலிய துறைகளிலும் இந்தக் கடுக்காய் வைத்தியனைப் போலவே சகல பிரச்னைகளுக்கும் சர்வ சஞ்சீவியான ஒரு பரிகாரத்தைப் பலர் தேடுகிறார்கள்.

இந்தியாவில் பதினான்கு தேசீய பாஷைகள் இருக்கின்றன. பொது மொழி-மத்திய சர்க்காரின் ஒரே ஆட்சி மொழி-ஹிந்தி என்று சொல்லி, செயற்கையான முயற்சிகளெல்லாம் பல புரிந்து அதை நிலை நாட்டப் பார்க்கிறார்கள். ஆசை காட்டுகிறார்கள்; பயமுறுத்துகிறார்கள்; வலுக்கட்டாயமான நிர்ப்பந்தங்களை விதிக்கிறார்கள்; நய வார்த்தைகள் சொல்லுகிறார்கள்.

நம் பாஷைகள் அனைத்துக்கும் ஆதார பொக்கிஷமா யிருப்பது சம்ஸ்கிருதம். ஹிந்திக்கு அது ஏராளமான சொற்களை வழங்கி யிருக்கிறது. அதே போல மராட்டி, குஜராத்தி, பஞ்சாபி முதலிய வட இந்தியப் பாஷைகள் அனைத்தும் சம்ஸ்கிருதத்திலிருந்து எண்ணற்ற சொற்கள் பெற்றிருக்கின்றன. தெலுங்கு,

கன்னடம், மலையாளம் முதலிய தென்னாட்டுப் பாஷைகளும் பெருவாரியாகச் சம்ஸ்கிருதச் சொற்களை அடைந்திருக்கின்றன. தமிழிலுங் கூடச் சம்ஸ்கிருதச் சொற்கள் பல வழங்கி வருகின்றன. ஆயினும், தமிழை மற்றவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அதில் வந்து வழங்கும் சம்ஸ்கிருதச் சொற்கள் மிகவும் கொஞ்சம் என்றே சொல்ல வேண்டும். இந்த விஷயத்தை யெல்லாம் ராஷ்டிரபதி ராஜேந்திர பாபுவே சமீபத்தில் எடுத்துரைத்தார்.

மேலும் அவர், "எனக்குத் தெலுங்கில் வரவேற்பளித்தார்கள். அதில் பல சம்ஸ்கிருதச் சொற்கள் இருந்தன. தெலுங்கிலே எனக்குச் சிறிது அறிவு இருந்திருந்தாலே போதும்; அந்தத் தெலுங்கு வரவேற்பை நன்றாக நான் புரிந்துகொண் டிருப்பேன்" என்றார்.

ராஷ்டிரபதி சொன்னதெல்லாம் உண்மை; தெலுங்கைப் பற்றி அவர் குறிப்பிட்டது முற்றும் உண்மை. இங்கேதான் ஒரு விஷயத்தை நாம் உற்று நோக்க வேண்டும்.

மற்றப் பாஷைகளெல்லாம் போகட்டும்; தமிழிலே ஏன் அதிகமான சம்ஸ்கிருத வார்த்தைகள் புகவில்லை? தமிழ் ஏன் மற்ற இந்தியப் பாஷைகளோடு நெருங்கி உறவு கொள்ள வில்லை? தமிழ் நாட்டிலே மட்டும் ஏன் பலமான ஹிந்தி எதிர்ப்பு உருவாகி வளர்ந் தோங்கி வருகிறது? எல்லாம் அரசியல் சூழ்ச்சி என்று மொட்டையாகச் சொல்லிவிடக் கூடாது. சொல்லப் போனால் ஹிந்தி எதிர்ப்பை வகுப்பு வாதத்தோடும் அரசியலோடும் ஒட்ட வைத்ததால்தான், அந்தக் கிளர்ச்சி

பலங்குன்றி யிருந்தது என்று நான் சொல்வேன். வகுப்பு வாதத்தையும் அரசியலையும் ஹிந்தி எதிர்ப்புடன் ஒட்டி வைக்காமல் ஏற்கனவே தனிப்படுத்தி வைத்திருந்தால், இதற்குள் காவேரி வெள்ளம் போல் அது பெருகி வலுத்திருக்கும்.

மற்ற எந்த இந்தியப் பாஷையையும் விட - ஹிந்தி யையும் விடத்தான் - அலாதியான சில பண்புகளையும் தனிச் சிறப்புக்களையும் பெற்றிருப்பது தமிழ். தமிழின் நிலை தனியான ஒன்று.

தமிழ் மிகவும் பழமையான ஒரு பாஷை. அது ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முந்திய இலக்கண இலக்கியங்களைப் பெற்றிருக்கிறது. மற்ற இந்தியப் பாஷைகளைப்போல் அது இந்தியாவுக்குள்ளே அடங்கிக் கிடக்கவில்லை. சற்றுக் கடுமையான வார்த்தைகளில் சொன்னால், தமிழ் பிறந்த தென்னாட்டிலே தமிழை அடக்கி ஒடுக்கி நசுக்கி விட்டால் கூட, திரைகடல் தாண்டிய இடங்களிலே அது செழித்தோங்குவது நிச்சயம். இலங்கையிலே, தமிழ் வேரூன்றிய - தமிழருள் ஒரு பகுதியினரின் தாயகமான - யாழ்ப்பாணம் இருக் கிறது. இலங்கையின் ஜனத்தொகையில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதியினர் தமிழர். அங்கே நேற்றுவரைச் சிங்களத்துக்குச் சமதையான தேசிய பாஷையாக அரசாங்கத்தில் அந்தஸ்துப் பெற்று அது நிலவிவந்தது. இன்று அதைக் கவிழ்க்கும் முயற்சி நடப்பது உண்மை. ஆயினும், இலங்கைத் தமிழர் வீறுகொண்டு அந்த விபரீத முயற்சியை எதிர்த்து வருகிறார்கள். நியாய உள்ளம் படைத்த பிரபல சிங்களத் தலைவர் சிலருமே

அந்தத் தமிழருக்கு ஆதரவு காட்டி உடனுழைக் கிறார்கள்.

இன்று சிங்கப்பூரிலே ராஜாங்க பாஷைகளில் ஒன்றாகத் தமிழ் பெருமை பெற்றிருக்கிறது. பர்மா, மலாயா, தென்னாப்பிரிக்கா முதலிய பல வெளிநாடுகளில் தமிழர்கள் ஏராளமா யிருக்கிறார்கள்.

தமிழுக்கு இத்தனை மக்கள் இருக்கிறார்கள் - அதைப் போற்றி வளர்க்க இத்தனை பேர் இருக்கிறார்கள் - தமிழுக்குப் பழமையான பேரிலக்கியம் இருக்கிறது. தமிழ் நாடு பழம் பெரும் நாடு. பல மொழியாளர்கள் அதில் எங்கும் ஏறக்குறையச் சமமான எண்ணிக்கை களில் கலந்து வசிக்கவில்லை. அலைமோதிய எந்த நாகரிகமும் தமிழைப் பெரும்படியாகப் பாதிக்கவில்லை. இவற்றையெல்லாம் கண்டு பிடிக்கப் பெரிய ஆராய்ச்சி எதுவும் தேவையில்லை. இன்று கண்ணெதிரே கண் ணுக்குக் கண்ணாகத் தென்படும் உண்மைகள் இவை.

'கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளந் துளுவும் உன் உதரத் தெழுந்தே அவை ஒன்று பல வாயின' என்று பாடினார் கவிஞர் சுந்தரம் பிள்ளை. இந்த உண்மையை இன்று அந்த அந்த மொழிக்காரர் சிலர் மறுக்கலாம். ஆயினும், மேற்போக்காகப் பார்த் தாலே, இப்படி அந்தப் பாஷைகளெல்லாம் பெரிதும் தமிழையே அடிப்படையாகக் கொண்டு பிறந்தவையாகத் தான் இருக்கவேண்டும் என்பது விளங்கும். அவற்றின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உதவியவை வேறு அம்சங்க ளாக இருக்கலாம். மலையாளம், தெலுங்கு, கன்னடம் இந்த மூன்றிலும் பல தமிழ்ச் சொற்களையும் இயல்பு

8

களையும் - மேற்போக்காகக் கவனிக்கும்போதே - காண்கிறோம். இந்த நான்கு திராவிட மொழிகளுக்குள்ளும் மிகப் பழமையானது தமிழே என்பதற்குப் பழந் தமிழ்ப் பேரிலக்கியங்களே அத்தாட்சிகளாக விளங்குகின்றன. முந்தியிருந்ததிலிருந்துதான் பிந்தி வந்தவை பிறந்திருக்க முடியும். "இல்லை, அவை தாமே பிறந்து வளர்ந்தவை" என்று அந்த மொழிகளின் ஆராய்ச்சியாளர்கள் சொன்னால், அதைப் பற்றி நமக்கொன்றும் கவலையில்லை. ஆயினும், இதை எதற்காகக் குறிப்பிட்டேன் என்றால், ஒரு விஷயத்தைச் சொல்லத்தான். தமிழுடன் நெருங்கிய உறவுகொண்ட இன மொழிகள் உண்டு. அவைதான் தெலுங்கு, மலையாளம், கன்னடம் மூன்றும். அவை அதிகமான சம்ஸ்கிருதச் சொற்களைப் பெற்றிருக்கலாம்; ஆயினும், அவற்றுக்குப் பொருளிடங்காலம் காரணமாகத் தமிழோடுதான் அதிகத் தொடர்பும் ஒற்றுமையும் இருந்தாலும், இன்று அவை சம்ஸ்கிருதச் சொற்களை மட்டும் அல்ல; வட சொற்களையும் ஏற்கத் தயாராயிருக்கின்றன. ஹிந்திக்கும் அந்த மொழிகளின் பிரதேசங்களில் கணிசமாக எதிர்ப்பு இல்லை; ஹிந்தியை எளிதில் ஏற்றுக்கொள்ளக்கூட அவை ஓரளவு தயாராயிருக்கின்றன என்றே தோன்றுகிறது. இதற்குக் காரணம் என்ன? தமிழ் தவிர மீதித் திராவிட மொழிகளும் எல்லா வட இந்திய மொழிகளையும் போலவே, எழுத்தொலிக் குறிகளைப் பெற்றிருக்கின்றன. எழுத்து வடிவங்கள்தான் வேறேயல்லாது தேவநாகரியின் ஒலிக்குறிகளையே, தமிழ் நீங்கலாகச் சகல இந்திய மொழிகளும் பெற்றிருக்கின்றன. இதனால் சம்ஸ்கிருதச் சொற்களை அவையெல்லாம் சிரமமில்லாது ஏற்று

வழங்க முடியும். இதனால், தமிழைத் தவிர மீதிப் பிரதேச இந்திய மக்களெல்லாம் வருங்காலத்தில் வர வர அதிகமாக ஒற்றுமை பெற்று, ஒருவருக்கொருவர் மொழியிலும் இலக்கியத்திலும் உதவிக்கொண்டு வாழ்வது சாத்தியமாகலாம்.

சுள்ளியும் செத்தையும் காய்ந்திருந்தால்தான், தீ மூட்ட முடியும். கிளறிவிட ஏற்ற காரணங்கள் அடியிலே கிடந்தால்தான், கிளர்ச்சியைத் தூண்டிவிட முடியும். காயாத சுள்ளியில் தீ பரவாது. புதைந்து கிடக்கும் உண்மைக் காரணங்கள் நமக்குப் புலப்படாதிருக்கலாம். எந்த கிளர்ச்சி பரவுவதற்கும் பின் பலமான காரணங்கள் இருக்கும். அவற்றை நாம் உய்த்துணராமலே பரிகாரம் தேடிவிட முடியாது. தமிழ்நாட்டிலே ஹிந்தி எதிர்ப்பு வலுப்படுவதற்கு நியாயமான இயற்கையான காரணங்கள் உண்டு. அவற்றை மிக லேசானவை-அற்பமானவை - என்று தள்ளிவிட முடியாது.

மீண்டும் சுருங்கச் சொல்கிறேன். தமிழ் நாடு பழம் பெரும் நாடு. தொன்மையான இலக்கண இலக்கியங்களைப் பெற்றது அது. தமிழ், தமிழ் நாட்டிலே மட்டும் அல்ல ; கடல் தாண்டியும் வேரூன்றியிருப்பது. பாரத சர்க்காரின் கை நீளமுடியாத இடங்களிலும் பரவியிருப்பது 'தமிழ் நாடு' என்றே சொல்லலாம். எழுத்தொலிக் குறிகளிலே மற்ற எந்த இந்தியப் பாஷையையும் விட்டுத் தனித்து நிற்பது தமிழ். தமிழ்ச் சொற்களை மற்றவர் எடுத்துக்கொள்வது ஓரளவு சுலபம். மற்றவருடைய சொற்களைத் தமிழர் ஏற்றுக் குறிப்பதும் ஒலிப்பதும் அடியோடு சிரமம். இந்த அடிப்படைக்

காரணங்க ளெல்லாந்தான் காய்ந்த சுள்ளியைப்போல் ஹிந்தி எதிர்ப்புப் பரவ உதவுகின்றன.

என் நெருங்கிய நண்பர் ஒருவர்-ஹிந்தியை நன்குகப் -பயின்ற ஒரு தமிழர், சமீபத்தில் தெரிவித்த ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டிலே ஹிந்தியைப் பரப்ப வந்திருக்கும் வட நாட்டுக் காரர் ஒருவர், என் நண்பரிடம் தமிழ் கற்கத் தொடங்கி னாராம். ஆரம்ப காலத்திலேயே “ உங்கள் தமிழ் மிகவும் கஷ்டமானது போலிருக்கிறதே! என்னால் கற்க முடி யாதோ என்று அஞ்சுகிறேன் ” என்றாராம்.

தமிழில் உள்ள எழுத்தொலிகளில், ‘ழ’ கரத்தைத் தவிர மற்ற அத்தனையும் தேவநாகரியில் இருக்கின்றன; அத்தனையும் மற்ற இந்திய பாஷைக்காரருக் கெல்லாம் பழக்கமானவை. தேவநாகரி எழுத்தொலிகளில் தமிழ ருக்குப் பரிசயம் இல்லாதவை பல. இந்த நிலையில் தமிழை ஒரு ஹிந்திக்காரர் கற்பதற்குக் கஷ்டப்படுகிறார்; கற்கவே முடியாதோ என்று அஞ்சுகிறார். அப்படி யென்றால், ஹிந்தியைத் தமிழன் கற்க முற்படுவது இன்னும் எவ்வளவு பெரிய சிரமமா யிருக்கும்?

இதெல்லாம் மிகைப் படுத்திய வாதம் என்று எவராவது நினைத்தால், அது பெரிய அசட்டுத்தனம். சம்ஸ்கிருத உச்சரிப்புத் தமிழனுக்கு மிகவும் கஷ்டமா யிருப்பதால்தான், அது தமிழ் நாட்டில் மகா ஜனங்க ளிடம் ஏற்கனவே பெரிதும் பரவவில்லை. இந்தக் காரணமே செடிக்கு ஆணிவேர் போல், இன்று பல குரோத உணர்ச்சிகள் வலுப்பதற்கு அடிப்படையாக இருக்கிறது என்றால், சிலருக்கு வேடிக்கையாகத்

தோன்றும். ஆனால், அப்படி அசட்டை செய்வது தான் வேடிக்கையாகத் தோன்றுகிறது. சற்றுப் பச்சையாக ஒன்று சொல்ல விரும்புகிறேன்; கூடு கட்டத் தெரியாத குரங்கு, குருவிக்கூண்டைப் பிய்த்தெறிந்த கதையை இங்கே நாம் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். தமிழின் இந்த எழுத்தொலிக் குறைவு, மக்களின் உள் மனத்தில் புதைந்த தாழ்மை மனப் பிராந்தியாக ஏற்கனவே ஒருவாறு உருமாறி யிருக்கிறது. புற்றுப் பாம்பை உசும்பி விடுவது போல இதை நாம் மீண்டும் மீண்டும் கிளறிக்கொண்டே யிருப்பது அபாயம் அல்லவா ?

மற்ற இந்திய பாஷைக்காரர்களே இந்திய 'ஹிந்தி' சர்க்கார் எப்படி நடத்தினாலும் சரி; தமிழனை அவனுடைய அலாதியான இலக்கண இலக்கிய சமூக ஐதிகங்களுக்கு ஏற்றபடி தனி முறையில் நடத்த வேண்டும்.

பொது லிபி-1

இன்று பொது மொழி ஒன்றை எல்லார் தலையிலும் சுமத்துவதை விட, பொது லிபி ஒன்றை ஏற்படுத்துவது மேலாக இருக்கும் என்று நண்பர்களிடம் நான் சொல்லி வந்தேன். இதே சமயத்தில் பி. இ. என். பத்திரிகையில் இதுபற்றித் தீவிர வாதப் பிரதிவாதங்கள் வெளிவரத் தொடங்கியதைக் கண்டேன்.

'பொது லிபி தேவையா, இல்லையா !'—இது ஒரு கேள்வி.

'பொது லிபி சாத்தியமா, இல்லையா ?'—இது மற்றொரு கேள்வி.

பொது லிபி தேவைதான் என்றால், அது எப்படிப் பட்ட லட்சணங்களைக் கொண்டிருக்க வேண்டும் ? எதைப் பொது லிபியாகக் கொள்ளலாம் ? அதற்கு என்ன உபயோகம்? அதை எப்படி வழக்குக்குக் கொண்டு வருவது ?—இவற்றை யெல்லாம் சிந்திக்க வேண்டும்.

இந்தப் பொது லிபி விஷயத்தைப்பற்றி வெகு நாட்களாகவே பேசி வந்திருக்கிறார்கள். ஆனால், இதை விரிவாக எவராவது ஆராய்ந்தார்களா என்பது எனக்குத் தெரியாது. ரோமன் லிபியில் ஹிந்தியை எழுதி அந்நியர் கற்றிருக்கிறார்கள். தமிழை ரோமன் லிபியில் எழுதிப் பிறருக்குப் போதிக்க முயன்றிருக்கிறார்கள். தமிழை எழுத ரோமன் லிபியை எப்படிப் பயன் படுத்தலாம் என்பது பற்றி ராஜாஜி போன்றோர் கட்டுரைகள் எழுதி யிருக்கிறார்கள்.

ஆனால், பாரதம் முழுவதற்கும் ஒரு பொது லிபி வேண்டியது தானா என்ற கேள்வியையோ, அது பற்றிய பிற கேள்விகளையோ குறித்து இப்போதுதான் சிலர் தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கி யிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். (இந்தக் கட்டுரையை எழுதிய பல நாளைக்குப் பிறகு, சென்னை ஸம்ஸ்கிருத காலேஜின் 'கோல்டன் ஜூபிலி' மலரைப் பார்த்தேன். அதில் பொது லிபி பற்றிக் கனம். ஸ்ரீ. வீ. கிருஷ்ண ஸ்வாமி ஐயரின் பேச்சு ஒன்று இருக்கக் கண்டேன். 1910 டிசம் பரில் அலாகாபாது நகரில் பொது லிபி பற்றி ஒரு மகாநாடே நடந்திருக்கிறது. அதில் கனம். ஐயரவர்கள் தலைமை வகித்துப் பேசிய முன்னுரை அது. பொது லிபி குறித்த பிரச்னையை அதில் அவர் மிக அழகாக விளக்கி யிருக்கிறார். ஆனால், மகாநாட்டின் நிகழ்ச்சி விவரங்களோ, தீர்மானங்களோ எனக்குக் கிடைக்க வில்லை. எப்படியானால் என்ன? அந்த மகாநாட்டுக்குப் பின் சுமார் ஐம்பது வருஷங்கள் ஆகி விட்டன; பொது லிபி ஏற்படவில்லை. அன்றைய நிலையில் பொது லிபி

முயற்சி பலன்படவில்லை என்றே நினைக்க வேண்டியிருக்கிறது).

பொது லிபி பற்றி இப்போது விவாதிப்பவர்கள், பல கேள்விகளையும் ஒன்றாகப் போட்டு மசியல் செய்து விடுகிறார்கள். பி. இ. என். பத்திரிகையில், முல்க் ராஜ் ஆனந்த் முதலிய சிலர் 'பொது லிபி வேண்டும்' என்று எழுதி யிருக்கிறார்கள். வேறு சிலர் இதை எதிர்த்திருக்கிறார்கள். ஆனால், ஒருவர் கருத்தை ஒருவர் புரிந்து கொள்ளாமலோ புரிந்துகொள்ள முயலாமலோ குளறுபடி செய்திருக்கிறார்கள்.

என் கருத்தை நான் சொல்லி விடுகிறேன் :

(1) பொது லிபி தேவைதான். அதனால் பல விதச் சௌகரியங்கள் உண்டு.

(2) பொது லிபி சாத்தியந்தான். ஆனால், எதிலும் சிரமம் இருப்பது போல், பொது லிபியை வழக்குக்குக் கொண்டு வருவதிலும் சிறிது சிரமம் இருக்கத்தான் இருக்கும். ஆயினும் அதைக் கொண்டு வருவது அடியோடு அசாத்தியம் அல்ல.

(3) பொது லிபி நவீன காலத்து வசதிகளையெல்லாம் நன்றாய்ப் பயன்படுத்திக் கொள்ள ஏற்ற லட்சணங்களைப் பெற்றிருக்க வேண்டும்; பாரத மக்கள் அனைவருக்கும் பல பாஷைக்காரருக்கும் சம நீதி வழங்குவதா யிருக்க வேண்டும்.

இந்த மூன்று கருத்துக்களையும் நாம் தனித்தனியாக ஆராய வேண்டும். இதை விட்டு, ஒன்று சொன்னால் மற்றொன்று சொல்லிக் குட்டை குழப்புவது முறை

யல்ல. 'தேவை' என்றால், 'சாத்தியம் அல்ல' என்பது கரட்டுவாதம். 'சாத்தியம்' என்றால், 'தேவை இல்லை' என்பது முரட்டுப் பிடிவாதம். 'இன்ன லட்சணங்கள் கொண்டிருக்க வேண்டும்' என்றால், 'எல்லாந்தான் எங்கள் லிபியில் இருக்கின்றனவே' என்று மொட்டையாகச் சொல்வது குருட்டுச் செருக்கு.

பொது லிபி தேவையே என்று நான் நினைக்கிறேன்; இன்னும் பலர் நினைக்கிறார்கள். பொது லிபி வந்தால், நம் தேசிய பாஷைகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று உதவிக்கொண்டு வளர்வதற்குத் துணையாகும். பொது லிபி நம் தேசிய ஒற்றுமைக்குப் பல விதத்தில் வழி கோலும். நம் பாஷைகளுக்குள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் சுலபமாக வார்த்தைகள் செல்லப் பொது லிபி பேருதவி புரியும். இப்போதே அப்படிப் பல வார்த்தைகள் ஒரு பாஷையிலிருந்து வேறு பல பாஷைகளிலும் புகுந்திருப்பது உண்மை. ஆனால், ஒரு பாஷைச் சொற்களைப் பிற பாஷைகள் கண்டபடி முனை முறித்தே அப்படி ஏற்றிருக்கின்றன.

பாஷைக்குப் பாஷை சொல் மாறும்போது ஓரளவு உருத் திரிவது சகஜந்தான். ஆனால், அடையாளந் தெரியாதபடி உருச் சிதைவது பிரிவு மனப்பான்மைக்கும் குருட்டுத்தனமான சொல்லாராய்ச்சிக்கும் அவற்றின் விளைவான வேறு பல தொல்லைகளுக்கும் வித்தாகிறது. பாஷைக்குப் பாஷை மாறிய சொல்லின் உச்சரிப்புச் சிறிது சிதைந்தாலும், பொது லிபி அதன் சுய ரூபத்தைப் பெரிதும் காப்பாற்றும். இதனால் சொற் பொருளிலே பொதுவான ஒரு திட்டமும் தெளிவும் இருக்கும்.

பல பாஷைகளிலும் ஏறிவிடும் இத்தகைய பொதுச் சொற்கள், ஆடிக் காற்றில் அகப்பட்ட இளங்கொம்பு போல் நிலைகுலைந்து போகவிட்டால், எந்தப் பாஷையிலும் ஒரு வித அவந்தரை நிலவிக்கொண்டே யிருக்கும். அப்படித்தான் இன்றைய நிலைமை இருந்துகொண் டிருக்கிறது. இந்த லட்சணத்தில், விஞ்ஞான பரிபாஷைச் சொற்களை யெல்லாம் நம்முடைய எல்லாப் பாஷைகளிலும் சர்வதேசச் சொற்களாகவோ - அதாவது நாம் சம்பந்தப்பட்ட மட்டும் அநேகமாகச் சிதைந்து ஆங்கில உருவம்பெற்ற சொற்களாகவோ - புதிய பொதுச்சொற்களாகவோ இருக்கும்படி ஒரே விதமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறார்கள். உண்மையில் நானும் இந்த அபிப்பிராயம் கொண்டவன்தான். பொது லிபி ஏற்பட்டால்தான் இது சாத்தியப்படும்; ஒழுங்காக அமையும்.

பொது லிபி மூலம் ஒரு பாஷைக்காரர் மறு பாஷை கற்பது மிகவும் சுலபமாகும். தேவநாகரியில் சம்ஸ்கிருதம் பயின்றவர்கள் சுலபமாக ஹிந்தி கற்கமுடிவதை நாம் காண்கிறோம். "புதிய பாஷை ஒன்றைக் கற்க விரும்புகிறவர்கள், அதற்கு உரிய எழுத்தைக் கற்பது தானா பெரிய சிரமம்? அது வெகு சுலபமாயிற்றே" என்று சிலர் அலட்சியமாகச் சொல்லிச் சிரிப்பது எனக்குத் தெரியும். அவர்களுக்கு மனித மன இயல்பு தெரியாது. புதிய பாஷை ஒன்றைக் கற்க விரும்புகிறவர்கள் வயசுவந்தவர்களாகவும் ஒரு பாஷையில் போதிய அளவு பயிற்சி உள்ளவர்களாகவும் இருந்துவிட்டால், புதுப் பாஷையின் எழுத்தைக் கற்கத்தான் பெரிதும் சோம்புவார்கள். தமிழ் நாட்டில் வீட்டிலே தெலுங்கு

பேசுவோரும் மலேயாளம் பேசுவோரும் எத்தனையோ பேர் சில தலைமுறைகளாய் வாழ்கிறார்கள். அவர்களில் பலருக்குத் தமிழ் எழுத்துத் தெரியும் ; வீட்டிலே பேசும் பாஷையான தெலுங்கு அல்லது மலேயாள எழுத்துத் தெரியாது. இப்படிப்பட்ட சிலரை நான் நேரிலே கண்டிருக்கிறேன். தான் நன்றாய்ப் பேசும் பாஷையின் லிபியைக் கற்பதே, வயசு வந்த ஒருவனுக்குப் பெருஞ் சிரமமாய்த் தோன்றுகிறது. ஓரளவு பேசும் அளவுக்குப் பல பாஷை தெரிந்தவர்கள் நம் நாட்டில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்குத் தாங்கள் சிறு வயசில் பயின்ற ஒன்றைத் தவிர வேறு லிபி எதுவும் தெரியாது. பொது லிபி இருக்குமானால், பல பாஷை பேசும் திறன் பெற்றவரெல்லாம், நாட்டின் ஒற்றுமை யைப் பலப்படுத்தும் பெருந் தூண்களாய் விளங்கு வார்கள். அவர்களின் எண்ணிக்கையும் மேலும் மேலும் பெருகும். புதிய பாஷையைக் கற்கப் புகுவோருக்கு அதன் லிபி தருவது சிறிய சிரமம் என்று நினைப்பது தவறு. முன்னடியானாய் வந்து நிற்கும் பெரிய மலை அந்த லிபி. ஒரு பாஷையின் லிபியே இப்படி என்றால், பல பாஷை பேசத்தெரிந்த ஒருவன், அவற்றில் அறிவைப் பெருக்கிக்கொள்ள விரும்பினால், அவற்றின் லிபி ஒவ்வொன்றும் ஒரு மலையாக முன்வந்து நிற்கிறதே; இது திருப்தி தரும் நிலையா ?

இன்னும் பார்க்கப் போனால், எத்தனையோ சிறு சௌகரியங்கள் பொது லிபியால் நமக்கு ஏற்படும். பல துளி பெரு வெள்ளமாவது போல் அந்தச் சிறு சௌகரி யங்களெல்லாம் நம் தேசீய ஒற்றுமைக்கும் உறவுக்கும் பேரளவில் உதவி புரியும். தபால் விலாசம், ரெயில்வே

ஸ்டேஷன் பெயர், பஸ் பெயர், தெருப் பெயர், சுவரொட்டி விளம்பரம், வீட்டுப் பெயர் இவை போன்றவையெல்லாம் பாரதமெங்கும் ஒரே லிபியில் எழுதியிருக்குமானுல், நம்மிலே எந்தப் பாஷைக்காரருக்கும் பாரதத்தின் எந்தப் பகுதியும் அந்நியமாய்த் தோன்ருது. பொது லிபியால் பாஷைகள் ஒன்ருேடொன்று சங்கமமாக வழி பிறக்கும். வரவர எந்தப் பாஷை நூலும் வேறு எந்தப் பாஷைக்காரனுக்கும் ஓரளவு புரியத் தொடங்கும்; எதுவும் அடியோடு அந்நியமாய்த் தோன்ருது.

கன்னடம், தமிழ், தெலுங்கு, மலையாளம் முதலிய திராவிட மொழிகள் பொது லிபியால் வெகு சீக்கிரம் ஒன்ருேடொன்று தாமாகவே இழைந்து வளம் பெறும். இதேபோல வடக்கத்தி மொழிகளும் பொது லிபியால் தாமாகத் தமக்குள் இணைந்து இழையும். இந்த நிகழ்ச்சிகளைப் போல் சீக்கிரமாக நேராவிட்டாலும், வடக்கத்தி மொழிக் கூட்டமும் தெற்கத்தி மொழிக் கூட்டமும் சிறுகச் சிறுக ஒன்ருேடொன்று கலந்து மேலும் மேலும் ஒற்றுமைப்பட்டு வளம் பெறவும் பொது லிபி ஏதுவாயிருக்கும். ஒரு வகையில் சுமார் எண்பது வருஷத்துக்கு முன்னே நவீன ஹிந்தி உருவாகி இன்று வளர்ந்து வருவதே இப்படித்தானே ?

ஒரு பாஷையிலிருந்து மறு பாஷைக்கு மொழி பெயர்ப்பதும், ஒரு பாஷை நூலுக்கு மறு பாஷை நூலில் உரையோ குறிப்போ எழுதுவதும், நாட்டில் எந்தப் பகுதியிலே வேண்டுமானுலும் பல பாஷை நூல்

களையும் அச்சிடுவதும், எதையும் எங்கே வேண்டுமானாலும் டைப் அடிப்பதும், எந்த மொழியிலே வேண்டுமானாலும் எங்கேயிருந்து கொண்டும் தந்தி அடிப்பதும், இன்னும் இப்படி வேறு எத்தனையோ காரியங்கள் பொது லிபி மூலம் மிகவும் எளிதுபட்டுவிடும்.

பொது லிபி-2

இனி, பொது லிபி சாத்தியமா, இல்லையா என்பதைப் பார்ப்போம்.

பொது லிபியைக் கொண்டு வருவதில் பல சிரமங்கள் இருக்கின்றன. ஆனால், பொது மொழி ஒன்றை வலிந்து சுமத்துவதை விட, பொது லிபியைக் கொண்டு வருவது மிகவும் சுலபம். தவிர, பொது மொழியைச் சுமத்துவதில் பல அபாயங்கள் இருக்கின்றன. பொது லிபியைக் கொண்டு வருவதில் அபாயமே இல்லை; அத்தனை மொழிகளுக்கும் பொது லிபியால் லாபமே ஏற்படும்.

ஒரு பாஷை வளர வளரப் பழைய லிபி பல சமயங்களில் குறையுள்ளதாகிறது. புதிய சொற்களோடு புதிய ஒலிகள் ஒரு பாஷையிலே புகுந்து நிரந்தரமாய் இடம் பெற்று விடுகின்றன. நவீன விஞ்ஞானச் சொற்கள் உலகத்து மொழிகளி லெல்லாம் பரவி உலகப் பொதுச் சொற்களாகின்றன. கூடிய மட்டும் இவற்றை உருத்திரியாமல் நம் பாஷையில் ஏற்றிக் கொள்ளுவதே

நல்லது. இதற்கும் புதிய ஒலிகளை நாம் வழங்கவேண்டியிருக்கிறது. பாரதத்தின் ஒவ்வொரு லிபியையும் தனித் தனியே சீர்திருத்துவதை விட, பாரதம் முழுவதற்கும் ஒரே பொது லிபியை ஏற்படுத்திக் கொள்வது நலம் இல்லையா ?

பாஷை மனிதன் உண்டாக்கியது ; லிபியும் மனிதன் உண்டாக்கியதுதான். லிபி எல்லாக் காலத்திலும் ஒரே விதமாய் இருந்து விடவில்லை.. கல் வெட்டுக்களிலும் பட்டயங்களிலும் ஒரு லிபி இருந்திருக்கிறது. ஓலைச் சுவடிகளில் ஒரு லிபி இருந்திருக்கிறது. சொல்லப் போனால் ஆளுக்கு ஆள் எழுத்து மாறுகிறது. உத்தமப் பொது அளவு போல, அச்செழுத்துக்கள் வந்துதான் ஓரேவிதமாக லிபியின் உருவைக் காப்பாற்றி வருகின்றன. நாகரி எழுத்தின் ஒலிகளையே முற்றும் பெற்று, ஒன்றிரண்டு ஒலிகளை மட்டும் அதனுடன் கூட்டிக் கொண்ட மலையாளமும் கன்னடமும் தெலுங்கும் பிற பல இந்திய பாஷைகளும் ஏன் தனித் தனி வேறு வேறு லிபிகளை அடைந்தன ? அந்த லிபிகளெல்லாம் இடைக் காலத்தில் மனிதன் உண்டாக்கிக் கொண்டவை அல்லவா ? அவை ஆகாயத்திலிருந்து வந்தா தனித் தனியே குதித்துவிட்டன ? தமிழையே எடுத்துக் கொள்ளுங்கள். 'ர' கர 'ற' கர, 'ழ' கர 'ள' கர 'ல' கர, 'ன' கர 'ந' கர பேதங்களையும் 'எ' கர 'ஒ' கரங்களையும் ஆய்தத்தையும் தவிர, மற்ற எழுத்துக்களெல்லாம் ஒலியில் பாரதத்தின் பிற லிபிகளையே ஒட்டியிருக்க வில்லையா ?('ன' கர 'ந' கர பேதத்தை ஒலி பற்றிய பேதம் என்று கூடச் சொல்ல முடியாது.) மீதி லிபிகளில் உள்ள 'க', 'ச', 'ட', 'த', 'ப'

இவற்றின் வர்க்க எழுத்துக்களும், 'ஜ', 'ஷ', 'ஸ' 'ஹ' இந்த ஐந்தும் உயிரினத்தோடு சேர்ந்துள்ள 'ரு' 'ரூ', 'லு' 'லூ', 'அம்', 'அஹ' இந்த ஆறும், வாசல் என்ற சொல்லில் உள்ள 'ச' கர உச்சரிப்பைப் போன்ற தனிச் 'ச' கரமும் தமிழில் இல்லை. ஆங்கிலத்தில் உள்ள 'எஃப்' போன்ற உச்சரிப்புள்ள ஓர் எழுத்தும் வேறு சில எழுத்துக்களும் அடியில் புள்ளி வைப்பதன் மூலம் நாகரி ஹிந்தியில் வந்திருக்கின்றன. 'அ', 'எ' இரண்டுக்கும் இடைப்பட்ட உயிர் எழுத்து ஒலிக் குறி ஒன்றைக் கூட ஆங்கிலத்திலிருந்து ஹிந்தியில் சிலர் கொண்டுவந் திருக்கிறார்களாம். இவையும் தமிழில் இல்லை. இதுவும் ஒரு வித்தியாசந்தான். ஆயினும், தமிழ் உள்படப் பாரதத்தின் எல்லா லிபிகளிலும் பெரும்பான்மையாக உள்ள முக்கிய எழுத்துக்க ளெல்லாம் ஒரே விதமான ஒலிகளையே குறிக்கின்றன.

பாரதத்தின் லிபிகள் அனைத்திலும் ஒலிபற்றிய மட்டும் இப்படி ஓர் ஒற்றுமையும் உருவம் பற்றிய மட்டும் ஒரு வேற்றுமையும் இருப்பதன் காரணம் என்ன? பாரதத்தின் பல லிபிகளும் எப்படியோ எந்த எந்தக் காலத்திலோ எந்த எந்தக் காரணத்தாலோ ஒன்றுரொன்று ஒட்டி உருவானவைதான் என்று நிச்சயமாய் விளங்குகிறது. 'எது முந்தி, எது பிந்தி?', 'எது உயர்ந்தது, எது தாழ்ந்தது?' என்றெல்லாம் நாம் ஆராய்ந்துகொண் டிருக்கத் தேவையில்லை. இன்றுள்ள நிலைமை இது. இதை ஒப்புக் கொண்டு, இதிலிருந்து நாம் மேன்மை அடைய வழி காண்பதுதான் அறிவுடைமையாகும்.

அந்நிய பாஷையைக் கற்பதை விட, புதிய லிபியில் தங்கள் சொந்த பாஷையைக் கற்பது எவருக்கும் சுலபமாகவே யிருக்கும். அந்த லிபி நாடு முழுவதற்கும் - பல பாஷைக்காரருக்கும் - பொதுவான ஒன்றாக இருக்கும்படி அமைத்து வைப்பது அசாத்தியம் அல்ல.

ஆனால், ஜப்பானிய உதாரணத்தை இதற்கு எதிராகச் சிலர் கூறுகிறார்கள். அங்கே 1867-ஆம் ஆண்டிலேயே ரோமன் லிபியைப் புகுத்த முயன்றார்களாம். என்ன என்னவோ செய்து பார்த்தார்களாம். 1937-இல் ரோமன் லிபியைத் துரைத்தன லிபியாக ஜப்பானிய மந்திரி சபை ஏற்றதாம். ஆனால் மக்கள் அதைப் பலமாய் எதிர்த்து நின்றார்களாம். 1945-இல் ஒரு விசாரணை நடந்ததாம். 1946-இல் வந்த அறிக்கை ஒன்று, லிபிச் சீர்திருத்தம் பற்றி யோசனைகள் கூறியதாம். 'ரோமான்ஜி' அதாவது ரோமன் லிபி ஜப்பானில் செத்து விட்டதாம்.

இங்கே ஜப்பானின் உதாரணத்தை எடுத்துக் கொள்வதே தவறு. லிபிக்கு ஜப்பானியர் பின்பற்றி வந்தது சீன முறை. சீனாவில், ஒவ்வொரு சொல்லையும் ஒரு சித்திரமாக்கி வைத்தார்கள். சீன லிபியில் பல்லாயிரக் கணக்கான—சுமார் அறுபதாயிரம் அல்லது எழுபதாயிரம்-எழுத்துக்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். 'ஹைரோகிளிஃபிக்' என்ற இந்தச் சித்திர லிபிகள் ஜப்பானிலும் ஆயிரக் கணக்கில்தான் இருக்கும் என்று எண்ணுகிறேன். இப்படிப் பல்லாயிரக் கணக்கான சொற்களுக்குத் தனித் தனியே குறியீடுகள் ஏற்படும் போது, ஒவ்வொரு சொல்லுக்கும் பிரத்யேகமான ஒலி

நுணுக்கங்கள் ஏற்பட்டு, நெடுங்கால மரபு உண்டாகியிருக்கலாம். பாஷையிலுள்ள சகல சொற்களுக்கும் பொதுவான அடிப்படை ஒலிகளை இன்று அலசி வகுத்து ஒரு சிறு எண்ணிக்கைக்குள் கொண்டு வருவதே அவர்களுக்குப் பெருங் கஷ்டமா யிருக்கும். எனவே, ஜப்பானியரின் உதாரணமும் சீனரின் உதாரணமும் நமக்குப் பொருந்தமாட்டா.

ஆயினும், நவ சீனுவிலேயே இன்று புதிய எழுத்துச் சீர்திருத்தம் செய்திருக்கிருர்கள். சமீபத்தில் நவ சீனுவின் அதிகார பூர்வமான பத்திரிகை ஒன்றில் இது பற்றிய விவரம் வந்தது. ஓர் எண்ணிக்கைக்குள் இப்போது அவர்களுடைய எழுத்துக்களைக் கொண்டு வந்திருக்கிருர்கள். அதற்குச் சமமான ஒலிகளை ரோமன் லிபியிலும் வகுத்து வைத்திருக்கிருர்கள். எனவே, புதிய லிபி, ரோமன் லிபி இந்த இரண்டில் எதில் வேண்டுமானுலும் சீன மொழியை இன்று எழுதுவது சாத்தியம்.

இதே சமயம் துருக்கி, இந்தோனீசியா இரண்டிலும் ரோமன் லிபி வந்து வெற்றி பெற்றிருப்பதையும் நாம் கவனிக்க வேண்டும். 1928 டிசம்பரில் ரோமன் லிபியைத் துருக்கியின் கிராண்ட் நேஷனல் அஸெம்பிளி அங்கீகரித்தது. அரபு லிபியில் அச்சிட்ட புத்தகங்களுக்கு அடுத்த மாதத்திலிருந்தே தடையுத்தரவு போட்டு, அவற்றைப் பறிமுதல் செய்து விட்டார் கெமால் அட்டாடர்க். நவீனத் துருக்கியின் தந்தையான கெமால் பாஷாவைப் போல் புரட்சிகரமான சீர்திருத்தம் நம்மால் செய்ய முடியாதிருக்கலாம். துருக்கியை

அப்படியே ஐரோப்பிய மயமாக்கிய அவரை நாம் பின் பற்றத் தேவை இல்லை என்றும் சொல்லலாம்.

ஆனால், இதே லிபிச் சீர்திருத்தம் இந்தோனீசியாவிலும் சிறந்த பலன் தந்திருக்கிறதே. எழுதப் படிக்கத் தெரியாதவர் ஒரே ஒருவர் கூட நாட்டில் இல்லை என்னும்படி, கல்வி போதனைத் திட்டத்தை ரோமன் லிபி மூலம் இந்தோனீசியாவில் நிறைவேற்றியும் வருகிறார்களே.

ஐம்பது வருஷங்களாக ரோமன் ஹிந்துஸ்தானியை இந்திய ராணுவத்தில் வழங்கி வருகிறார்கள். தென்னாப்பிரிக்காவில் ரோமன் ஹிந்துஸ்தானியைத்தான் ஆங்கிலேயர் கற்கிறார்கள்.

கொங்கணி பாஷைக்கு ரோமன் லிபியையே எழுத்தாகக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தனையையும் நான் இங்கே குறிப்பிடுவது, ரோமன் லிபிக்கு வக்காலத்தாக அல்ல. அதுவே நம் பொது லிபியாக இருக்க வேண்டும் என்று நான் சொல்லவும் இல்லை. எழுத்துச் சீர்திருத்தம் - புது லிபியையே கொண்டு வருவது கூட - இயலும் காரியந்தான் என்றே வலியுறுத்தவே விரும்புகிறேன்.

நம் நாட்டிலேயே சமீப காலத்தில் நிகழ்ந்துள்ள மற்றோர் அநுபவத்தையும் பார்க்கலாம். சம்ஸ்கிருதம் அகில இந்தியாவுக்கும் பொதுவான பாஷைதான். ஆயினும், இதை நாற்பது ஐம்பது வருஷங்களுக்கு முன்னே வங்காளிகள் வங்காளியிலும், பஞ்சாபிகள் பஞ்சாபியிலும், ஆந்திரர் தெலுங்கிலும், மலையாளிகள் மலையாளியிலும் இப்படியே அவரவரும் அந்த அந்த

மாகாண லிபியிலேயே பிடிவாதமாக எழுதி வந்தார்கள்ளாம். எனக்கே தெரியும்; என் சிறு வயசில் தமிழை ஒட்டிய கிரந்த லிபியில்தான் சம்ஸ்கிருதத்தைத் தமிழ் நாட்டில் எழுதி வந்தார்கள். இன்றுங்கூட வேதபாராயணம் செய்யும் பல கிழவர்களுக்குக் கிரந்த லிபிதான் தெரியும். ஐரோப்பியப் பண்டிதர்கள்தான் சம்ஸ்கிருதத்துக்குத் தேவநாகரியை ஒரே முகமாக ஏற்றுக் கொண்டார்கள். இப்போது எங்குமே சம்ஸ்கிருதம் என்ருலே தேவநாகரி லிபி என்ற வழக்கம் நிலைபெற்று விட்டது.

ஆகவே, புதிதாகப் பொது லிபி ஒன்றை நம் தேசிய ப்ாஷைகள் பதினென்குக்குமாக இப்போதே ஏற்படுத்திக் கொள்வது அசாத்தியம் அல்ல. புதிய டெஸிமல் நாணயம் வரவில்லையா? அளவு, நிறை ஆகியவற்றிலும் டெஸிமல் முறையைப் பின்பற்ற மும்முரமாக ஏற்பாடுகள் நடந்து வரவில்லையா? கணக்கிடும் நூதன யந்திரங்களும் கருவிகளும் ஏராளமாக வந்து விட்டால், இந்த டெஸிமல் நாணயம், அளவு, நிறை முதலிய வற்றைக் கொண்டு வருவது பெருங் கஷ்டமாய்ப் போய் விடும் என்றுதான் இவ்வளவு அவசரப்படுகிருர்கள். இதே அபிப்பிராயம், பொது லிபிச் சீர்திருத்தத்துக்கும் பொருந்தும். வெவ்வேறு லிபிகளிலும் டைப்ரைட்டர், டெலிப்ரிண்டர், லைனே டைப், மானே டைப் போன்ற யந்திரங்கள் ஏராளமாக வந்து குவிவதற்கு முன்பே பொது லிபியை ஏற்படுத்தி விடுவது நல்லது. இந்த யந்திரங்களின் உற்பத்தி, வியாபாரம் ஆகியவற்றிலும் பொது லிபியால் பெருத்த சகாயமும் சௌகரியமும் சிக்கனமும் உண்டாகும்.

பொது லிபி ஒன்றை உடனடியாகத் துரைத்தன லிபியாக அங்கீகரித்து விடலாம். ஹிந்தியைக் கட்டாய மாக்குவதற்குப் பதிலாகப் பொது லிபி கற்பதை அத்தனை அதிகாரிகளுக்கும் - மாகாண அதிகாரி களுக்கும்கூடவே-கட்டாயமாக்கலாம். அதற்குரிய எளிய பாடப் புத்தகங்களைப் பதினான்கு பாஷைகளிலும் சுலப மாய் உடனே தயாரித்துவிடலாம்.

டெஸிமல் நாணயம் வந்த பின்பும் பழைய நாணய மும் மூன்று வருஷகாலம் வரைக்கும் செலாவாணியாகும் என்று அநுமதிக்கவில்லையா ? இதே போல, எல்லாப் பாஷைகளிலும் பொது லிபியோடு கூடச் சில வருஷங்கள் வரைக்கும் பழைய லிபியும் பழக்கத்தில் இருப்பதைத் துரைத்தனக் காரியங்களில் அநுமதிக்கலாம். வரவர அதிகமாகத் துரைத்தன அச்சுக் கூடங்களிலும் கல்வி நிலையங்களிலும் பாடப் புத்தகங்களிலும் பொது லிபியை உபயோகித்து வரலாம். இப்படி யெல்லாம் செய்தால், பொது லிபி ஒரே தலை முறைக்குள் நாடெங்கும் சகஜமாகப் புழங்கிப் பரவி நிலைபெற்று விடும். அதே சமயத்தில் பாஷைகள் ஒன்றோடொன்று வரவர அதிகமாக அந்தப் பொது லிபியின் மூலம் உறவு கொள்ளவும் தொடங்கிவிடும்.

பொது லிபி-3

பொது லிபி அவசியம்என்றும் சாத்தியம் என்றும் கண்டபின், அந்தப் பொது லிபி என்ன லட்சணங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை நாம் நிர்ணயித்துக் கொள்வது முக்கியம்.

நம்முடைய இந்நாள் லிபிகளெல்லாம் சிலாசாசனம், பட்டயம் ஆகியவை தயாரான காலங்களிலும் ஓலையிலே எழுத்தாணி பிடித்து எழுதிய காலத்திலும் ஆதியில் உருவானவை. அச்சு வந்த பிறகு, அவற்றிலே பல நகாசுகளெல்லாம் தோன்றின. வாலும் தலையுமான பல அலங்கார எழுத்துக்கள்கூட இடைக்காலத்தில் வந்து மறைந்தன.

எழுத்து என்பதுதான் என்ன? நன்னூலார் அதை மிக அழகாகக் கூறியிருக்கிறார் :

> மொழி முதல் காரணம்
> ஆம் அணுத் திரள் ஒலி
> எழுத்தது முதல் சார்
> பென இரு வகைத்தே.

அதாவது, மொழிக்கு முதல் காரணமான ஒலி அணுத்திரளே எழுத்து. அந்த எழுத்திலே உயிரெழுத்து, மெய்யெழுத்து என்ற இரண்டும் சேர்ந்த வகைதான் முதல் எழுத்து; உயிர் மெய்யும் அது போன்ற பிறவும் சேர்ந்த வகைக்குச் சார்பெழுத்து என்று பெயர்.

உயிருக்கும் மெய்க்கும் தனித்தனி உருவங்கள் அவசியந்தான். உயிரைக் கூடும் மெய் எழுத்துக்களுக்கு அப்படித் தனித்தனி உருவங்கள் தேவை இல்லை. ஆனால் நம் பாரத லிபிகள் எல்லாவற்றிலும் ஏதோ ஒரு வகையில் உயிர் மெய்களுக்குத் தனித்தனி உருவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதனால் எழுத்து உருவங்கள் அநாவசியமாய்ப் பெருகியிருக்கின்றன. தேவ நாகரியை மட்டும் பார்த்தால், தனித் தனியே ஐந்நூறு அச்செழுத்துக்களுக்கு மேல் இருக்கின்றன. எழுத்தாணி பிடித்து எழுதிய காலத்தில் இது இயற்கையாயும் சரியாயும் இருந்திருக்கலாம்; இருந்திருக்கத்தான் வேண்டும். அச்சும் டைப்பும் டெலிப்ரிண்டரும் தந்தியும் வந்திருக்கும் இந்தக் காலத்தில் இப்படி ஏராளமான எழுத்து உருவங்களை வைத்துக்கொண்டிருப்பது அநாவசியச் சிக்கலையும் சிரமங்களையுந்தான் தருகிறது. இதை நாம் உணர வேண்டும். ரோமன் லிபியையே போல, உயிரும் மெய்யுமாக எழுத்து உருவங்கள் இருந்தாலே போதும்.

இந்திய பாஷைகளில் உள்ள அத்தனை ஒலிகளையும் குறிக்கத் தக்க எழுத்து உருவங்கள் தெளிவாகத் தனித் தனியே நம் லிபியில் இருக்க வேண்டும். இவற்றோடு

உலகப் பொதுவான விஞ்ஞான பரிபாஷைச் சொற்களை நாம் எடுத்துக் கொள்வது அவசியமாகும்; ஆகவே கூடிய மட்டும் அந்தத் தேவையையும் பூர்த்தி செய்யத்தக்கபடி விசேஷ அயல் ஒலிகளைக் குறிக்கத் தக்க சில எழுத்து உருவங்களும் நமக்குத் தேவையாகும்.

அச்சுக்கும் அழகாய், எழுதவும் வசதியாய் உள்ள எழுத்து உருவங்களை நம் லிபி பெற்றிருக்க வேண்டும். இதற்காக ஷார்ட் ஹாண்ட் மாதிரி மிகச் சுருக்கமான எழுத்து உருவங்களாக அவை இருந்து விடக் கூடாது. ஒவ்வோர் எழுத்தும் தெளிவாகவும் திட்டமாகவும் ஒன்றை மற்றொன்ருக மயங்க இடமில்லாமலும் அமைய வேண்டும்.

ஏற்கனவே பரிசயம் இல்லாத முற்றும் புதிதான எழுத்துக்கள் ஒரு கிலியை உண்டாக்கும். ஆகவே, பழைய எழுத்து உருவங்களை ஒட்டியே புதிய லிபியை, நாம் அமைத்துக் கொள்வது நல்லதுதான். ஆனுல் அவை இந்திய எழுத்து உருவங்களாகவேதான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ரோமன் லிபியும் இப்போது மிக நன்ருய்ப் பழக்கமாகி யிருப்பதுதான். அந்த ரோமன் லிபியை நாம் ஏற்றுக் கொள்ளலாம் என்று கூடச் சிலர் சொல்லுகிருர்கள். ஆனுல், அதில் பல குறைகள் இருக்கின்றன. எல்லா ஒலிகளையும் குறிக்கப் போதிய எழுத்து உருவங்கள் அதில் இல்லை. தவிர, ஒரே எழுத்துக்கே இரண்டு மூன்று உச்சரிப்புக்கள் அதில் இருக்கின்றன. இந்தக் குளறுபடி ஆங்கிலம் சம்பந்தப்பட்ட மட்டும் மிகவும் விபரீதமான அளவுக்குப் போய்விட்டது. இதைப் பற்றிப் பல தமாஷ்கள் கூட

உண்டு. ஆங்கிலத்தில் உள்ள இந்த உச்சரிப்பு அவந்தரையைத் தீர்ப்பதற்காக லிபிச் சீர்திருத்தம் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று தம் செல்வத்தில் ஒரு பகுதியைப் பேராசிரியர் பெர்னுர்ட் ஷா ஓர் உயிலே எழுதி வைத்து விட்டார். லிபிச் சீர்திருத்தத்துக்கான அந்த உயில் செல்லாது என்று பிரிட்டிஷ் கோர்ட்டில் சமீபத்தில் தீர்ப்பாகிவிட்டது. என்ருலும் அவருடைய நோக்கம் மிகச் சிறந்தது ; நியாயமானது.

இதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். முக்கியமாக ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ரோமன் லிபியை ஒட்டி, ‘ஃபோனட்டிக் ஸிம்பல்ஸ்’ (ஒலியை ஒட்டிய குறியீடுகள்) என்ற புதிய லிபியை ஐரோப்பியர் தயாரித்திருக்கிருர்கள். டேனியல் ஜோன்ஸ் போன்ற சில அறிஞர்கள் இந்த லிபியை விளக்கிப் பல நூல்களும் சில அகராதிகளும் தயாரித்திருக்கிருர்கள். சர்வதேச லிபியாகவே இதை அவர்கள் குறிப்பிடுகிருர்கள். இது எப்படியானுலும், ஐரோப்பிய மொழிகள் அனைத்தையும் இந்த லிபியைக் கொண்டு உச்சரிப்பொலி பிசகாதபடி குறித்து விடலாம்.

மற்ருேர் லிபியும் வந்திருக்கிறது. அது இந்த லிபியை ஒட்டியதோ, முற்றும் புதியதோ என்று தெரியவில்லை. மேற்கு ஜெர்மனியில் அந்தப் புது லிபியை அறுபது நகரங்களில் சுமார் பதினுயிரத்துக்கு மேற்பட்ட குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிருர்களாம். அதை எழுத்தொலி நிபுணரான ஃபெலிக்ஸ் வான் குனெளஸ்கி என்பவர் முப்பது வருஷங்களுக்கு முன்னே அமைத்திராம். அதில் இருபத்தெட்டே

குறிகள் ஜெர்மன் பாஷைக்கும் நாற்பது குறிகள் ஆங்கில பாஷைக்கும் போதும். அதற்கு அவர் 'ஸ்ப்ரெச்பர்' (பேச்சின் சுவடு வரைதல்) என்று பெயரிட்டிருக்கிறாராம். உலகத்தில் உள்ள முக்கியமான பாஷைகளை யெல்லாம் எழுத இந்த லிபி போதும் என்கிறார்கள். இந்த லிபி இப்போது ஜெர்மனியில் பரீட்சித்த இடங்களில் சிறந்த வெற்றி பெற்றிருக்கிறதாம். முற்றும் புதிதான ஒரு லிபியை வெற்றி பெறச் செய்ய முடியும் என்பதற்கு ஜெர்மனியின் இந்த அநுபவம் நல்ல ருசுவாகும்.

இங்கே நான் குறித்த சர்வதேச ஒலிக் குறிகளையும் வேறு பல விஷயங்களையும் நாம் ஆராய்ந்து, நமக்கு ஏற்ற பொது லிபி ஒன்றை ஏற்றுக்கொள்ளலாம். 'பழமை, பழமை' என்று பாவனை பேசாமல், வீண் உணர்ச்சிக்கு வசப்படாமல், அறிவுத் தெளிவுடன் சிந்தித்தோமானால், இப்படிப் பொது லிபி ஒன்றை நிச்சயம் நாம் வகுத்துக்கொள்ள முடியும். பழைய லிபி களை மறந்தோமானால், பழஞ் சுவடி ஆராய்ச்சி முதலிய வற்றுக் கெல்லாம் ஆபத்தாகி விடுமோ என்று பயப்படத் தேவை யில்லை. பழைய லிபிகளை யெல்லாம் கெமால் பாஷாவைப்போல் ஒரே அடியாய் உடனடியாக நாம் ஒழித்துக் கட்டப் போவ தில்லை. தவிர, நிரந்தரமாக அவற்றை விளக்கிப் பாதுகாக்கும் நூல்களையும் சின்னங் களையும் தயாரித்து நம் லைப்ரரிகளி லெல்லாம்-மியூஸியம் களி லெல்லாம்-வைத்து விடலாம்.

பொது லிபியைத் தயாரிக்கும் காரியத்தில் இந்திய சர்க்கார் முனைந்து, இதற்காகப் பல பாஷை நிபுணர் களையும் சிறந்த ஓவியர்களையும் கொண்ட ஒரு

கமிட்டியை அமைத்து, அவர்களைக் கொண்டு இதை நிறை வேற்றலாம்.

முடிவாக மீண்டும் சொல்கிறேன்: பொது மொழியை விடப் பொது லிபிதான் அவசியம்; பொது லிபி சாத்தியம்; பொது லிபி நவீனத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய லட்சணங்களைப் பெற்றிருப்பது முக்கியம்.

ஹிந்தியும் ராஜாஜியும்

இந்த மொழிப் பிரச்னை மிகவும் சிக்கலானது. சுதந்தரப் போராட்டக் காலத்தின் பழைய வாசனையை எல்லாம் விட்டு, 'திறந்த' மனத்துடன் இதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். தலைவர்களுக்கே இதில் இன்னும் பெருங் குழப்பம் இருக்கிறது. ஆனால், ராஜாஜி இதில் தெளிவான கருத்துக்களைச் சொல்லி வருகிறார். ஆதியில் இருந்தது போலல்லாது இப்போது நேருவும் ஓரளவு மயக்கம் தெளிந்திருக்கிறார். அவருடைய உரையைப் பின்பற்றி, 'ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக இன்னும் வைத்திருப்பது' என்று சகல ராஜ்யக் கல்வி மந்திரிகளும் தீர்மானித்தது புத்திசாலித்தனமான செயல். இதோடு மைசூர், சென்னை, ஆந்திரா, திருவாங்கூர், வேங்கடேசுவரா, ஊஸ்மானியா இந்த யூனிவர்ஸிட்டிகளின் வைஸ் சான்ஸலர்களும், சென்னை, ஆந்திரா, ஹைதராபாது, திருவாங்கூர், மைசூர் இந்த ராஜ்யங்களின் கல்வி டைரக்டர்களும் விசாக பட்டணத்தில் கூடி நடத்திய மகாநாட்டில் செய்த ஒரு

தீர்மானமும் போற்றத்தக்கதே. பி.ஏ., பி. எஸ்ஸி. பட்டங்களுக்கு இங்கிலீஷையும் பிராந்திய பாஷையையும் கட்டாய பாடமாக வைப்பது என்றும், ஆனர்ஸ் படிப்பை எடுத்துவிட்டு எம். ஏ. படிப்பை மட்டும் வைத்துக்கொள்வது என்றும் அவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள். கல்வியின் உயர்ந்த தரம் குறையா திருப்பதோடு, பிராந்திய பாஷைகள் விரைவிலே வளர்ந்து சிறப்படையவும் இதனால் வழி பிறக்கும். பிராந்திய மக்கள்மீது ஹிந்தியே 'ராஜ பாஷை' என்று சொல்லித் திணிக்க இன்னமும் சிலர் எண்ணிக்கொண் டிருப்பது பெருந் தவறு.

ராஜாஜியின் கருத்துக்களில் பெரும் பகுதியும் நமக்கு உடன்பாடுதான். ஆனால், 'பண்பட்ட மனிதனாக இருப்பதற்கு நாம் ஹிந்தியையும் கற்க வேண்டும்' என்று அவர் சொல்வது உசிதமாகத் தோன்ற வில்லை. 'பிராந்திய மக்களிடம் ஹிந்தியைப் பரப்புவது என்ற பேச்சே இன்று கூடாது' என்று திட்டமாக நாம் சொல்லிவிட வேண்டும்.

சுருங்கக் கூறினால், இதோ இந்தச் சில உண்மைகள், சில கருத்துக்கள், சில யோசனைகள், சில கேள்விகள் இவற்றையெல்லாம் சேர்த்து, இந்த மொழிப் பிரச்னை பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

(1) இன்று இந்தியாவை ஒற்றுமைப் படுத்தி, அரசியல் நிர்வாகம், நீதி, உயர்தரக் கல்வி, வர்த்தகம், வெளிநாட்டு உறவு இப்படிப் பல காரியங்களுக்கு ஆங்கிலம் சிறந்த முறையில் பயன்பட்டு வருகிறது.

(2) ஆங்கிலம் எப்படியோ அப்படியே ஹிந்தியையும் அயல் மொழியாகத்தான், பிராந்திய மக்கள் மதிப்பார்கள்; மதிக்க முடியும்; மதிப்பது நியாயம். 'எங்கள் பாஷை' என்று அதனிடம் ஒரு நாளும் அவர்கள் பாத்தியம் கொண்டாட முடியாது. பிராந்திய மக்களின் கல்வி உள்படச் சகல காரியங்களுக்கும் சகல உரிமைகளுக்கும் பிராந்திய பாஷையே-தாய்ப் பாஷையே-பயன்படக் கூடிய நாள் வந்தால்தான், அவர்கள் திருப்தி அடைய முடியும்.

(4) இன்று நாட்டில் ஏகாதிபத்திய ஏற்பாடு இல்லை; ஜனநாயக அரசியல் அமைப்பை-பொது மக்களிடம் வோட்டு வாங்கிப் பதவி ஏற்கவேண்டிய ஏற்பாட்டை-நிருமித்திருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் எந்தப் பிராந்திய பாஷையும் மேலும் மேலும் சம்பூர்ணமாய்-வேறு எந்த இந்திய பாஷைக்கும் எந்த விதத்திலும் தாழ்வில்லாது-வளர இடம் கொடுத்தால்தான் ஜனநாயகப் பயிர் தழைக்கும். இதற்குத் துளியளவு பாதகமாக நடந்தாலும் நாட்டின் ஒற்றுமைக்கே கேடான பேரபாயந்தான் விளையும். ஹிந்தி-உர்தூ விவகாரம்தான் முற்றிக் கடைசியில் நாட்டையே துண்டாடும் பாகிஸ்தான் பிரிவினை வரைக்கும் போய் முடிந்தது. இது நான் சொல்வதல்ல; ஸ்ரீ பிரகாசர் போன்றவர்களே சொல்வது. அயர்லாந்து பிரிட்டனிலிருந்து பிரிய ஐரிஷ் பாஷை இயக்கமான 'கேலிக் லீக்' தான் அடிகோலியது என்பதையும் இங்கே நாம் நினைவு கூரவேண்டும்.

(4) கல்வி உள்படச் சமூக வாழ்கையின் சகல துறைகளிலும் தலைமுறைக்குத் தலைமுறை ஒரு

தொடர்ச்சி இருக்கவேண்டும். ஸ்லேட்டுப் பலகையில் அழித்து அழித்து எழுதுவதுபோல-வலுக் கட்டாயமாக -இந்தத் தொடர்ச்சியைக் குலைத்து மாற்றிக்கொண்டேயிருந்தால், சீர்கேடும் குழப்பமுமே மலியும். எந்த மாறுதலும் ஜீவ வளர்ச்சி போன்ற மாறுதலாக இயல்பாக உண்டாகத்தக்க சூழ் நிலையை ஏற்படுத்துவதே அறிவுடைமையாகும்.

(5) அயல் பாஷை மூலம் கல்வி கற்பது மனித சக்தியில் பெரும் விரயத்தை ஏற்படுத்துகிறது. அவசியத்தைக் கருதியே இன்று நாம் ஆங்கிலத்தைக் கற்க வேண்டியிருக்கிறது. இந்த ஏற்பாடு பத்து வருஷமோ, இருபது வருஷமோ, ஐம்பது வருஷந்தானே தொடர்ந்து இருந்துவர நேரலாம். ஆனால், இதுவே நிரந்தர ஏற்பாடாக இருக்க முடியாது; கூடாது. மக்களுக்கு அவரவர் மொழியே முற்றும் கல்விக்குப் பயன்படும் காலம் வரும் வரைக்குந்தான் இந்த ஏற்பாடு. அப்படிப் பிராந்திய மொழிகள் வளர்வதற்கான சூழ்நிலையையும் வசதிகளையும் ஏற்படுத்தி, ஓயாத முயற்சி புரிவது இன்று நம்முடைய கடமையாகும். நாம் ஆங்கிலத்தை அடியோடு கைவிடும் நாள் ஒன்று வருமானல், அதன் இடத்தை அங்கங்கே பிராந்திய மொழிகள்தான் ஏற்றுக் கொள்ளும். ஆங்கிலத்துக்குப் பதிலாக வேறோர் அயல் மொழியை-அது இந்திய மொழியாகவே இருந்தாலுந் தான்-பிராந்திய மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

(6) அகில இந்திய ஒற்றுமை அவசியந்தான். ஆங்கிலம் போய்விடும்போது, அந்த ஒற்றுமையைக் காப்பாற்றப் பொது மொழி அல்லது பொது மொழிகள்

தேவையாக இருக்கலாம். ஸ்விட்ஜர்லாந்தில் மூன்று பொது மொழிகள் இருக்கின்றன. பெல்ஜியம், பின்லாந்து, கானடா, தென்னுப்பிரிக்கா இந்த நாடுகள் ஒவ்வொன்றிலும் இரண்டு பொது மொழிகள் இருக்கின்றன. ஒரே பொது மொழிதான் இருப்பது நலம் என்றே கொள்வோம். அந்தப் பொது மொழி எப்படிப் பட்டதாக இருக்கவேண்டும்? எல்லாப் பிராந்திய மக்களும் சமமாகப் பாத்தியம் கொண்டாடத் தக்க - கற்பதிலோ வளர்ப்பதிலோ பயன்படுத்துவதிலோ உள்ள சிரமங்களும் சௌகரியங்களும் உரிமைகளும் எல்லாப் பகுதியினருக்கும் சமமாக இருக்கக்கூடிய-ஒரு மொழியாகவே இருக்க வேண்டும். "பொது மொழி எங்கள் மொழி. அதன்மீது உள்ள சகல அதிகாரங்களும் உரிமைகளும் பாத்தியங்களும் எங்களுக்கே உண்டு. மீனுக்குத் தண்ணீர்போல அது எங்கள் தாய் மொழி. தரைப் பிராணிகள் நீந்தக் கற்பது போலத்தான், பிராந்திய மக்கள் அதில் வந்து குளித்துவிட்டுப் போக வேண்டும். பிற பிராந்திய மொழிகளை யெல்லாம் பற்றி எங்களுக்கு அக்கறையே இல்லை. அவற்றைக் கற்கும் கட்டாயம் எதையும் நாங்கள் ஏற்க மாட்டோம்" என்று திமிரோடு ஒரு பிராந்தியக்காரர் சொந்தங் கொண்டாடும் மொழியாக அது இருக்கக்கூடாது.

(7) பொது மொழி, சந்தைக்கடை மொழியாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை; பேசுவோரின் எண்ணிக்கைப் பலத்தைக்கொண்டு அதை நிர்ணயிக்கத் தேவையே யில்லை; மிக அதிகப்படியான ஒரு பகுதிப் பாமர மக்கள் பேசும் மொழியாகத்தான் பொது மொழி இருக்கவேண்டும் என்பது என்ன அவசியம்? அப்படி

யானுல் அதைவிட மிக அதிகப்படியான பாமர மக்கள் பேசாத பாஷையாக அது இருப்பது மட்டும் நியாயமா ? பாரத நாட்டில் ஹிந்தி பேசுவோர் 13 கோடிப் பேர் ; பிற பாஷைகள் பேசுவோர் 21 கோடிப் பேர்.

(8) இன்று ஆங்கிலத்தின் துணையால் பாரதத்தின் சகல பிராந்திய மொழிகளும் வளரவேண்டும். இதே காலத்தில் அவை ஒன்றுக்கொன்று உதவிக்கொண்டு, பொதுச் சொற்களை உருவாக்கிக் கொள்ளலாம் ; பொது லிபி ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளலாம் ; பொது இலக்கணங்களை வகுத்துக்கொள்ளலாம். இந்தக் காரியங்களின் மூலம் பொது மொழி ஒன்று தானுக உருவாக நாம் வழி செய்யலாம். உலகத்திலேயே இல்லாப் புதுமையாக எழுவாயுடன் ஒட்டாது செயப்படு பொருளை அணையும் வினை இலக்கணத்தைப் பெற்ற ஹிந்தியை எல்லார் தலையிலும் இன்று சுமத்துவது நியாயமே அல்ல.

(9) ஆங்கிலத்தைத் தொடர்ந்து கற்கவேண்டிய அவசியம் குறித்த காரணங்களைக் கல்விமான்கள் அனைவரும் அறிவார்கள். அதை உடனடியாகக் கைவிடுவோமானுல், நமக்கு நாமே நவீன விஞ்ஞான இருட்டடிப்புச் செய்து கொள்வோம். அரசியல் நிர்வாகத் துறையிலும் நீதித் துறையிலும் தொழில் வளர்ச்சித் துறையிலும் பெருங் கேடு விளைத்துக் கொண்டவர்களாவோம் ; "ஆங்கிலத்தை ஒழி!" என்று தெருக் கூச்சல் போடுவது அபாயம். 'தமிழை—பிராந்திய மொழிகளை—ஆங்கிலத்தின் துணைக்கொண்டு வளர்ப்போம் ; முளைக்கு உணவளித்துப் பயிரை வளர்த்து இற்று விழும் விதைபோல

ஆங்கிலம் நம்மைவிட்டுப் போகவேண்டும்' என்பதே நம்முடைய திடசங்கல்பமாக இருக்கவேண்டும்.

இந்த நிலையில் ராஜாஜி போன்ற ஒரு தலைவர் நாட்டுக்கே நலம் தரும் பெரும் காரியம் ஒன்று செய்ய லாம். ராஜாஜி அகில இந்தியத் தலைவர். உலகப் புகழ் பெற்றவர். தமிழ் நாட்டில் மட்டும் அல்லாது, பாரத மெங்கும் செல்வாக்குப் பெற்றவர். இந்தச் சிக்கலான மொழிப் பிரச்னைக்குச் சிறந்த பரிகாரம் ஒன்றைக் காண, பிற பிராந்தியப் பெருந் தலைவர்களையெல்லாம் கூட்டி மகாநாடு ஒன்றை நடத்தி வழி காட்ட அவரால்தான் இயலும். இந்தப் பெருங் காரியத்தை அவர் மேற் கொண்டால், இதுவரைக்கும் அவர் புரிந்த தேசப் பணி களையெல்லாம் விடச் சிறந்ததாக—என்றென்றும் மறக்க முடியாத சரித்திரப் புகழுடையதாக—அது விளங்கும். இன்று அயர்ந்திருந்தால், 'தும்பை விட்டு வாலைப் பிடிப்பதுபோல' நம்முடைய பின் சந்ததிகளெல்லாம் கஷ்டப்பட நேரும். ஆனால், 'இந்த அயர்வு நீடிக்காது; அப்படி நேராது' என்று நாம் நம்புவோம். இயற்கை நியதி இருக்கிறது; தெய்வம் இருக்கிறது. நியாயம் வெல்லும்.

சுருங்கச் சொன்னல் . . .

ஆதியில் ஒரே ஒரு கட்டுரையோ, மிஞ்சினுல் இரண்டோ எழுதுவது என்று உட்கார்ந்தேன். என்னையும் மிஞ்சி ஒரு சிறு புத்தக அளவுக்கு அது விரிந்து விட்டது. திட்டம் போட்டுக்கொண்டு, நிரல்படுத்தி விஷயங்களை நான் எழுதவில்லை. உண்மையிலே அப்படி எதையும்—கட்டுரையோ, கதையோ எதுவானுலுமே—ஒருபோதும் நான் எழுதுவதில்லை. உணர்ச்சியும் சிந்தனையும் போகிற போக்கிலேதான் எழுதிவிடுவேன். எனவே, தப்பபிப்பிராயத்துக்கு இடம் இராதபடி சுருக்கமாகச் சில விஷயங்களை — முன்னமே சொல்லிய சில வற்றையும் சேர்த்து—இங்கே சொல்லி விடுகிறேன் :

ஹிந்தி எனக்குத் தெரியாது. ஆனுல் அதன் மீது நான் பகைமை கொள்ளவில்லை. தமிழன் எவனும் அதைப் படிக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. விரும்பியவன் படிக்கலாம். கட்டாயம் கூடாது. இன்று ஹிந்தியோ, வேறு ஏதாவதோர் இந்திய மொழியோ பொது மொழியாக இருக்கவேண்டும் என்ற பேச்சே

கூடாது. பொது மொழி ஒன்று தானாக உருவாகத்தக்க சூழ்நிலையையே உண்டாக்க வேண்டும். பொது லிபி அதற்கு ஒரு சாதனமாக இருக்கும்.

பொது மொழி, பாமர மொழியாக – ஏதோ ஒரு பெரும் பகுதிப் பிரதேசத்தில் சாதாரண மக்களெல்லாம் அறிந்த மொழியாக – இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை; அது கல்வி மொழியாக–பல பிரதேசத்திலும் முக்கியமானவரெல்லாம் அறிந்த மொழியாக– இருப்பதுதான் அவசியம். சம்ஸ்கிருதம் அநாதியானது என்று பலர் நம்புகிருர்கள். ஆனுல், சில ஆராய்ச்சிக்காரர்கள் அது சரி அல்ல என்று சொல்வதுண்டு. 'சம்ஸ்கிருதம்' என்ருல், 'பக்குவம் செய்தது' என்று பொருள். பல பிராந்திய பாஷைகளிலிருந்தும் உருவாகிப் பக்குவம் பெற்ற கல்விப் பொதுமொழியே சம்ஸ்கிருதம் என்பது அந்த ஆராய்ச்சிக்காரர்களின் முடிவு. இது எவ்வளவு தூரம் சரியோ, நான் அறியேன். ஆனுல், இந்த முறையில்தான் நம்முடைய பொதுமொழி இனி உருவாக வேண்டும்; தமிழ் உள்படச் சகல இந்திய மொழிகளும் சேர்ந்து கடைந்து திரட்டியெடுத்த மொழியாகப் பரிணமிக்க வேண்டும். அது எல்லாப் பிராந்திய மக்களுக்கும் சம வசதி உள்ளதாக–சம உரிமை உள்ளதாக–அமைய' வேண்டும்.

நவீன விஞ்ஞானக் கலைகள் நம் தேசிய மொழிகள் பதினுன்கிலும் வரவேண்டும். அதற்குப் பல கலைச் சொற்கள் புதிதாகத் தேவையா யிருக்கின்றன. அந்தச் சொற்களை யெல்லாம் பதினுன்கு பாஷைக்கும் பொதுச் சொற்களாக ஆக்கிக்கொள்வதே நல்லது. சொல்லப் போனுல், உலகத்துக்கே பொதுவான கலைச் சொற்களாக

இருப்பது மேலும் நல்லது. எண் உருவங்கள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 0 என்ற அரபிக் குறிகளாகவே இருப்பதுதான் முறை. ஹிந்தி வெறியர்களைத் திருப்தி செய்வதற்காக ஹிந்தி 'டைப்ரைட்ட'ரில்கூட நாகரி எண் உருவங்களையும் அரபி எண் உருவங்களையும் அமைக்கப் போகிறார்களே, இதைக் கண்டு நகைக்கத்தான் வேண்டியிருக்கிறது. எல்லாருக்கும் பழக்கமாகித் தெரிந்திருந்திருக்கும் எண் உருவங்களை விட்டு, ஒரு பகுதியினருக்கே பழக்கமான எண் உருவங்களை அமல் செய்யவேண்டும் என்ற உணர்ச்சியைக் கண்மூடித்தனமான வெறி, என்னுது வேறு என்ன சொல்லக் கிடக்கிறது!

சொல்லாக்கல் முயற்சி புரியும்போது, சில உண்மைகளை நாம் கவனிக்கவேண்டும். எந்தப் பாஷைமீதும் குரோதம் கூடாது. சம்ஸ்கிருதத்திலே நமக்குப் பிடிக்காத சில நூல்கள் இருக்கின்றன என்பதற்காகச் சம்ஸ்கிருத பாஷையையே வெறுப்பது தவறு. தமிழிலுந்தான் நமக்குப் பிடிக்காத சில நூல்கள் இருக்கின்றன. இதற்காகத் தமிழையே நாம் விட்டுவிட முடியுமா? சொல் ஆராய்ச்சி என்பது பொருளை நிர்ணயிப்பதற்காகச் செய்யும் காரியம். இங்கே என்னடா என்றால், ஒரு சொல்லைத் தண்டிப்பதற்காகவும் ஒரு சொல்லை அரியணை ஏற்றுவதற்காகவும் சொல்லாராய்ச்சி நடத்துகிறார்கள்! இது சொல் ஆராய்ச்சி அல்ல; சொல் அழிக்கும் வேலை.

"பாஷையைப் பண்டிதர்கள் தங்கள் குழூஉக் குறியாகச் செய்து வருகிறார்களடா" என்று வ. ரா. அவர்கள் பதைத்தார். முப்பது வருஷ காலம் திரும்பத் திரும்பப் பண்டிதர்கள்மீது பாணம் தொடுத்து, அவர்க

ளுடைய கோபத்துக்கு ஆளானுர். இன்று தமிழிலே பலர் — பல பண்டிதர்களுங்கூடத்தான் — துணிந்து எளிய நடை எழுதுவதற்கு வ. ரா. அவர்களே மூல காரணம் என்பது எத்தனை பேருக்குத் தெரியுமோ நான் அறியேன். "ரிக்ஷாக்காரனுக்கும் தெரிந்த சொல்லை விட்டுப் படித்தவர்க்குங்கூடச் சட்டென்று புரியாத சொல்லை எதற்காக உபயோகிக்க வேண்டும்?" என்று அவர் கூறுவார். 'தூய தமிழ்க்'காரர்களும் புதிய 'சொல்லாக்கல் சிற்பி'களும் இன்னமுந்தான் நிலைத்த சொல்லை விட்டுப் புதைந்த சொல்லிலே மோகம்கொண்டு தேடித் திரிகிருர்கள். திசைச் சொற்களை எல்லாம் ஓயாது விரட்டியடிக்க முயல்வது, கடலலையை முறத்தால் தள்ளி நிறுத்தும் கணக்கேயாகும். நிலைத்த சொல்லை மீண்டும் மீண்டும் எதற்காகத் தொல்லை செய்து கொண்டே யிருக்க வேண்டும்? 'நேர்க்கோணம்' எதற்காகச் 'செங்கோணம்' ஆகவேண்டும்? 'விமானம் விழுந்து இருபது பேர் மாண்டார்கள்' என்ற எழு காலம் தலைப்பிட்டுத்தான் நம் தினப்பத்திரிகைகள் பல நாள் பிரசுரித்திருக்கின்றன. ஆனாலும் ஏழு வயசுக் குழந்தை காலையிலே எழுந்ததும், "அப்பா, அதோ பார் ஓர் ஏரோப்பிளேன்" என்று ஆகாயத்தைச் சுட்டிக் காட்டுகிறதே; அது ஏன்? "இந்தா அம்மா, அந்த மின் குமிழியை அமுக்கு" என்ருல், ஒரு கூட்டுக்காரி கூட 'எலெக்ட்ரிக் ஸ்விட்'சைப் போடமாட்டாள். இது ஏன்? திசைச் சொற்கள் வாழ்க்கையோடு ஒட்டி வருகின்றன; இலக்கியத்தோடு ஒட்டி நிலக்கின்றன. சொல்லாக்கும் முயற்சியே கூடாதென்று நான் சொல்ல வில்லை. ஓரளவு அது நடக்கவேண்டியதுதான். ஆனல்,

அது வாழ்க்கையோடும் இலக்கியத்தோடும் ஒட்டும் படியும் அவற்றுக்கு உதவும் முறையிலும் நடக்க வேண்டும்; குறுக்கே விழுந்து அவற்றை வழிமறிக்கும் முறையில் அல்ல.

இந்திய ஒற்றுமை குலையக்கூடாது என்பது என்னுடைய திடமான அபிப்பிராயம். ஒரு பாகிஸ்தான் வந்து நாம் படும் பாடு போதும். நாம் என்றால், இந்தியா மட்டும் அல்ல; பாகிஸ்தான் உள்பட இந்த உப-கண்டமேதான் உலக வல்லரசுகளின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் சூழ்ச்சிக்கும் ஆளாகியிருக்கிறது. இந்திய ஒற்றுமையைப் பாதுகாக்க, வலுப்படுத்த, வளர்க்க, இந்தியர் அனைவரும்-எல்லாப் பகுதியினரும்-பாடுபட வேண்டும். இலக்கியம், கலை, தொழில் இவற்றின் மூலமும், அரசியலில் சமத்துவ உரிமைகளின் மூலமும், பாஷையில் சம வசதிகளின் மூலமுந்தான் இந்திய ஒற்றுமையை நிலைப்படுத்த வேண்டும்.

ஆங்கிலத்தை இன்று நாம் கைவிட முடியாது. இது விஞ்ஞான யுகம்; 'ஒரே உலக' லட்சியம் பரவி வரும் காலம். விஞ்ஞான அறிவுப் பொக்கிஷம் நிறைந்தது ஆங்கிலம்; அது சர்வதேச மொழிகளுக்குள்ளே தலை சிறந்து நிற்கிறது. நாம் வளரவும் நம் பிராந்திய பாஷைகளெல்லாம் வளரவும் பெருந்துணை புரிவது ஆங்கிலம். இந்திய ஒற்றுமைக்கும் இன்று அது அஸ்திவாரமாய் விளங்குகிறது. உலகத்தோடு ஒட்டி வாழ நமக்குச் சிறந்த கருவியாய் உதவுவது ஆங்கிலம். வளம் பெற்ற அந்தச் சர்வதேச மொழியை நாம் எப்படியோ பெரிதும் கற்று விட்டோம். அதை இன்று நாம் கைவிட்டால், கையில் உள்ள

மாணிக்கத்தை மாற்றில்லாது கடலில் எறிவது போலாகும்.

எந்தப் பிராந்திய மொழிக்காரரும் மற்றொரு பிராந்திய மொழியை – ஹிந்தியையும் ஒரு பிராந்திய மொழியாகவே நான் மதிக்கிறேன்–அறிந்து கொள்வது அவசியம். அதிலும் வடக்கத்திக்காரர் தெற்குப் பிராந்தியமொழி ஒன்றையும் தெற்கத்திக்காரர் வடக்குப் பிராந்திய மொழி ஒன்றையும் கற்ருல், மிகவும் நல்லது.

ஆங்கிலேயனை விரட்டியது நம்முடைய ஹிந்தி அல்ல; நம்முடைய - நாம் கற்ற - ஆங்கிலமேதான். அதுவே இன்று நம் அணைகளைக் கட்டவேண்டும்; பெரும் பெரும் யந்திரசாலைகளை அமைக்க வேண்டும்; மின்சாரத்தைப் பெருக்க வேண்டும்; அணுசக்தியை உருவாக்க வேண்டும்; நம் பாஷைகளையெல்லாம் வளர்த்து வளம்பெறச் செய்ய வேண்டும். அவை அப்படி வளர்ந்து, ஆங்கிலத்துடன் தோளோடு தோள் தட்டி நிற்கும்போது, அன்புடன் ஆங்கிலத்துக்கு நாம் விடை கொடுப்போம்.

நம் மக்களின் மொழிகளை யெல்லாம் - பிராந்திய மொழிகளையெல்லாம் - வளர்ப்பதே நம் நோக்கமும் லட்சியமுமா யிருக்கவேண்டும். பொது மொழி ஒன்று தானுக உருவாகட்டும். ரவீந்திரரின் தேசிய கீதம் வர்ணிப்பது போல, பல மொழியும் பல வளமும் கொழித்த பெரும் நாடாகப் பாரதம் விளங்கட்டும். பாஷை வெறி அந்தப் பாரதத்தைச் சிதைக்கா திருக்கட்டும்; ஒற்றுமை கொண்டு கலைவளர்ந்து வளம் பெருகிப் பேரும் புகழும் ஓங்கி நவ பாரதம் வாழ்வதாக!

★

TAMIL NADU ARCHIVES

5B
4-45